DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan, Broker
Joy H Selvanayagam, Broker
Homelife/Future Realty Inc., Brokerage

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Kailain Thillainathan, Sales Representative
Ragu Thillainathan, Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தலங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam, Broker
RE/MAX
Direct: 416-897-9155
Office: 416-221-0999

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள் பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam, Sales Representative
RE/MAX

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Affidavits for Immigration purposes;
More than 10 Years experience in the field of Canadian Immigration
Kokulan Baskaran
Tel : 647-344-6600

KANAGAAMBIKAI PAWN BROKERS
2613 Eglinton Ave, East, Scarborough, ON M1K 2S2, Canada
416 269 7198

MORTGAGE மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

25வது வெள்ளி விழா 2021
UTHAYAN
உதயன்
சிந்திக்கும் தமிழ் உலகின் உலகில் எதிர்க்கும் சக்தி மிக்க
$1.00
416-752-1524
416-752-6703
உதயம் 1306
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday April 16, 2021

# ரொரொன்ரோ பெரும்பாகத்தைச் சேர்ந்த 5 மத்திய பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றாரியோ முதல்வர் டக் போர்ட்க்கு அவசரக் கடிதம்

## ஸ்காபுறோவில் சில இடங்களில் தடுப்பூசி போடும் நடவடிக்கைகள் திடீரென மாகாண அரசாங்கத்தால் நிறுத்தப்பட்டது குறித்து ஏமாற்றம் அடைந்ததாக தெரிவிப்பு





ரொரொன்ரோ பெரும்பாகத்தைச் சேர்ந்தவர்களான 5 மத்திய பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றாரியோ முதல்வர் டக் போர்ட் அவர்களுக்கு அவசரக் கடிதம் ஒன்றை நேற்றை திகதியிட்டு எழுதியுள்ளனர். மேற்படி அவசரக் கடிதத்தில் கையொப்பமிட்டுள்ள ஸ்காபுறோ ரூஜ் பார்க் தொகுதி உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி, ஸ்காபுறோ வடக்கு உறுப்பினர் சோன் சென், ஸ்கா-புறோ கில்ட்வுட் உறுப்பினர் ஜோன் மெக்கே, ஸ்காபுறோ ஏஜின்கோர்ட் உறுப்பினர் ஜீன் யிப் மற்றும் ஸ்காபுறோ மத்திய தொகுதி உறுப்பினர் ஸல்மா ஸாஹிட் ஆகிய ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்களே இந்த அவசரக் கடிதத்தை எழுதியுள்ளனர்.

பல விபரங்கள் அடங்கிய இந்த கடிதத்தில் தாங்கள் ஐவரும் இந்ததடுப்பூசி நிலையங்கள் திடீரென மூடப்பட்டதால் அதிர்ச்சியடைந்துள்ளதாகவும், ஸ்காபறோ சுகாதார வலையமைப்பின் சென்ரினரி வளாகத்திலும் ஸ்காபறோ சென்றனியல் கல்லூரியின் புறோ-கிறஸ் வளாகத்திலும் இயங்கிவந்த தடுப்பூசி போடும் நடவடிக்கைகள் திடீரென நிறுத்தப்பட்டமை ஸ்காபுறோ மக்களின் உடல் நலனுக்கு ஒரு பாரதூரமான அச்சுறுத்தலாக அமைந்துள்ளதாகவும், அத்துடன் அதிக தேவை உள்ளோரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் விடயத்தில் தோல்வி ஏற்பட்டுள்ளதாக உணர்வதாகவும் இந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐவரும் தெரிவித்துள்ளார்கள்

மேற்படி கடிதத்தில் , கனடிய அரசு எவ்வாறு ஒன்றாரியோ மாகாணத்தின் அவசரத் தேவைகளைக் கவனித்து செயற்படுகின்றது என்பதை சுட்டிக்காட்டியுள்ள இந்த ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்களும் ஏப்ரல் மாதம் 14ம் திகதிய நிலவரப்படி கனேடிய அரசியடம் இருந்து ஒன்றாரியோ மாகாண அரசு மொத்தமாக 4,809,595 கோவிட்-19 தடுப்பூசிகளைப் பெற்றுள்ள விபரங்கள் தங்களுக்கு கிட்டியுள்ளதாகவும், இவ்வாறான சாதகமான நிலையிருந்தும், ஒன்றாரியோ அரசு மத்திய அரசு வழங்கிய தடுப்பூசிகளை முழுமையாக பயன்படுத்தாத நிலையில் தடுப்பூசி வழங்கும் நிலையங்களை திடீரென மூடியது ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்களும் தெரிவித்துள்ளனர்.

கோவிட் - நோய்த்தொற்று பரவும் இடங்களில் ஸ்காபுறோவில் பல இடங்கள் ஆபத்தான இடங்கள் என்று சுகாதாரப் பகுதியினரால் அடையாளம் இடப்பட்டு வி-சேட ஏற்பாடுகள் செய்யப்படுகின்ற நிலையில் ஒன்றாரியோ அரசாங்கம் இவ்வாறாக தடுப்பூசி போடும் நிலையங்களை திடீரென மூடியமை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும், எனவே மத்திய அரசானது தொடர்ந்து ஒன்றாரியோ அரசாங்கத்திற்கு போதிய ஆதரவை தருவதற்கு தயாராக இருக்கின்றபோது, மூடப்பட்டுள்ள தடுப்பூசி போடும் மையங்களை மீண்டும் உடனடியாக திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் படியும் அவர்கள் ஒன்றாரியோ மாகாண முதல்வர் டக் போர்ட் அவர்களை வேண்டியுள்ளனர்.

*(உள்ளே 3ம் பக்கத்தில் தொடர்ச்சி)*

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8
416.568.4301 , 905.471.4050


MONEY PROBLEMS?
உங்கள் அனைத்து கடன்களுக்குரிய கட்டணங்களை ஒரே சிறிய கட்டணமாக் எவ்வித வட்டியுமின்றிச் செலுத்த எம்மை நாடுங்கள்.
Direct Tamil Line (416) 489-2000
Visit GtaCredit.Com
North York * Scarborough * Mississauga * Brampton * Ajax

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7
905 272 1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905 794 4404

# HOUSE FOR SALE

39 Raithby cres, Ajax, Ont. I Detached,
All brick 4 Br, and less than 4 yrs old House
in heart of Ajax. $ 100K in updates.




## $959,900.00

CENTURY 21
People's Choice Realty Inc.

## Uthayan Markandu
Real Estate Broker







## Updates and Features

*Hardwood, and ceramic floors throughout.*
*Quartz countertops throughout.*
*Entrance to the garage from Kitchen*
*Garage door opener*
*36 foot wide lot*
*Updated Laundry room.*
*Electric fireplace in family room.*
*New Interlock.*
*No sidewalk with total of 5 car parking,*

## Services

- Selling your home for top value
- Free re-modeling
- Professional home staging
- Buying your dream home anywhere in Ontario
- Commercial and Residential Leasing
- Free market evaluation
- Full-time Real estate Broker.

Cell (416)818-5493
uthayan4realestate.com

# உதயன் கதிரோட்டம்

## புகலிடம் நாடி வருவோரை புன்னகையுடன் வரவேற்று வாழ்வு தந்த முத்தான முதல்நாடு கனடா தான்!

கடுமையான குளிர் காரணமாக பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் மக்கள் குடியேற விரும்பாத ஒரு நாடாக விளங்கிய கனடா என்னும் அற்புதமான நாடு தற்போது உலகெங்கும் வாழும் மக்கள் விருப்பத்துடன் வந்து விடத் துடிக்கும் நாடாக விளங்குகின்றது.

உலகில் வேறு நாடுகளில் இனரீதியாகவும் பால் ரீதியாகவும் மொழி ரீதியாகவும் நிறங்களின் அடிப்படையிலும் அடக்கி ஒடுக்கப்படும் மக்கள் அந்தந்த நாடுகளிலிருந்து வெளியேறி, வேறு நாடுகளை நோக்கி பயணங்களை மேற்கொண்டால், முதலில் அவர்களை அடையாளம் கண்டு, அபயம் அளித்து வரவேற்கும் நாடாக கனடா தேசம் பல ஆண்டுகளாக முதலிடத்தில் தன்னை தக்கவைத்துள்ளது. இவ்வாறாக ஈழத்தமிழர்களாகிய இலட்சக் கணக்கானவர்கள் தற்போது கனடாவை தங்கள் இரண்டாவது தாயகமாகக் கொண்டு மகிழ்ச்சியுடன் வாழ்ந்து வருகின்றார்கள். எந்த நாட்டில் வாழ முடியாது என்று எமது மக்கள் கனடாவிற்குள் நுழைந்தார்களோ, அந்த நாட்டு அரசாங்கங்கள் வியக்கும் வண்ணம் ஈழத்தமிழ் மக்கள் இங்கு பல்வேறு தளங்களில் உயர்ந்து நிற்கின்றனர். இது போலவே உலகில் ஏனைய பல நாடுகளிலிருந்தும் கனடாவிற்கு புகலிடம் தேடி வந்தவர்கள் தற்போது இந்த சுதந்திரமான தேசத்தில் புன்னகை மலரும் முகங்களோடு வீதிகளில் வலம் வருகின்றார்கள்.

பல காரணங்கள் நிமித்தம், உலகின் வேறு நாடுகளில் பல்வேறு அழுத்தங்கள் காரணமாக வாழ முடியாமல் அந்த நாடுகளிலிருந்து வெளியேறி, கனடாவை நோக்கி பயணித்தவர்கள் தகுந்த முறையில் வரவேற்கப்பட்டு உள்வாங்கப்பெற்று பின்னர் கனடாவின் பிரஜைகளாகவே மாறிவிட்டார்கள்.

ஆனாலும், அகதிகளாக வருபவர்கள் அனைவருமே இந்த நாட்டுக்கு விசுவாசமாக நடந்து கொள்பவர்களாக இருப்பதில்லை. குற்றச் செயல்கள், போதை வஸ்த்து கடத்தல், பாலியல் குற்றங்கள், அரசின் சலுகைகளை துஸ்பிரயோகம் செய்தல் போன்ற குற்றச் செயல்களினால் ஆயிரக்கணக்கானவர்கள் தங்கள் நாடுகளுக்கே திருப்பி அனுப்பப்பட்டார்கள். இந்த விடயங்களை அமெரிக்காவும் கனடாவும் இணைந்து கவனித்து நடவடிக்கைகளை எடுத்து வந்தன.

ஆனால் காலப் போக்கில் அமெரிக்கா ஊடாக அமெரிக்காவிலிருந்து கனடாவுக்குள் புகலிடம் கோருவோரைத் திருப்பி அமெரிக்காவிற்கே அனுப்புவதற்காக ஒட்டாவாவிற்கும் வாசிங்டனுக்கும் இடையிலான ஒரு ஒப்பந்தம் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களின் சாசனத்தை மீறுவதில்லை எனவும் அது தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும் என்றும் கனடாவின் மத்திய மேல்முறையீட்டு நீதிமன்றம் நீண்ட காலமாக அறிவித்துள்ளது

பாதுகாப்பான மூன்றாம் நாடு ஒப்பந்தம் வாழ்க்கை, சுதந்திரம் மற்றும் பாதுகாப்புக்கான அரசியலமைப்பு உத்தரவாதங்களை மீறுவதாக ஜூலை மாதம் அறிவித்தபோது கனடிய பெடரல் நீதிமன்றம் சட்டத்தை தவறாகப் புரிந்து கொண்டதாக வாதிட்ட மத்திய அரசின் மேல்முறையீட்டை நீதிமன்றம் அனுமதித்தது. இதனால் கனடாவில் தங்களுக்கு நல்ல எதிர்காலம் அமையும் என்று எதிர்பார்த்து வந்தவர்கள் தடுமாறிய வண்ணம் உள்ளார்கள்.

இது இவ்வாறிருக்க, கனேடிய அகதிகள் சட்டத்தரணிகள் பலர் இந்த அமெரிக்க கனடிய புகலிடம் ஒப்பந்தத்தை தீவிரமாக எதிர்த்துப் போராடி வருகின்றனர், அத்தடன் தங்கள் நாடுகளிலிருந்து துன்புறுத்தலிலிருந்து தப்பி அடைக்கலம் தேடிவரும் மக்களுக்கு அமெரிக்கா எப்போதும் ஒரு பாதுகாப்பான நாடு அல்ல என்றும் இந்த வகையில் கடனாவே சிறந்த நாடு என்றும் வாதிடுகின்றனர். இவ்வாறாக கனடிய அகதிகளுக்காக வாதாடும் சட்டத்தரணிகளே கேள்விகளை எழுப்பும் சட்டம் தொடர்பாக கனடா எதிர்காலத்தில் என்ன மாற்றங்களை கொண்டு வரப்போகின்றது என்பதையும் இங்கு புகலிடம் கோரி வருபவர்கள் சந்திக்கவுள்ள பிரச்சனைகள் என்ன என்பதையும் நாம் அறிந்து கொள்ள சில காலம் காத்திருக்க வேண்டும் என்பதே உண்மை.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## ரொரொன்ரோ பெரும்பாகத்தைச் சேர்ந்த 5 மத்திய பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றாரியோ முதல்வர் டக் போர்ட்க்கு அவசரக் கடிதம்

*முதலாம் பக்கத் தொடர்ச்சி...*

அன்புக்குரிய முதல்வர் ஃபோர்ட் அவர்கட்கு,

ஸ்காபறோவில் உள்ள ஐந்து தொகுதிகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நாம், ஸ்காபறோ சுகாதார வலையமைப்பின் சென்ரினரி வளாகத்திலும், சென்ரெனியல் கொலிஜின் புறோகிறஸ் வளாகத்திலும் தடுப்பூசி போடும் நடவடிக்கைகள் திடீரென நிறுத்தப்பட்டமையால் ஆழ்ந்த ஏமாற்றம் அடைந்துள்ளோம். இந்த நிலையங்கள் நியாயப்படுத்தப்படமுடியாத வகையில் மூடப்பட்டமையால், முதியோர், அத்தியாவசிய பணியாளர்கள், வெள்ளையரல்லாதோர், மற்றும் எமது சமூகத்தைச் சேர்ந்த நலிவடைந்தோர் என, நாளொன்றுக்குச் சுமார் இரண்டாயிரம் பேருக்குத் தடுப்பூசி போடும் சந்தர்ப்பம் இழக்கப்படுகிறது. இவை மூடப்படுவது ஸ்காபறோ மக்களின் உடல்நலனுக்கு ஒரு பாரதூரமான அச்சுறுத்தலாக அமைவதுடன், அதிக தேவை உள்ளோரின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் விடயத்தில் தோல்வி ஏற்பட்டதையும் காட்டுகிறது. ஏப்ரல் 14 ஆந் திகதி புதன்கிழமை நிலைவரப்படி, கனேடிய அரசிடம் இருந்து ஒன்றாரியோ மாகாண அரசு மொத்தமாக 4,809,595 மருந்தளவுகள் கோவிட்-19 தடுப்பூசிகளைப் பெற்றுள்ளது: 2,901,795 ஃபைசர் பையோன்ரெக், 1,007,000 மொடேர்னா, 900,800 அஸ்டற் ஸெனகா ஆனால், ஒன்றாரியோ மாகாண அரசு இன்றுவரை இவற்றில் 3,422,974 மருந்தளவை மட்டுமே விநியோகித்துள்ள் து. 10,000 பேருக்குத் தேவையான தடுப்பூசி மருந்தளவுகள் கிடைக்குமென ஸகாபறோ சுகாதார வலையமைபப்பு க்கு ஆரம்பத்தில் கூறப்பட்டு, பின்னர் இந்தத் தடுப்பூசி மருந்தளவுகள் ஏன் மறுக்கப்பபட்ட னவென விளக்கமளிக்குமாறு ஒன்றாரியோ மாகாண அரசிடம் நாம் கோருகிறோம். இந்தத் திடீர் மாற்றம் எமது தொகுதி மக்கள் பலருக்குக் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், ஒன்றாரியோ மாகாண அரசின் தடுப்பூசி வழங்கும் திடட் த்தின் மீதான நம்பிக்கையையும் குறைத்துள்ளது. ஸ்காபறோ சுகாதார வலையமைப்பில் உள்ள மூன்று மருத்துவமனைகளும் **(SHN Birchmount, SHN Centenary, and SHN General)** 630,000 இற்கும் மேற்பட்ட ஸ்காபறோ மக்களுக்குச் சேவையாற்றுவதுடன், ரொறன்றோ மாநகரத்தில் கோவிட்-19 காரணமாக மிக அதிக வீதமானோர் அனுமதிக்கப்பபட்ட வையாகவும் விளங்குகின்றன. இதனாலேயே, ஸ்காபறோவில் உள்ள 17 அஞ்சல் குறியீடுகளையும் முக்கியத்துவம் வழங்கப்படும் **"hot spot"** பகுதிகளாக ரொறன்றோ மாநகரம் பிரகடனம் செய்துள்ளது. ஒன்றாரியோவில் உளள் 515 அஞ்சல் குறியீடுகளில் கோவிட்-19 ஏற்பட்டோரின் விகிதம் குறித்து ஆய்வு செய்த **Institute for Clinical and Evaluative Sciences** ஒன்றாரியோ மக்களில் 100 பேரில் கோவிட்-19 தொற்றியோரின் அடிப்படையில் முதல் 60 இடங்களில் ஸ்காபறோவில் உள்ள 11 அஞ்சல் குறியீடுகள் அடங்குவதாகக் கூறியுள்ளது: ஆகையால், ஸ்காபறோ மக்களின் உடல்நலனுக்கும் பாதுகாப்புக்கும் பின்வரும் நடவடிக்கைகளை எடுக்குமாறு ஒன்றாரியோ மாகாண அரசிடம் நாம் கோருகிறோம்: 1) ஸ்காபறோ சுகாதார வலையமைப்புக்கு உறுதியளிக்கப்பட்ட 10,000 மருந்தளவுகள் தடுப்பூசிகள் ஏன் மறுகக் ப்பட்டனவெனத் தெளிவுபடுத்துவது, 2) ஸ்காபறோ சுகாதார வலையமைப்பு சென்ரினரி வளாகம், சென்ரெனியல் கல்லூரி புறோகிறஸ் வளாகம் ஆகியவற்றின் பாரிய தடுப்பூசி முகாம்களை உடனடியாக மீளத் திறப்பது, 3) ஸ்காபறோவில் உள்ள மூன்று மருத்துவமனைகளிலும் கோவிட்-19 காரணமாக அனுமதிக்கப்படுவோருக்குச் சிகிச்சையளிப்பதற்குத் தேவையான பணியாளர்களும், தனிநபர் பாதுகாப்பு அங்கிகளும், பராமரிப்பும் இருப்பதை உறுதி செய்வதற்கு ரொறன்றோ மாநகரத்துடனும், ஸ்காபறோ சுகாதார வலையமைப்புடனும் இணைந்து செயற்படுவது, 4) நலிவடைந்த சமூக உறுப்பினர்களுக்கு உதவியாக ஸ்காறோவில் மேலதிக தடுப்பூசி வழங்கும் இடங்களை அடையாளம் காணுவது. கனேடிய அரசு, கோவிட்-19 பரவலைக் குறைப்பதற்கு ஒன்றாரியோ மாகாண அரசுக்கு முழுமையான ஆதரவை வழங்கியுள்ளதுடன், அதைத் தொடர்ந்தும் வழங்கும். ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்டதை விட அதிகமான தடுப்பூசிகளை **M1M 3.47 / 10• M1E 3.47 / 100 • M1L 3.59 /100, • M1R 3.85 /100, • M1K 3.85 /100, • M1H 4.20 /100, • M1P 4.25 /100, • M1B 4.63 /100, • M1G 4.76/100, • M1J 5.03 /100, • M1X 6.05 /100, •** மாகாணங்களுக்கும், பிராந்தியங்களுக்கும் இதுவரை நாம் வழங்கியுள்ளதுடன், நாடு முழுவதும் பாதுகாப்பாகவும், செயற்திறனுள்ள வகையிலும் கோவிட்-19 தடுப்பூசிகள் போடப்படுவதை உறுதி செய்வதற்காக மாகாண மற்றும் பிராந்திய பங்காளிகளுடன் தொடர்ச்சியாகத் தொடரப்பிலும் இருக்கிறோம். அனைத்து மட்ட அரசுகளும் எமது சமூகத்தைப் பாதுகாப்பதற்குத் தேவையான அனைத்தையும் செய்வதை உறுதிப்படுத்துவதற்கு நாம் ஒத்துழைத்துச் செயற்படவேண்டுமென எமது தொகுதி மக்கள் எதிர்பார்க்கிறார்கள். ஸ்காபறோ மக்களுக்குப் போதுமானதும், சமத்துவமானதுமான அளவு கோவிட்-19 தடுப்பூசிகள் கிடைப்பதை உறுதி செய்வதற்கு உங்களுடன் நெருக்கமாகப் பணியாற்றுவதற்கு நாம் ஆர்வமாயிருக்கிறோம்.

இங்ஙனம் மிகவும் உண்மையுள்ள:-

*ஹரி ஆனந்தசங்கரி, சோன் சென், கௌரவ ஜோன் மக்கே, சல்மா சாகிட் மற்றும் ஜீன் யிப் ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்கள் (கையொப்பம் இட்டுள்ளவர்கள்).*

**COMPUTER REPAIR**

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

VARUNAN: (416) 894-6244

**HOUSE FOR RENT**

Neilson & Finch

சந்திப்பிற்கு அருகில்
3 bedroom house with 1.5 bathroom, & parking வாடகைக்கு உண்டு.
Steps away from bus stop & close to all other amenities.

Tel: (647) 927-2204

**BASEMENT FOR RENT**

FINCH & MORNINGSIDE

2 Bedroom bsmt for rent.
Sep entrance, laundry, kitchen
Close to TTC,
Working couple preferred
Avail: May 01/2021

Tel: (647) 581-2225

**ROOM FOR RENT**

KENNEDY & EGLINTON
McCowan & Sheppard

2 அறை கொண்ட தொடர் மாடிக் கட்டடத்தில் 1 water heater அறை வாடகைக்கு உண்டு. Close to Kennedy Subway & Rt (McCowan RT). Includes: Internet, TV, TP, Radio.
1 Person - $1000 2 people - $1200
(Tamil people)

தொடர்புகளுக்கு:
416-752-4444
416-857-5252

**தனி நபர் ஒருவருக்கு அறை தேவை**

மிசிசாகா அல்லது பிரம்ரன் நகரங்களில் ஒரு வீட்டில் அல்லது பேஸ்மண்ட் இல்
60 வயதுடைய தனி நபர் ஒருவர் வசிக்க அறை தேவை.
சாப்பாட்டுடன் அல்லது சாப்பாடு இல்லாமலும் விரும்பத்தக்கது.
இன்னொருவருடன் ஒரு அறையில் சேர்ந்தும் இருக்கலாம்.

தொடர்புகளுக்கு ராஜா:
(647) 787-2132

**முகாமையாளர் தேவை**

மிசிசாகா இந்து ஆலயத்திற்கு பகுதி நேர, முழுநேர முகாமையாளர் தேவை. தகைமை ஆங்கில அறிவும் கணனி அறிவு ஓரளவு தெரிந்திருக்கவேண்டும். தமிழ், சமயம் பற்றி தெரிந்தராக இருத்தல் வேண்டும். கடமை நேரத்தில் சமய ஆச்சாரமாக இருக்கவேண்டும். முகாமையாளருக்கான பயிற்சிகள் வழங்கப்படும். தங்குமிட வசதி தேவைப்படின் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: (647) 782-8060
(416) 455-8836

# இலங்கையில் புதன்கிழமைவரை 602 கொவிட் மரணங்கள் பதிவாகியுள்ளதாக, அறிவிக்கப்பட்டுள்ளது

இலங்கையில் கொவிட்-19 தொற்று தொடர்பான மேலும் 4 மரணங்கள் பதிவாகியுள்ளதாக, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன புதன்கிழமை உறுதிப்படுத்தியுள்ளதாக, அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் ஏற்கனவே 598 கொரோனா மரணங்கள் பதிவானதாக அறிவிக்கப்பட்ட நிலையில், தற்போது அறிவிக்கப்பட்டுள்ள 4 மரணங்களுடன், இலங்கையில் இதுவரை 602 கொவிட்-19 தொடர்பான மரணங்கள் பதிவாகியுள்ளதாக, சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார். இவ்வாறு மரணமடைந்தவர்களில் இருவர் நேற்றும் (12), இருவர் நேற்று முன்தினமும் (11) மரணமடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

599ஆவது மரணம்:

மஹரகம பிரதேசத்தைச் சேர்ந்த, 76 வயதான ஆண் ஒருவர், ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையில் இருந்து, மஹரகம புற்றுநோய் வைத்தியசாலைக்கும் அங்கிருந்து ஐனுர் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு, அங்கு மரணமடைந்துள்ளார். இவரது மரணம் நேற்று முன்தினம் (11) நிகழ்ந்துள்ளது. இவரது மரணத்திற்கான காரணம், கொவிட்-19 நியூமோனியா, உயர் இரத்த அழுத்தம், மாரடைப்பு, என அறிவிக்கப்பட்டுள்ளது.

600ஆவது மரணம்:

அக்குரஸ்ஸை பிரதேசத்தைச் சேர்ந்த, 71 வயதான பெண் ஒருவர், கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையில், கொவிட்-19 தொற்றாளராக அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து, ஐனுர் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு, அங்கு மரணமடைந்துள்ளார். இவரது மரணம் நேற்று (12) நிகழ்ந்துள்ளது. இவரது மரணத்திற்கான காரணம், குருதி விஷமடைவு அதிர்ச்சி, உக்கிர சிறுநீரக பிரச்சினை, நாட்பட்ட நீரிழிவு நிலை, உச்ச தைரொயிட் நிலை, குருதியில் கொலஸ்ட்ரோல் நிலை அதிகரிப்பு மற்றும் Bronchial Asthma (மூச்சுக்குழல் குறுகலடைவு) நிலை, என அறிவிக்கப்பட்டுள்ளது.

601ஆவது மரணம்:

நாராஹேன்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த, 74 வயதான பெண் ஒருவர், கொழும்பு தேசிய வைத்தியசாலையில், கொவிட்-19 தொற்றாளராக அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து, ஹோமாகம ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு, அங்கு மரணமடைந்துள்ளார். இவரது மரணம் நேற்று (12) நிகழ்ந்துள்ளது. இவரது மரணத்திற்கான காரணம், கொவிட்-19 தொற்று, நாட்பட்ட நுரையீரல் நோயுடன் குருதி விஷமடைவு, வலது நுரையீரலில் பிரச்சினை, என அறிவிக்கப்பட்டுள்ளது.

602ஆவது மரணம்:

காலி பிரதேசத்தைச் சேர்ந்த, 45 வயதான ஆண் ஒருவர், மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், கொவிட்-19 தொற்றாளராக அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து, ஐனுர் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு, அங்கு மரணமடைந்துள்ளார். இவரது மரணம் நேற்று முன்தினம் (11) நிகழ்ந்துள்ளது. இவரது மரணத்திற்கான காரணம், கொவிட்-19 உடன் இரத்தக் கசிவு மற்றும் இலுக்கேமியா நிலை, என அறிவிக்கப்பட்டுள்ளது.

# அமெரிக்கத்தலையீட்டை கேட்கிறோம்!! வவுனியா காணாமல் போனோரின் உறவுகள்



தமிழர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அமெரிக்காவின் தலையீட்டை பகிரங்கமாக அழைப்பதாக, வவுனியாவில் கடந்த 1515வது நாளாக தொடர்போராட்டம் மேற்கொள்ளும் காணாமல் போனவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

வருடப்பிறப்பான இன்று அவர்களால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் போதே இவ்வாறு தெரிவித்தனர். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்கள், 2009 முதல் காணாமல் ஆக்கப்பட்ட ஒரு குழந்தையை கூட நாங்கள் கண்டுபிடிக்க முடியவில்லை.

ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரம் பெற்றதிலிருந்து, இலங்கை அரசாங்கத்துடன் பேசுவதன் மூலம் எந்தவொரு தீர்வையும் காணமுடியாது என்பதை நாங்கள் நிச்சயமாகக் கண்டறிந்துள்ளோம். எந்தவொரு தீர்வையும் அடைய தமிழர்களுக்கு மூன்று தடுப்புக்கள் உள்ளன. முதலாவது புத்த மதகுருக்கள், இரண்டாவது சிங்கள அரசியல்வாதிகள், இறுதியாக சிங்களபொதுமக்கள், அவர்கள் எப்போதும் இனவெறி அரசியல்வாதிகளையே பதவிக்கு தேர்ந்தெடுக்கிறார்கள்.

பிப்ரவரி 2017 முதல், எங்கள் போராட்டத்தில் இலங்கையில் அமெரிக்காவின் ஈடுபாட்டைக் கேட்டு வருகிறோம். இலங்கைக்கான அமெரிக்க அழைப்பை பெரும்பாலான அரசியல்வாதிகள் மற்றும் தமிழ் சிந்தனையாளர்கள் அனைவரும் நிராகரித்தனர்.

இப்போது, அனைத்து தமிழ் அரசியல்வாதிகளும், சிந்தனையாளர்களும் ஐநாவில் (UNHRC) அமெரிக்காவின் தலையீடு முக்கியமானது என்பதை ஏற்றுக்கொள்கிறார்கள். எனவே அனைத்து தமிழ் அரசியல்வாதிகளும் தமிழர்களுக்கு அரசியல் ரீதியாக உதவவும், காணாமல் ஆக்கப்பட்ட எங்கள் அன்புக்குரியவர்களைக் கண்டுபிடிப்பதற்கும் அமெரிக்க உதவியை பகிரங்கமாக கேட்கக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். இந்த நாளில், சிங்கள இனப்படுகொலை மற்றும் ஒடுக்குமுறையிலிருந்து தமிழர்களை மீட்க அமெரிக்க உதவியை நாம் அனைவரும் கூட்டாக அழைக்கிறோம்.

இலங்கையில் அமெரிக்க தலையீட்டைக் கேட்டு, ஆயிரக்கணக்கான அமெரிக்க கொடிகளுடன் பொத்துவில் முதல் பொலிகண்டி வரை மற்றொரு பெரிய ஆர்ப்பாட்டம் தேவை என்பதை தமிழ் தலைவர்கள் உணரவேண்டும். இல்லையெனில், இந்த தமிழ் அரசியல் தலைவர்கள் தமிழர்களுக்கு அல்ல, மாறாக அவர்களின் சுகபோக நல்வாழ்வுக்கும் அவர்களின் அதிகாரத்துக்கும் மட்டமே. என்றனர்.




# Permanent Residency Will Be Granted to Over 90,000 Essential Temporary Workers and International Graduates in Canada

# கனடாவில் தங்கியுள்ள 90,000 அத்தியாவசிய தொழிலாளர்கள் மற்றும் சர்வதேச பட்டதாரிகள் நிரந்ததிர வதிவிட உரிமை பெறவுள்ளார்



கனடாவில் தற்போது தங்கியிருந்து சுகாதார சேவைகள், வைத்தியசாலைகள் போன்ற அத்தியாவசியமான துறைகளில் தற்காலிகமாகப் பணியாற்றும் வெளிநாட்டவர்கள் மற்றும் சர்வதேச பட்டதாரிகள் ஆகியோர் அடங்கிய 90,000 க்கும் அதிகமானவர்கள் விரைவில் கனடிய நிரந்தர குடியுரிமை பெறும் வண்ணம் அவர்களது விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படவுள்ளன. இந்த நடை முறையின் மூலம் கனடாவில் வைத்தியர்கள், தாதிகள், மற்றும் சுகாதார சேவையாளர்கள் போன்ற அத்தியாவசிய சேவைகளில் உள்ள வெற்றிடங்கள் அனைத்தும் நிரப் பெற்று தகுதியானவர்களுக்கு நிரந்தர குடியுரிமை வழங்கப்பட்டு அவர்கள் மேலும் சலுகைகளைப் பெறும் வண்ணம் நகர்த்தப்படுவார்கள்.

அத்துடன் சர்வதேச மாணவர்கள் என்ற வகையில் ஏற்கெனவே கனடாவில் தங்கியிருந்து தங்கள் கல்வியைத் தொடர்ந்து பட்டம் பெற்றவர்கள் அல்லது தற்போது தங்கள் பட்டப்படிப்பைத் தொடர்ந்து கொண்டிருப்பவர்கள் ஆகியோர் கூட நிரந்தர குடியுரிமைக்கு விண்ணப்பித்து கனடாவில் பல்வேறு துறைகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்பும் வண்ணம் அவர்களுக்கு சந்தர்ப்பங்கள் வழங்கப்படும்.

இந்த ஏற்பாடுகள் மற்றும் திட்டங்கள் மூலம் தகுதியும் ஆற்றலும் உடைய வெளிநாட்டவர்களுக்கு கனடாவில் நிரந்தரமாகத் தங்கியிருக்க அனுமதி கிடைக்கும் அதே வேளையில் அவர்கள் அனைவரும் கனடாவின் அத்தியாவசிய சேவைகளில் இணைந்து பணியாற்றி அதன் மூலம் தற்போதைய கோவிட்-19 அச்சுறுத்தலால் பாதிக்கப்பட்டுள்ள கனடியர்களுக்கு சேவையாற்ற சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது. மேலும் நிரந்தர குடியுரிமைப் பெறும் 90,000க்கும் அதிகமானவர்கள் கனடாவின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு உழைக்கும் சந்தர்ப்பத்தையும் அவர்கள் பெறுகின்றார்கள்", இவ்வாறு தெரிவித்தார் கனடாவின் குடிவரவு, அகதிகள் விவகாரங்கள் மற்றும் குடியுரிமை அமைச்சர் Honourable Marco E. L. Mendicino.

இன்று புதன்கிழமை 14ம் திகதி மதியத்திற்கு சற்று பின்னராக, கனடாவின் தலைநகரான ஒட்டாவாவிலிருந்து தொலைபேசி வாயிலாகவும் இணையவழி ஊடாகவும் கனடாவின் பல பகுதிகளிலும் இருந்து கலந்து கொண்ட குடிவரவு ஆலோசகர்கள், பல்கலைக் கழக விரிவுரிவையாளர்கள் மற்றும் ஊடகங்க நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் மத்தியில் உரையாற்றியபோது தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது, மிகுந்த உற்சாகத்தோடு பின்வரும் விபரங்களைத் தெரிவித்தார். "கடந்த வருடம் உலகின் பல நாடுகளையும் தாக்கிய கோவிட்-19 நோய்த் தொற்று காரணமாக உலக மக்கள் பலவகையிலும் பாதிக்கப்பட்டார்கள். பொருளாதார ரீதியாக நாடுகள் பாதிக்கப்பட்ட போதும் அந்தந்த நாடுகளில் வாழ்ந்த மக்களும் பாதிக்கப்பட்டார்கள். மறுபுறத்தில் மிகவும் அத்தியாவசிய சேவைகள் என்று கருதப்பட்ட வைத்தியர்கள், தாதிகள், ஏனைய சுகாதாரப் பணியாளர்கள் ஆகியோர் கனடாவில் அதிகளவில் தேவைப்பட்டார்கள். இது போன்று, உணவு தொடர்பான துறைகளிலும் வெற்றிடங்கள் ஏற்பட்டன.



அந்தத் வெற்றிடங்களை சமாளிக்க கனடாவிற்கு உயர் கல்வி பெறுவதற்காக விண்ணப்பித்து அனுமதி பெற்று வந்த சர்வதேச மாணவர்கள் எமக்கு உதவினார்கள். மிகவும் கஸ்டமான சூழ்நிலைகளில் இந்தப பிரிவினர் அனைவரும் கனடாவின் அவசியமான துறைகளில் தங்கள் பங்களிப்பை வழங்கினார்கள். எனவே அவர்களை நாம் கனடாவிற்குள் உள்வாங்குவதன் மூலம் எமது பொருளாதாரத்தையும் நாம் கட்டியெழுப்பலாம்.

இந்தத் துறைகளைப் போன்று நிர்மாணத்துறை வீதிகள் பாலங்கள் கட்டடங்கள் அமைத்தல் போன்ற பிரிவுகளிலும் பயிற்சி பெற்ற தொழிலாளர் ஆயிரக்கணக்கானவர்கள் தேவைப்படுகின்றார்கள். எனவே எமது இந்த புதிய குடிவரவு திட்டமானது வெளிநாட்டவர்கள் பலருக்கும் நன்மை தரும் இந்த வேளையில் எமது கனடாவின் வளர்ச்சிக்கும் அவர்கள் பங்களிப்பை வழங்கும் சந்தர்ப்பங்களை எமது அரசாங்கம் வழங்கவுள்ளது" என்றார்.

அமைச்சர் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும், போது பின்வருமாறு தெரிவித்தார். "எதிர்வரும் மேமாதம் 6ம் திகதி தொடக்கம் அமுலுக்கு வரவுள்ள இந்த புதிய குடிவரவு திட்ட அமுலாக்கமானது, எமது திணைக்களம் உள்வாங்கவுள்ள 90,000 க்கும் அதிகமானவர்கள் பின்வரும் வுகைக்குள்ளிருந்து தெர்ந்தெடுக்கப்பட வுள்ளார்கள்.

சுகாதார சேவைகள் போன்ற அத்தியாவசிய பிரிவுகளில் பணியாற்றும் வகையில் 20000 பேருக்கும் நிரந்தர குடியுரிமை வழங்கப்படும். எமது குடிவரவுத் திணைக்களத்தினால் வரையறுக்கப்பட்டுள்ள எனைய அத்தியாவசிய துறைகளில் உள்வாங்கப்படும் வகையில் மேலும் 30,000 பேருக்கும் நிரந்தர குடியுரிமை வழங்கப்படும் இந்த தொகையை விட கனடாவிற்கு உயர் கல்வி பெறுவதற்காக வந்து நான்கு வருட கல்வியை நெறியைப் பூர்த்தி செய்து பட்டம் பெற்ற சர்வதேச மாணவர்களிலிருந்து தகுதியான 40,000 பேர் கனடாவின் வேறு பல துறைகளில் பணியாற்ற சந்தர்ப்பம் வழங்கப்படும்." என்றார்.

# இலங்கை இந்திய மீனவர்களின் பிரச்சினைக்கு கடற்தொழில் அமைச்சர் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்



இந்திய மீனவர்கள் அத்து மீறி இலங்கை கடற்பரப்பில் நுழைந்து மீன் பிடிக்கும் நடவடிக்கைகளை ஏற்றுக் கொள்ள முடியாது. எனவே இலங்கை இந்திய மீனவர்களின் பிரச்சினைக்கு தீர்வை பெற்றுக்கொடுக்க கடற்தொழில் அமைச்சர் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் இன்று வியாழக்கிழமை (15) காலை இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் அவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், இந்திய மீனவர்கள் அத்து மீறி நுழைந்து இலங்கை கடற்பரப்பில் மீன் பிடியில் ஈடுபடும் நடவடிக்கைகள் தொடர்ந்து கொண்டு செல்கின்றது.

இதனால் எமது மீனவர்கள் பல்வேறு துன்பங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். போர்க் காலத்தின் போது எமது மீனவர்கள் குறுகிய கடல் பரப்பில் கடற் தொழிலில் ஈடுபட்டு வந்தனர்.

இவ்வாறான ஒரு பிரச்சினை உள்ள போது கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் ஒரு முயற்சியை மேற்கொண்டுள்ளதாக வெளிப்படையாக கூறியுள்ளார். இந்திய டேலர் படகுகள் உற்பட படகுகளுக்கு அனுமதி வழங்குவதாக தெரிவித்துள்ளார்.

எனினும் குறித்த விடையம் ஆராயப்பட வேண்டிய விடையம். வெளிப்படையாக இந்த விடையங்களை தெரிவிக்கின்ற போது தமிழ் நாட்டு மக்களுக்கும், எங்களுக்கும் இடையில் ஒரு முறுகல் நிலையை ஏற்படுத்தும் சூழ் நிலை காணப்படும். தமிழ் நாட்டை பொறுத்த வகையில் எமது இனத்தின் பிரச்சினை சார்பாக பலர் தீக்குழித்து உள்ளனர்.

- பலர் தற்கொலை செய்துள்ளனர். தமிழ் நாட்டு மக்கள் பல்வேறு போராட்டங்களை முன் னெடுத்துள்ளனர். அந்த வகையிலே எமது இனப்பிரச்சினைக்கு அவர்களின் குரல் இன்றியமையாதது.

- இவ்வாறு எமது தமிழ் நாட்டு மக்கள் எமது இனத்திற்கு குரல் கொடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில் தீர்க்கப் போவதாக கூறுகின்ற இந்த சிறிய விடையங்களை கூறுகின்ற போது இரு தரப்புக்களும் கருத்துக்களையும் தெரிவிக்கின்ற போது இரு சமூகத்திற்கு இடையிலும் ஒரு பிரச்சினை ஏற்படுவதற்கான வாய்ப்பு ஏற்படும். எனவே இந்திய இலங்கை மீனவர்களின் பிரச்சினை தொடர்பாக கடற்தொழில் அமைச்சர் சிந்திக்க வேண்டும்.

ஆழ் கடல் மீன் பிடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது தொடர்பில் இந்திய அரசுடன் பேசி இரண்டு தரப்பு மீனவர்களுக்கும் உரிய வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இதனால் எல்லை தாண்டி வருகின்ற, மீன் பிடிக்கின்ற பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக் கொள்ள முடியும்.

- இந்திய மீனவர்கள் அத்து மீறி இலங்கை கடற்பரப்பில் நுழைந்து மீன் பிடிக்கும் நடவடிக்கைகளை ஏற்றுக் கொள்ள முடியாது. மன்னார் கடற் பிராந்தியத்தில் உள்ள பவளப் பாறைகள் இந்திய இலுவைப்படகுகளினால் அழிக்கப் படுகின்றது.

மீன் உற்பத்தியாகும் இடமாக குறித்த பாறைகள் உள்ள நிலையில் அவை அழிக்கப்படுகின்றது. எனவே இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பகுதியில் நுழைந்து மீன் பிடியில் ஈடுபடுவதை தவிர்த்துக் கொள்ள ஆழ் கடல் மீன் பிடி நடவடிக்கைகளை ஊக்குவிப்பது சிறந்ததாக அமையும்.

- இரண்டு சமூகங்களுக்கு இடையிலும் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்ற நடவடிக்கைகளில் யாரும் ஈடுபடுத்தக்கூடாது. என தெரிவித்தார்.

**- மன்னார் நிருபர் (15-04-2021)**

# பொருட்களின் விலை அதிகரிப்பால் வசீகரன் இழந்த வருடப் பிறப்பு



புத்தாண்டு கொண்டாட்டங்களுக்கான ஏற்பாடுகள் நாடளாவியரீதியில் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் மன்னார் மாவட்டத்தில் வீதிகள் வெறிசோடிய நிலையிலும் வர்தக நிலையங்கள் மக்கள் வரவும் இன்றி காணப்படுவதை அவதானிக்க கூடியதாக உள்ளது.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா பரவல் காரணமாக ஒழுங்கான வேலை வாய்ப்புகள் மற்றும் மீன் பிடி நடவடிக்கைகள் மந்தமான நிலையில் காணப்படுவதாலும் பொருட்களின் விலை அதிகரித்து காணப்படுவதாலும் இம் முறை மக்கள் புத்தாண்டு கொண்டாட்டங்களில் ஈடுபடுவதை மன்னார் மாவட்ட மக்கள் பெரும்பாலும் தவிர்த்துள்ளனர்.

அதே நேரத்தில் இம்முறை விவசாய செய்கையிலும் விவசாயிகளுக்கு நிர்ணய விலை இன்மையால் பல்வேறு பதிப்புக்கள் மத்தியில் மன்னார் மக்கள் புத்தாண்டு கொண்டாட்டங்களில் அதிகம் ஆர்வம் காண்பிக்கவில்லை.

புத்தாண்டு கொண்டாட்டங்களுக்கு என அதிக அளவு மக்களின் வரவை தாங்கள் எதிர்பார்த்த பொதிலும் மக்களின் வரவு குறைந்து காணப்படுவதால் பெரும் சிரமத்திற்கும் நஸ்ரத்துக்கும் உள்ளாகியுள்ளதாக மன்னார் மாவட்ட வர்தகர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

**- மன்னார் நிருபர் (14-04-2021)**

# மணிவண்ணன் ஏன் கைது செய்யப்பட்டார்? ஏன் விடுவிக்கப்பட்டார்?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**



"அனந்தி தேர்தலில் முதல்முறையாக போட்டியிட்டபோது ராணுவம் அவரது வீட்டில் தாக்குதல் நடத்தியது ஞாபகம் வருகிறது......"

இவ்வாறு தனது முகநூல் பக்கத்தில் எழுதியிருப்பவர் டாண் டிவியின் அதிபர் குகநாதன். முக்கியமான அரசியல் விவகாரங்களின்போது கொடுப்புக்குள் சிரித்தபடி அவர் இவ்வாறு தெரிவிக்கும் பூடகமான கருத்துக்களில் பல அர்த்தங்கள் மறைந்திருப்பதுண்டு. மேற்கண்டவாறு அவர் பதிவிட்டது மணிவண்ணன் கைது செய்யப்பட்ட அன்று. இதன் மூலம் அவர் என்ன கூற வருகிறார்? மணிவண்ணனை கைது செய்ததன்மூலம் இலங்கை அரசாங்கம் அவருடைய இமேஜை உயர்த்தி இருக்கிறது. இது எதிர்காலத்தில் மாகாண சபை தேர்தலில் சில தரப்புக்கள் அவரை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்துவதற்கு தேவையான அடிப்படைகளை உருவாக்கிக் கொடுக்கும் என்ற பொருள்பட அவர் அவ்வாறு கூறி இருக்கிறாரா? அதாவது மணிவண்ணனின் பிம்பத்தை உயர்த்த அரசாங்கம் விரும்புகிறது என்று பொருள்.

இருக்கலாம் ஆனால் மணிவண்ணன் கைது செய்யப்பட்டமை என்பது அரசாங்கம் வேண்டுமென்றே திட்டமிட்டு மேற்கொண்ட ஒரு நடவடிக்கையா? என்ற கேள்விக்கு விடை இங்கு முக்கியம்.

அது ஒரு நாடகம் என்று எடுத்துக் கொண்டால் அந்த நாடகத்துக்கு எதிர்வினை ஆற்றிய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏனைய சிங்கள கட்சிகளை சேர்ந்த அரசியல்வாதிகள் புலம்பெயர்ந்த தமிழர்கள் வாழும் நாடுகளில் உள்ள தமிழ் அரசியல்வாதிகள் மற்றும் வெள்ளைக்கார அரசியல்வாதிகள் அரசியல் செயற்பாட்டாளர்கள் அதிலும் குறிப்பாக அமெரிக்க கண்டத்தை சேர்ந்த சில மாநகர சபைகளின் வெள்ளைகார முதல்வர்கள் இவர்களோடு இலங்கையிலுள்ள அமெரிக்க தூதுவர் உட்பட ராஜதந்திரிகள் போன்ற அனைவரும் இதுவிடயத்தில் கருத்துக் கூறப்போய் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள் என்று எடுத்துக்கொள்ளலாமா?

அல்லது மணிவண்ணனின் விவகாரத்தை அரசாங்கம் இலேசாக எடுத்துக் கொண்டு கைது செய்யப் போய் அதற்கு உலக அளவில் எதிர்வினை வந்ததும் இதற்குமேலும் அவரை உள்ளே வைத்திருந்தால் அது அவரின் இமேஜை உயர்த்தும் என்று கணித்து பிடித்த அன்றே அவரை விடுதலை செய்தது என்ற வாதம்தான் சரியா?

ஆனால் இந்த இடத்தில் மேலும் சில கேள்விகளை எழுப்ப வேண்டும். மணிவண்ணனின் இமேஜை உயர்த்துவதால் யார் யாருக்கு லாபம்? அரசாங்கத்துக்கு இதில் என்ன லாபம்? அவர் எதிர்காலத்தில் வட மாகாண முதலமைச்சர் வேட்பாளராக முன்னிறுத்தப்படுவதால் அரசாங்கம் என்ன நன்மை அடையும்? அல்லது இக்கேள்வியை மறுவளமாகக் கேட்கலாம் அவரை அவ்வாறு முதலமைச்சர் வேட்பாளராக முன்நிறுத்த எந்த தரப்பு தயார்?

கடந்த ஞாயிற்றுக்கிழமை என்னை பேட்டி கண்ட கப்பிட்டல் டிவியின் ஊடகவியலாளர்கள் இதுதொடர்பில் ஒரு கேள்வி கேட்டார்கள். உத்தியோகபற்றற்ற தகவல்களை நம்பி ஆய்வுகளைச் செய்ய முடியாது என்று அவர்களுக்குச் சொன்னேன். மணிவண்ணனை அவ்வாறு முதலமைச்சர் வேட்பாளராக தெரிந்தெடுக்கப்போவதாக தாங்கள் எங்கேயும் உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை என்று விக்னேஸ்வரனின் கட்சியைச் சேர்ந்தவர்கள் கூறுகிறார்கள். அதேசமயம் சுமந்திரன் அணியே அவரை அவ்வாறு முன்நிறுத்த முயற்சிகிறார் என்ற ஒரு ஊகம் யாழ்பாணத்திலும் கொழும்பிலும் பரவலாக உண்டு.

சுமந்திரனுக்கும் மாவைக்கும் இடையிலான பனிப்போரின் பின்னணியிலேயே இவ்வாறான ஊகங்கள் வெளிக் கிளம்புகின்றன. அடுத்த முதலமைச்சர் வேட்பாளராக மாவை நிற்பதை தடுக்கும் நோக்கத்தோடு சுமந்திரன் அவ்வாறு ஒரு பொது வேட்பாளரை முன்னிறுத்த முயற்சிப்பதாக ஊடகங்கள் ஊகிக்கின்றன. ஏற்கனவே சுமந்திரன் ஒரு ஓய்வு பெற்ற அரச அதிபரை அவ்வாறு முன்னிறுத்த யோசித்திருந்ததாக தகவல்கள் வெளிவந்தன.

கடந்த நாடாளுமன்ற தேர்தல் முடிவுகளில் மாவை தோற்றதும் அவருடைய இடத்தை பிடிப்பதற்கு சுமந்திரனும் சிறிதரனும் முயற்சித்தார்கள். கூட்டமைப்பின் நியமன உறுப்பினர் விடயத்திலும் கலையரசனை தெரிவு செய்ததன்மூலம் சுமந்திரன் மாவையை மிகவும் சாதுரியமாக ஓரங்கட்டினார். அதற்கு பின்னரும் சுமந்திரன் மாவையை ஓரம் கட்டும் விதத்தில் நுட்பமாக காய்களை நகர்த்தினார். மாவை கூடும் கூட்டங்களில் சுமந்திரனும் போய்க் குந்திக்கொண்டிருந்தார். இதுவிடயத்தில் மாவையை விடவும் சுமந்திரனிடம் தந்திரங்களும் நெளிவு சுளிவுகளும் தலைமைத்துவப் பண்பும் ஒப்பீட்டளவில் அதிகம் என்பதை இங்கே சுட்டிக்காட்ட வேண்டும்.

ஆனாலும் சுமந்திரன் திட்டமிட்டது போல மாவையை முழுவதுமாக ஓரங்கட்ட முடியவில்லை. சுமந்திரனின் நகர்வுகளுக்கு பின்னரும் மாவை ஒப்பீட்டளவில் பலமாகவே காணப்படுகிறார். அதற்கு காரணம் மாவையின் தலைமைத்துவ பண்பு அல்ல. அவரிடம் அப்படி ஒன்றும் கிடையாது. மாவை தமிழரசுக் கட்சியின் தலைவராக நீடித்திருப்பது என்பது முதலாவதாக அக்கட்சியின் பாரம்பரியத்தின் பாற்பட்டது எனலாம். இரண்டாவதாக மாவையின் மூப்பின் அடிப்படையிலானது எனலாம். மூன்றாவதாக அவர் தொடர்ச்சியாக நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து வந்ததும் ஒரு காரணம். ஆனால் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அவர் தோல்வியுற்றதும் அவருடைய பதவி ஆட்டம் காணத் தொடங்கியது. ஏனென்றால் மாவை என்றைக்குமே தனது தலைமைத்துவ பண்பை நிரூபித்திருக்கவில்லை. கடந்த வடமாகாண சபைத் தேர்தலின்போது மாவை இருக்கத்தக்கதாக சம்பந்தர் விக்னேஸ்வரனை உள்ளிறக்கியதும் அதனால்தான். தனது நிலைப்பாட்டை நியாயப்படுத்த சம்பந்தர் அதிக நேரம் பாடுபட்டார். மாவையை ஓரங்கட்டி விக்னேஸ்வரன் உள்ளிறக்கப்பட்டமை என்பது மாவையின் சொந்தக் கட்சியே அவரிடம் தலைமைத்துவ பண்பு இல்லை என்று நம்புவதைக் காட்டவில்லையா?

அந்த நிலைமை இப்பொழுதும் உண்டு. ஆனாலும் எல்லாரையும் அரவணைத்துப் போகும் சுபாவம் மாவையை பாதுகாத்தது. சுமந்திரனை குறித்து கட்சிக்குள்ளேயே ஏற்பட்ட அதிருப்தி அவருக்கு அணியைத் திரட்டி கொடுத்தது. கட்சியின் தோல்விக்கு சுமந்திரன் காரணம் என்று கருதியவர்களும் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியுற்றவர்களும் அவரோடு அணி சேர்ந்தார்கள். இவை எல்லாவற்றுக்கும் அப்பால் தமிழரசுக்கட்சியின் மிகப் பலமான அடித்தளம்தான் மாவையின் பலம். பல தசாப்தகால பாரம்பரியத்தை கொண்ட ஒரு கட்சி என்ற அடிப்படையில் அதன் தலைவராக அவர் தொடர்ந்தும் தன்னை பாதுகாத்துக் கொள்ளக் கூடியதாக இருக்கிறது. அவரிடம் தலைமைத்துவப் பண்பு இல்லை என்ற போதிலும் கட்சியின் பலம் அவரை பாதுகாக்கின்றது. அதுதான் சுமந்திரனுக்கும் பிரச்சினை. சுமந்திரன் அவர் நினைத்தபடி பாவையை வெட்டி ஓட முடியாதிருக்கிறது. வரக்கூடிய மாகாணசபைத் தேர்தலிலும் சுமந்திரன் தனது விருப்பங்களை நிறைவேற்ற அதுதான் தடையும்.

அதனால்தான் சுமந்திரன் வெளியிலிருந்து பொது வேட்பாளர்களை கொண்டுவர முயற்சிப்பதாக ஒரு ஊகம் பரவலாக நிலவுகிறது. ஆனால் இது விடயத்தில் சுமந்திரனால் விக்னேஸ்வரனை கூட்டுச்சேர்க்க முடியும் என்று தோன்றவில்லை. ஒரு முதலமைச்சராக வரும் தகுதி மாவைக்கிருப்பதாகக் விக்னேஸ்வரன் கருதவில்லை. ஆனால் அதற்காக சுமந்திரனின் பொது வேட்பாளரை அவர் ஏற்றுகொள்வார் என்று எங்கேயும் வெளிப்படையாகக் கூறியிருக்கவில்லை. கூட்டமைப்புக்கு உள்ளேயும் குறிப்பாக தமிழரசுக் கட்சியைச் சேர்ந்தவர்கள் அவ்வாறு வெளியிலிருந்து ஒரு வேட்பாளரை இறக்க ஒப்புக் கொள்வார்களா என்று தெரியவில்லை. எனவே சுமந்திரன் திட்டமிடுவது போல கட்சிக்கு வெளியிலிருந்து ஒருவரை முதலமைச்சர் வேட்பாளராக இறக்குவதற்கு தமிழரசுக் கட்சியோ அல்லது கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளோ ஒத்துக்கொள்ளுமா என்பது சந்தேகமே.

எனவே மணிவண்ணனை கைது செய்த அன்றே அரசாங்கம் விடுவித்ததை வைத்தும் சுமந்திரன் தலைமையிலான வழக்கறிஞர்கள் அவரை பிணையில் விடுவித்தமை என்பதை வைத்தும் கூட்டிக் கழித்து ஒரு கணக்குப் போட்டு அடுத்த மாகாணசபை தேர்தலோடு அக்கணக்கின் முடிவை முடிச்சுப் போடுவது என்பது காலத்தால் முந்தியது பொருத்தமற்றது என்றே இப்பொழுது தோன்றுகிறது.

அரசாங்கம் தனது தனிச்சிங்கள வாக்காளர்களை திருப்திப்படுத்தும் நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் மணிவண்ணனை கைது செய்தது. ஆனால் நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் அதற்கு வந்த எதிர்ப்பை கண்டு அரசாங்கம் தன் முடிவை மாற்றியிருக்கலாம். மேலும் அவருக்கு எதிரான குற்றச்சாட்டு பலவீனமானது என்று அரசாங்கம் கருதியிருக்கலாம். எனவே இது விடயத்தில் மணிவண்ணனை விடுவிக்கக்கோரி நாட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் இருந்து வந்த கோரிக்கைகளை கூட்டிக் கழித்துப் பார்த்த அரசாங்கம் இதன்மூலம் மணிவண்ணனின் இமேஜ் மேலும் உயரலாம் என்று கருதி அவரை பிடித்த அன்றே விடுதலை செய்திருக்கலாம். அவரை விடுவிப்பது என்று தீர்மானித்ததின் அடிப்படையில் அவர்மீது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடுக்காமலும் விட்டிருக்கலாம்.கடந்த 12 ஆண்டு கால தமிழ் மிதவாத அரசியல் பரப்பில் மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட ஒருவர் இவ்வாறு கைது செய்யப்பட்டமை இதுதான் முதற்தடவை. இதன்மூலம் மணிவண்ணனின் செல்வாக்கு அதிகரித்திருக்கிறது என்பதே சரி.அவரை கைது செய்யப் போய் அரசாங்கம் அவரை பலப்படுத்தி இருக்கிறது என்பதே உண்மை. அதுதான் மற்றவர்கள் அதை வைத்து ஊகிப்பதற்கு அடிப்படையாகவும் காணப்படுகிறது.



TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

| | |
|---|---|
| எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல் | All Pain & Aches, Arthritis Asthma, Sinusitis, Rhinitis Allergies Stress, Migraine & All Types of Headaches Diabetes, Gastric Pain, Ulcer Menstruation Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9




# உலகில் வாழ்க்கைத்தரம், சமூக நீதி, விடயங்களில் சிறந்து விளங்கும் நாடுகளில் கனடா முதலிடம்

உலகில் வாழ்க்கைத்தரம், சமூக நீதி, பெண்கள் உரிமை என பல்வேறு விடயங்களில் சிறந்து விளங்கும் நாடுகளில் கனடா முதலிடத்தைப் பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எமது கனடா முதலிடத்தை அடைவதற்கு காரணங்கள் பல உள்ளன என்று சொல்லப்படுகின்ற இந்த நேரத்தில், சிறந்த நாடுகள் பட்டியலில் சுவிட்சர்லாந்தையே பின்னுக்குத் தள்ளி கனடா முதலிடத்தைப் பிடித்துள்ளது என்ற செய்தி கனடியர்களை மகிழ்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

2021ஆம் ஆண்டுக்கான சிறந்த நாடுகள் பட்டியல் வெளியாகியுள்ள நிலை-யில், முதல் முறையாக கனடா அந்த பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளது.

அமெரிக்க நிறுவனங்கள் பல இணைந்து ஆய்வு மேற்கொண்டு வெளியிடும் இந்த பட்டியலை தயாரிப்பதில், கொரோனாவால் உலகமே சுழற்றியடிக்கப்பட்ட நிலையிலும், அதையும் தாங்கி, தாண்டி, கலாச்சாரம், பொருளாதாரம், அரசி-யல் மற்றும் தொழில்நுட்பம் இவற்றுடன், பிரச்சினை ஏற்படும் நேரத்தில் எப்படி சீக்கிரம் அதை சமாளித்து எழுவது என்பது முதலான பல விடயங்கள் கருத்தில் கொள்ளப்பட்டன.

இப்படிப்பட்ட ஒரு சூழலில் அனைத்து பிரச்சினைகளையும் மேற்கொண்டு கனடா 2021ஆம் ஆண்டுக்கான சிறந்த நாடுகள் பட்டியலில் முதலிடத்தைப் பிடித்து சாதனை படைத்துள்ளது. ஏற்கனவே முதலிடத்தில் இருந்த சுவிட்சர்லாந்தை 4ஆவது இடத்துக்குத் தள்ளி பட்டியலில் கனடா முதலிடம் பிடிக்க, ஜப்பான் இரண்டாவது இடத்தையும், ஜேர்மனி மூன்றாவது இடத்தையும் பிடித்துள்ளன. அவுஸ்திரேலியா 5ஆவது இடத்தை தக்கவைத்துக்கொண்டுள்ளது, அமெரிக்கா 7ஆவது இடத்திலிருந்து முன்னேறி 6ஆவது இடத்துக்கு வந்துள்ளது.



# கனடாவில் கியுபெக்கில் இரத்தம் உறைதலுக்கு ஒரு நோயாளி உள்ளாகியுள்ளார் என்கிறது மாகாண சுகாதாரத் துறை

கனடாவில் கியுபெக் மாகாணத்தில் முதல் முறையாக பெண் ஒருவருக்கு இரத்தம் உறைதல் பிரச்சனை பதிவாகியுள்ளதாக மாகாண சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தற்போது மக்களுக்கு செலுத்தப்பட்டு வரும் நான்கு வகையான தடுப்பூசி வகைகளில், அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசி வகை செலுத்தப்பட்ட ஒருவருக்கே இந்த கனடாவில் அரிதான ஆனால் ஆபத்து நிறைந்த இரத்த உறைதல் பிரச்சனை முதல் முறையாக காணப்படுவதாகக் கூறப்படுகின்றது. கியூபெக்கின் சுகாதார மற்றும் சமூக சேவைகள் அமைச்சு மாகாணத்தில் ஒருவருக்கு குறித்த இரத்தம் உறைதல் பிரச்சனை ஏற்பட்டுள்ளதை உறுதிப்படுத்தியது. ஆனால், பாதிக்கப்பட்ட நபரின் வயது அல்லது ஆணா பெண்ணா என்ற விபரங்கள் உறுதிப்படுத்தவில்லை. இதனிடையே, கியூபெக் சுகாதார அமைச்சர் கிறிஸ்டியன் டுபே குறித்த நபர் ஒரு பெண்ணாக அடையாளம் காட்டினார். மட்டுமின்றி, பாதிக்கப்பட்ட அவர், தற்போது நலமாக இருப்பதாகவும், உரிய சிகிச்சை மேற்கொண்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.



எவ்வாறாயினும் இந்த விடயத்தை கியூபெக் மாகாணம் மிக நுணுக்கமாக கண்காணித்து வருவதாகவும், ஒவ்வாமை உள்ளிட்ட எந்த பக்கவிளைவுகள் தொடர்பிலும் மாகாணம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் எனவும் அவர் உறுதி அளித்துள்ளார். இரத்தம் உறைதல் பிரச்சனை ஏற்பட்டுள்ளதாக அடையாளம் காணப்பட்ட பெண் அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசியின் இந்திய தயாரிப்பான கோவிஷீல்ட் தடுப்பூசியை எடுத்துக் கொண்டவர் என்ற மேலதிக விபரம் தற்போது வெளியாகியுள்ளதாகவும் தெரிவிக்கிப்படுகின்றது.

# மேற்கு அவுஸ்திரேலியாவில் செரோஜா புயலால் ஆயிரக்கணக்கான வீடுகள் சேதமடைந்தன



மேற்கு அவுஸ்திரேலியாவை தாக்கிய செரோஜா எனும் சக்தி வாய்ந்த புயலால் ஆயிரக்கணக்கான வீடுகள் சேதமடைந்தன. இதனால் கரையோ-ரப் பகுதிகளில் வாழ்ந்த பல ஆயிரக் கணக்கான மக்கள் தங்கள் இயல்பு வாழ்க்கையிலிருந்து மிகுந்த கஸ்டங்களை அனுபவிப்பதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.



செரோஜா புயல் கரையைக் கடந்த போது, கல்பாரி, ஜெரால்டன் உள்ளிட்ட கடற்கரையோர ஊர்களில் மணிக்கு 170 கிலோ மீற்றர் வேகத்தில் சூறைக் காற்றுடன் கூடிய கனமழை பெய்தது. கனமழைக்கு தாக்குப்பிடிக்க முடியாமல் ஆயிரக்கணக்கான வீடுகள் சேதமடைந்தன. முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக புயல் பாதித்த பகுதிக-ளில் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டு, மீட்பு நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டுள்ளது. இதனிடையே, மேற்கு அவுஸ்திரேலியாவில் நிலைமை மிகவும் மோசமடைந்துள்ளதாக அந்நாட்டு பிரதமர் ஸ்கொட் மொரிசன் தெரிவித்துள்ளார்.

தென் கிழக்கு மாநிலங்களின் பல நகரங்களும் தொடர்ந்து சிவப்பு எச்சரிக்கை நி-லையில் வைக்கப்பட்டுள்ளன. இதனால் குடியிருப்பாளர்கள் பாதுகாப்பான இடத்தில் இருப்பதற்கு அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். இந்த புயலால் ஏற்பட்டிருக்கும் சேதங்கள் பற்றி முழுமையான விபரங்களை பெறுவதற்கு காலம் எடுத்துக்கொள்ளும் என்று அவசர சேவை நிறுவனங்கள் நேற்றுக் காலை தெரிவித்தன.

கடந்த மாதம் ஆறுகள் மற்றும் அணைகள் நிரம்பி கடந்த தசாப்தங்களில் இல்லாத மோசமான வெள்ள நிலையால் கிழக்கு அவுஸ்திரேலியாவில் சுமார் 18,000 மக்கள் இடம்பெயர்ந்தனர்.



# பிரேசிலின் புகழ்பெற்ற ரீடிமர் சிலையை விட உயரமான இயேசு கிறிஸ்து சிலை ஒன்று உருவாகிறது

பிரேசிலின் ரியோ டி ஜனிரோ-வில் உள்ள புகழ்பெற்ற ரீடிமர் சிலையை காட்டிலும் உயரமான இயேசு கிறிஸ்து சிலை ஒன்று பிரேசிலில் உருவாக்கப்பட்டு வருகிறது.

பிரேசிலின் என்காண்டாடு நகரில் 140 அடியில் இந்த சிலை உருவாக்கப்படவுள்ளது. இது உலகின் மூன்றாவது உயரமான இயேசு கிறிஸ்து சிலையாக இருக்கும்.

இந்த சிலையின் நிர்மாணம் 2019ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இயேசு கிறிஸ்துவின் தலை மற்றும் விரிந்த கைகள் கடந்த வாரம் உருவாக்கப்பட்டது. இந்த யோசனை அர்ரொல்டு கான்சாட்டி என்ற உள்ளூர் அரசியல்வாதி ஒருவரால் வழங்கப்பட்டது. அவர் கடந்த மார்ச் மாதம் கொவிட்-19 தொற்றால் உயிரிழந்தார். மூன்று இலட்சத்து ஐம்பதாயிரம் அமெரிக்க டொலர்கள் மதிப்பிலான இந்த சிலையின் நிர்மாணம் இந்த ஆண்டின் இறுதிக்குள் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கு தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் நன்கொடை வழங்கி வருவதா-கவும் இதனை நிர்மாணிக்கும் அமைப்பு தெரிவித்துள்ளது. ஒரு கையிலிருந்து மற்றொரு கை வரை இந்த சிலை 36 மீற்றர் அகலம் கொண்டது. மேலும் மார்பு பகுதியில் பார்வையாளர்கள் காணும் பகுதி உருவாக்கப்படும். இது தரையிலிருந்து 40 மீற்றர் உயரம் கொண்டது.

இந்தோனேசியாவின் சுலவேசியில் உள்ள பண்டு புராக்கே சிலை 52.55 மீற்றர் உயரம் கொண்டது. போலாந்தில் உள்ள ஹகிறிஸ்ட் த கிங்ஹ சிலை 52.5 மீற்றர் உயரம் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது.

புகழ்பெற்ற ரீடிமர் சிலையின் உயரம் 38 மீற்றர். இருப்பினும் உலகள-வில் டஜன் கணக்கான உயரமான பல சிலைகள் உள்ளன. அதில் கன்னி மேரி மற்றும் புத்தர் சிலைகளும் அடக்கம்.

# மில்லியன்கள் இறப்புகளுக்கும் மனித துயரங்களுக்கும் காரணமாகயிருந்தவர் ஹிட்லர் என்கிறார் இலங்கைக்கான ஜேர்மனியின் தூதுவர்

தனது ஆட்சிக் காலத்தில் உலகெங்கும் மக்களின் எதிர்ப்பைச் சம்பாதித்தவர் மறைந்த ஹிட்லர் என்றால் அது மிகையாகாது. மில்லியன் கணக்கானவர்களின் இறப்புகளிற்கும் மனித துயரங்களிற்கும் காரணமாகவிளங்கியவர் ஹிட்லர் அவர் அரசியல்வாதிகளிற்காக முன்னுதாரணம் இல்லை என இலங்கைக்கான ஜேர்மனியின் தூதுவர் ஹோல்ஹெர் சூபேர்ட் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச ஹிட்லராக மாறும் சாத்தியக்கூறுகள் குறித்து இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ள கருத்து குறித்து டுவிட்டரில் பதிவு செய்துள்ள கருத்திலேயே தூதுவர் இதனை தெரிவித்துள்ளார்.





அவர் இது குறித்து தெரிவித்துள்ளதாவது, இவ்வாறு கருத்து தெரிவிப்பவர்களிற்கு நான் ஒரு விடயத்தை நினைவுபடுத்த விரும்புகின்றேன் - மில்லியன் கணக்கான இறப்புகளுக்கும் கற்பனைக்கு அப்பாற்றபட்ட மனித துயரங்களுக்கும் விரக்திக்கும் காரணமாகயிருந்தவர் ஹிட்லர்.

எந்த அரசியல்வாதிக்கும் ஹிட்லர் நிச்சயமாக முன்மாதிரியில்லை என இலங்கைக்கான ஜேர்மனியின் தூதுவர் ஹோல்ஹெர் சூபேர்ட் குறிப்பிட்டுள்ளார் ஒரு சர்வாதிகாரி போன்று செயற்படுவார் என எதிர்பார்த்தே மக்கள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவிற்கு வாக்களித்தனர் என இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்திருந்தது .இங்கு குறிப்பிடத்தக்கது.

# புத்தரா-ஹிட்லரா யாருடைய வழி சிறந்தது? சிந்தியுங்கள் ஆட்சியாளர்களே!

**- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர்)**

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.
(குறள் எண் - 127, பால் - அறத்துப்பால், இயல் - இல்லறவியல்
அதிகாரம் - அடக்கம் உடைமை

*எதைக் காக்க முடியாதவரானாலும் நா ஒன்றையாவது காத்துக் கொள்ள வேண்டும். முடியாது போனால் சொல்குற்றத்தில் சிக்கித் துன்பப்படுவர்.*
*- பேராசிரியர் சாலமன் பாப்பையா*

------------------------


**த**னக்கு அமைச்சர் பதவியளித்து கௌரவப்படுத்திய அதிபரைப் புகழ்ந்து போகுமிடமெல்லாம் "போற்றி போற்றி" என்று கூறுவது பல நாடுகளில் இயல்பு. அந்தத் தலைவரை இந்திரன், சந்திரன் என்று வானுயரப் புகழ்ந்து தமது காரியங்களைச் சாதித்துக் கொள்வது அரசியல்வாதிகளுக்கு கைவந்த கலை.

அப்படியான புகழ்ச்சி பெரும்பாலும் மிகைப்படுத்தப்பட்ட ஒன்றாகவே இருக்கும். அது அந்த தலைவருக்கும் தெரியும். அதைத் தடுக்க மனமில்லாத அவர் அதை ரசித்து மகிழ்வார்.

இப்போது இலங்கையின் அமைச்சர் ஒருவர் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவை "ஹிட்லருக்கு" ஒப்பிட்டுக் கூறி பெரும் சர்ச்சையில் சிக்கியுள்ளார்.

இரண்டாம் உலகப் போர் காலத்தில் ஜெர்மனியின் சர்வாதிகாரியாக இருந்த ஹிட்லர் பல்லாயிரக்கணக்கான யூதர்களை படுகொலை செய்தது உலக வரலாற்றில் அழிக்க முடியாத கருப்பு பக்கங்கள்.

பாசிசத்தின் வெளிப்பாடான அந்தப் படுகொலைகளின் தாக்கம் இன்றளவும் உலகில் உள்ளது.



தற்போதைய ஜனாதிபதியும் போர்க் காலத்தில் பாதுகாப்புச் செயலராகவும் இருந்த கோத்தாபய ராஜபக்ச மீது பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அதில் போர்க் குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள், இன அழிப்பு போன்ற குற்றச்சாட்டுக்கள் அவர் மீதும் பல முன்னாள் மற்றும் இந்நாள் இராணுவ அதிகாரிகள் மீதும் வைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், கோத்தாபய ராஜபக்ச ஜெர்மனியின் பாசிச சர்வாதிகாரி ஹிட்லரைப் போல மாறி நாட்டை ஆட்சி செய்ய வேண்டுமென்று இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம கூறிய கருத்து கடுமையாக எதிர்மறை விமர்சனங்களை தோற்றுவித்துள்ளது.

கடந்த தங்கள்கிழமை கண்டியில் நடைபெற ஊடகச் சந்திப்பு ஒன்றில் திலும் அமுனுகம, ஜனாதிபதி ஹிட்லரைப் போல மாறுவார் என்று தானும் அவருக்கு வாக்களித்தவர்களும் எதிர்பார்த்திருப்பதாக உளறிக் கொட்டினார்.

அப்படியென்றால் கோத்தாபய ராஜபக்ச இன அழிப்பில் ஈடுபட வேண்டுமென்று அமைச்சரும், ஜனாதிபதிக்கு வாக்களித்தவர்களும் விரும்புகிறார்களா எனும் கேள்வியை தவிர்க்க முடியவில்லை. அல்லது ஹிட்லருக்கு நேர்ந்த கதி இப்போதைய ஜனாதிபதிக்கும் நேர வேண்டும் என்பது தான் அமைச்சரின் விருப்பமா? என்று சமூக ஊடகங்களில் மக்கள் தொடர்ச்சியாகக் கேள்விகளை எழுப்புகின்றனர்.



ஆனால் இதுவரை அமைச்சரின் கருத்தை ஜனாதிபதி கண்டித்ததாகத் தெரியவில்லை. அப்படியென்றால் அந்தக் கருத்தை அவர் ஏற்கிறாரா? எனவும் மக்கள் கேட்கின்றனர்.

அமைச்சர் சொன்ன சர்ச்சைக்குரிய கருத்து இது தான்:

"கோத்தாபய ராஜபக்ச அரச தலைவராகப் பதவியேற்றதன் பின்னர் ஸ்ரீலங்காவில் ஓரளவிற்கு சர்வாதிகார ஆட்சி நடக்கலாம் என்று மக்களும் அதேபோல மகாநாயக்க தேரர்களும் கருத்து வெளியிட்டு வந்திருந்தார்கள். அரச தலைவராக கோத்தாபய ராஜபக்ச ஆட்சியேற்று ஹிட்லரைப் போல மாறினாலும் பரவாயில்லை என்று குறிப்பிட்டிருந்தார்கள். இந்த நிலையில் மக்கள் தற்போது அரசாங்கம் மீது அதிருப்தி வெளியிட்டு வருகின்றனர். இதற்குக் காரணம் அவர் ஹிட்லரைப் போல மாறவில்லை என்பதே எனது கருத்தாகும். அவருக்கு வாக்களித்த 69 இலட்ச மக்கள் அவர் ஹிட்லரைப் போல ஓரளவுக்கேனும் செயற்பட வேண்டும் என எதிர்பார்த்த போதிலும் அவர் அப்படி செய்யவில்லை என்பதால் மக்கள் இன்று அதிருப்தியடைந்திருக்கின்றனர். ஜனாதிபதி ஒருமுறையாவது ஹிட்லரைப் போலச் செயற்பட வேண்டும்." எனக் குறிப்பிட்டிருந்தார்.

அமைச்சரின் பொறுப்பற்ற சர்ச்சைக்குரிய இந்தக் கருத்தை இலங்கைக்கான ஜெர்மனியத் தூதர் ஹோல்கர் சியூபர்ட் நறுக்கென்று டிவிட்டரில் கண்டித்துள்ளார்.

அடால்ப் ஹிட்லர் எந்தவொரு அரசியல்வாதிக்கான முன்னுதாரணமாக இருக்க முடியாது என அவர் தனது டிவிட்டரில் வலியுறுத்தியுள்ளார்.

"ஒரு ஹிட்லர்" இன்று இலங்கைக்கு நன்மை பயக்கும் என்று கூறப்படுவதை நான் கேள்வியுற்றேன். மில்லியன் கணக்கான உயிரிழப்புகள் மற்றும் கற்பனைக்கு அப்பாற்பட்ட மனித துன்பங்களுக்கும் விரக்திக்கும் அடோல்ப் ஹிட்லரே காரணம் என்ற விஷயத்தை நினைவூட்டுகிறேன். நிச்சயமாக எந்த அரசியல்வாதிக்கும் அவர் முன்மாதிரி இல்லை." என்று தனது டிவிட்டர் செய்தியில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவரது டிவீட் மிகவும் அர்த்தம் பொதிந்தது. அதில் முக்கியமாக கவனிக்கப்பட வேண்டிய வார்த்தைகள் மில்லியன் கணக்கான உயிரிழப்புகள் மற்றும் கற்பனைக்கு அப்பாற்பட்ட மனித துன்பங்களும் விரக்திகளும்". தூதர் சியூபர்ட் மிகவும் நாசூக்காக அதேவேளை மிகவும் அழுத்தமாக - போர்க்


Tweet
Ambassador Holger Seubert
I'm hearing claims that "a Hitler" could be beneficial to Sri Lanka today. Let me remind those voices that Adolf Hitler was responsible for human suffering and despair beyond imagination, with millions of deaths. Definitely no role model for any politician!

காலத்தில் நடைபெற்ற விஷயங்களைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவரது கருத்துக்கு பரந்துபட்ட ஆதரவு கிடைத்துள்ளது. அவரது டிவீட்டை ஏராளமானவர்கள் மீண்டும் டிவீட் செய்துள்ளனர்.

தூதர் சியூபர்ட்டின் ட்விட்டர் கருத்தை வரவேற்றுள்ள, இலங்கைக்கான கனேடியத் தூதர் டேவிட் மெக்கினன், "எனது ஜெர்மனிய சகாவின் வார்த்தைகள் புத்திசாலித்தனமானவை." எனக் குறிப்பிட்டுள்ளார்.

இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம, ஜனாதிபதி ஹிட்லராக இருக்க விரும்பவில்லை, ஆனால் அவர் ஒரு ஹிட்லராக மாற தள்ளப்படலாம் என்று எச்சரித்திருந்தார்.

"கண்டிப்பான" கோத்தாபய

தான் பாதுகாப்புச் செயலாளராக கடமையாற்றி காலத்தில் நிலவிய வன்முறை ஆட்சியைப் பேணுவதற்கான தனது தயார் நிலையை ஜனாதிபதி இந்த வருட ஆரம்பத்தில் பகிரங்கப்படுத்தியிருந்தார்.

"தங்களுக்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தேவையில்லை என்றும், பாதுகாப்பு செயலாளராக இருந்த கோத்தாபய ராஜபக்சவே தமக்கு வேண்டும் எனவும் சில பௌத்த பிக்குகள் என்னிடம் கூறுகின்றனர், என்னால் அதனைச் செய்ய முடியும்" என்று ஜனாதிபதி அம்பாறையில் இடம்பெற்ற நிகழ்வில் ஜனாதிபதி தெரிவித்தார்.

அதாவது அடக்கி ஒடுக்கி எந்தளவுக்கும் அழிவுகளை எதிர்கொண்டு நினைத்ததை தன்னால் சாதித்துக்காட்ட முடியும் என்று அவர் தெளிவாகவே கூறியிருந்தார். நாட்டின் ஜனாதிபதியாக தான் இருந்தாலும், தனக்குள் பாதுகாப்புச் செயலர் இன்னும் இருக்கிறார் என்பதே அவர் விடுத்த செய்தி.

பெத்த பிக்குகளின் ஆசிர்வாதம்

இந்த ஹிட்லர் விஷயம் ஒன்றும் இன்று திடீரென்று உதித்த கருத்து அல்ல. அமைதி, சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தைப் போதித்து, அதன்படி நடந்து நல்வழி காட்ட வேண்டிய பௌத்த குருமாரே இப்படிக் கூறுவது புத்த பகவானையே வருத்தமடையச் செய்யக் கூடும். புத்தபிரானின் கருத்துக்கள், உபதேசங்கள் மற்றும் அறிவுரைகளை வாசித்திருப்பவர்கள் "ஹிட்லர் கருத்தை" அவர் கண்டிப்பாக ஏற்க மாட்டார் என்பதில் உடன்படுவார்கள்.



அஸ்கிரிய பீடத்தின் அனுநாயக்க தேரர் வெண்டருவே உபாலி தேரர், கடந்த 2018ஆம் ஆண்டு முன்னாள் பாதுகாப்புச் செயலாளரின் பிறந்தநாள் விழாவில், இலங்கையின் அடுத்த நிர்வாகத் தலைவராக கோத்தாபய ராஜபக்ச தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர் ஒரு ஹிட்லராகி, நாட்டில் முறையான நிர்வாகத்தைப் பராமரிக்க வேண்டும் என அறிவுறுத்தியிருந்தார்.


"நீங்கள் ஒரு ஹிட்லர் என்று அழைக்கப்படுகிறீர்கள். எனவே அவர்கள் அழைப்பது போல் இறுதியாக ஒரு ஹிட்லராக மாறியாவது இந்த நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் என்பதை மகா சங்கம் உங்களுக்கு நினைவூட்டுகிறது" என்று வெண்டருவே உபாலி தேரர் தெரிவித்த விடயம் ஊடகங்களில் பரவலாகப் பேசப்பட்டது.

"இராணுவ ஆட்சியை ஏற்படுத்தியாவது இதைச் சரி செய்யுமாறு நான் மீண்டும் உங்களுக்கு நினைவூட்டுகிறேன்." என அஸ்கிரிய பீடத்தின் அனுநாயக்க தேரர் வலியுறுத்தியிருந்தார்.

வண. பௌத்த குருமார் எந்தளவுக்கு ஹிட்லரை அறிந்திருந்தனர் அல்லது அறியாமலிருந்தனர் என்பதற்கு இதை இவரின் கருத்தை ஒரு எடுத்தெளக்காட்டாகப் பார்க்கலாம்.

அதியுயர் பௌத்த பீடம் ஒன்றின் தலைவர் ஒருவர் மூன்றாண்டுகளுக்கு முன்னர் கூறியதை இப்போது நினைவு கூர்ந்து அமைச்சர் இப்போது "ஹிட்லர்" கருத்தைக் கூறியுள்ளாரா?

ஆட்சிக்கு வந்த புதிதில் தான் ஒரு வித்தியாசமான ஜனாதிபதி என்று கோத்தாபய காட்ட முயன்றார். பாரம்பரியமாக சிங்கள அரசியல் தலைவர்கள் அணியும் "பாலாமணி" உடையைத் தவிர்த்து கால்சராயும், சட்டையும், கோட்டும் சூட்டும் அணிந்து காட்சியளித்தார். தான் அனைவருக்குமான ஜனாதிபதி என்றும், அனைத்து சமூகத்தினருக்கும் பாதுகாவலராக இருப்பேன் என்றெல்லாம் தேர்தலின் போதும் அதற்கு பின்னரும் கூறி வந்தார். அவரது நடை, உடை, பாவனையில் சிறிது வித்தியாசத்தைக் காண முடிந்தது. இவர் சற்று மாற்றி யோசிக்கக் கூடியவர் என்று அனைவரையும் எண்ண வைத்தது.


Item 2: L.1/Rev.1 "Promoting reconciliation, accountability and human rights in Sri Lanka"

ஆனால் காலப் போக்கில் அது நீர்த்துப் போயிற்று. இலங்கை ஒரு சிங்கள பௌத்த நாடு என்று நாளாந்தம் கூறிவரும் ஆட்சியாளர்கள், புத்த பகவான் காட்டிய அகிம்சை பாதையில் செல்வார்களா அல்லது ஹிட்லர் காட்டிய அழிவுப் பாதையில் செல்வார்களா என்பதைக் காலம் கவனித்துக் கொண்டிருக்கிறது.

மஹிந்த ராஜபக்ச ஆட்சியின் போது பாதகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்சவின் கீழ் பாதுகாப்பு படையினர் செய்ததாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் குறித்த தகவல்களைச் சேகரிக்க, கடந்த மாதம், ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழு அங்கீகாரம் அளித்திருந்ததை யாவரும் அறிவர்.

# அதிவேக வீதியில் பரபரப்பை ஏற்படுத்திய வாகனம் செலுத்தியவர்கள் – ஆபத்தான முறையில் பயணித்த சிறுமிகள்!



தெற்கு அதிவேக வீதியில், வீதி நடைமுறைகளை மீறி இளைஞர்கள் நால்வர் வாகனத்தில் பயணித்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்த நிலையில், அதேபோன்ற சம்பவமொன்று தற்போது மன்னாரில் இடம்பெற்றுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் தெற்கு அதிவேக வீதியில், வீதி நடைமுறைகளை மீறி நால்வர் காரின் யன்னல்கள் வழியாக அமர்ந்து, விநோதமாக சென்ற நிலையில் குறித்த நால்வரையும் கண்டறியும் வகையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் தற்போது அவர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் இன்று செவ்வாய்க்கிழமை காலை மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில் தென்னிலங்கை பதிவைக்கொண்ட WP-CAC 9100 என்ற இலக்கமுடைய காரொன்று பயணித்த நிலையில் குறித்த காரின் ஜன்னல்கள் வழியாக இரண்டு சிறுமிகள் அமர்ந்து பயணித்துள்ளனர்.

இதனை அவ்வழியாக சென்ற ஊடகவியலாளர் ஒருவர் அவதானித்ததுடன் புகைப்படம் எடுத்து, மன்னார் பொலிஸ் நிலையை பொறுப்பதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ள நிலையில், உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றதா என்பதனை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

**- மன்னார் நிருபர் (14-04-2021)**

# மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் இடம் பெற்ற சித்திரைப் புத்தாண்டு சிறப்பு வழிபாடு!





தமிழ்-சிங்கள சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் உள்ள ஆலயங்களில் (14) புதன் கிழமை காலை முதல் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றது.

இந்த நிலையில் வரலாற்று சிறப்பு மிக்க மன்னார் மாவட்டத்தில் பாடல் பெற்ற திருத்தலமான மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்தில் இன்று புதன் கிழமை காலை 7.45 மணிக்கு சிறப்பு வழிபாடுகள் இடம் பெற்றது.

பிலவு வருட சிறப்பு பூஜையினை ஆலயத்தின் பிரதமகுரு சிவஸ்ரீ கருணாநந்த குருக்கள் நடாத்தி வைத்தார். சுபவேளையில் விசேட அபிசேகம் நடாத்தப்பட்டடு தொடர்ந்து விசேட பூஜைகள் நடைபெற்றன.

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கு வருகை தந்த பக்தர்களும் மருத்து நீர் தேய்த்து வழிபாடுகளை முன்னெடுத்தனர்.

தமிழ் - சிங்ள சித்திரைப்புத்தாண்டை முன்னிட்டு நடாத்தப்பட்ட சிறப்பு வழிபாட்டின் போது நாட்டில் நீண்ட சாந்தியும் சமாதானமும் நிலவவும் கொரோனா அச்சுறுத்தல் நீங்கவும் வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது பிலவு வருட புத்தாண்டை முன்னிட்டு பக்தர்களுக்கு கைவிசேடம் வழங்கப்பட்டதுடன் ஆசிர்வாதமும் வழங்கப்பட்டது.கொரோனா தொற்று காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட



அளவில் பக்தர்கள் கலந்து கொண்டதோடு, சுகாதார நடைமுறைகளுடன் புத்தாண்டு சிறப்பு பூஜைகள் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர் (14-04-2021)**



# வேறு நாடுகளிலிருந்து அமெரிக்கா ஊடாக கனடாவிற்கு புகலிடம் கோரி வருபவர்களை திருப்பி அனுப்பும் சாசனம் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும் என கனடாவின் மேன் முறையீட்டு நீதி மன்றம் அறிவித்துள்ளது




உலகின் வேறு நாடுகளில் பல்வேறு அழுத்தங்கள் காரணமாக வாழ முடியாமல் அந்த நாடுகளிலிருந்து வெளியேறி, அமெரிக்கா ஊடாக அமெரிக்காவிலிருந்து கனடாவுக்குள் புகலிடம் கோருவோரைத் திருப்பி அமெரிக்காவிற்கே அனுப்புவதற்காக ஒட்டாவாவிற்கும் வாஷிங்டனுக்கும் இடையிலான ஒரு ஒப்பந்தம் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களின் சாசனத்தை மீறுவதில்லை எனவும் அது தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும் என்றும் கனடாவின் மத்திய மேல்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

பாதுகாப்பான மூன்றாம் நாடு ஒப்பந்தம் வாழ்க்கை, சுதந்திரம் மற்றும் பாதுகாப்புக்கான அரசியலமைப்பு உத்தரவாதங்களை மீறுவதாக ஜூலை மாதம் அறிவித்தபோது கனடிய பெடரல் நீதிமன்றம் சட்டத்தை தவறாகப் புரிந்து கொண்டதாக வாதிட்ட மத்திய அரசின் மேல்முறையீட்டை நீதிமன்றம் அனுமதித்தது. பாதுகாப்பான மூன்றாம் நாடு ஒப்பந்தத்தை பாதுகாக்க கனடா மீண்டும் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தது அகதிகளுக்கான கனேடிய கவுன்சில், அம்னஸ்டி இன்டர்நேஷனல் மற்றும் கனேடிய தேவாலயங்கள் கவுன்சில் போன்றவை நீதிமன்றத்தில் ஒப்பந்தத்திற்கு எதிராக வாதிட்டன, கனடாவின் உச்சநீதிமன்றத்தில் இன்றைய தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்ய காலத்தை கோரலாம்.என்றும் கூறப்பட்டது.

2004 ல் நடைமுறைக்கு வந்த இருதரப்பு ஒப்பந்தத்தின் கீழ், கனடாவும் அமெரிக்காவும் ஒருவருக்கொருவர் பாதுகாப்பைப் பெற தங்கள் நாடுகளைப் பாதுகாப்பான இடங்களாக அங்கீகரிக்கின்றன.




மேலும், பாதுகாப்பான மூன்றாம் நாடு ஒப்பந்தம் அரசியலமைப்பிற்கு முரணானது என்று தீர்ப்பளித்தது - அடுத்து என்ன நடக்கும் என்பது காட்டப்பட்டுள்ளது. இதன் பொருள் என்னவென்றால், கனடா - அமெரிக்கா எல்லையில் தரைவழியாக எல்லைகளுக்கோ அன்றி துறைமுகங்களுக்கு வரும் புகலிடம் கோரும் மக்களை கனடா திருப்பி விட முடியும். இதன் அடிப்படையில் அவர்கள் முதலில் வந்த நாட்டான அமெரிக்காவில் தங்கள் கோரிக்கைகளைத் தொடர வேண்டும். என்பதே இந்த சாசனத்தின் முடிவாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது இது இவ்வாறிருக்க, கனேடிய அகதிகள் சட்டத்தரணிகள் பலர் இந்த அமெரிக்கு கனடிய புகலிடம் ஒப்பந்தத்தை தீவிரமாக எதிர்த்துப் போராடி வருகின்றனர், அத்தடன் தங்கள் நாடுகளிலிருந்து துன்புறுத்தலிலிருந்து தப்பி அடைக்கலம் தேடிவரும் மக்களுக்கு அமெரிக்கா எப்போதும் ஒரு பாதுகாப்பான நாடு அல்ல என்றும் இந்த வகையில் கடனாவே சிறந்த நாடு என்றும் வாதிடுகின்றனர்.

இந்த சாசனத்தில் என்ன மாற்றங்கள் கொண்டுவரப்படவுள்ளன என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும்.

# சனாதிபதி கோட்டாபய ஆட்சிக்கு வந்தால் நாட்டில் தேனும் பாலும் ஓடும் என்ற மக்களின் எதிர்பார்ப்பு இன்று கனவாகி வருகிறது!

கனடா நக்கீரன்


ஒரு நாடு எவ்வாறு அமைய வேண்டும் என்பதை வள்ளுவர் விளக்குகிறார்.

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராது இயல்வது நாடு. (அதிகாரம்: நாடு குறள் எண்:734)

மிக்க பசியும், நீங்காத நோயும், நெருங்கி நிற்கும் பகையும் தன்னிடம் இல்லாது நடப்பதே நாடாகும். ஒரு நாட்டில் இவை இவை இருக்கலாகாது எனக் கூறவரும் வள்ளுவர் பசி, நோய், பகை ஆகியன இருந்தால் அது நாடாகாது என எதிர்மறை இயல்புகளைப் பட்டியலிடுகிறார்.

இலங்கைத் தீவு இன்று பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கிறது. ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது கொரோனா தொற்று நோய் கட்டுக்குள் இருந்தாலும் அந்த நோய் பொருள் உற்பத்தியை தாக்கியிருக்கிறது. மக்களின் அன்றாற வாழ்வை பாதித்திருக்கிறது. ஒரு காலத்தில் தேங்காய் எண்ணெய்யை ஏற்றுமதி செய்த நாடு இன்று அதனை இறக்குமதி செய்கிறது!

இலங்கைக்கு அந்நிய செலாவணியை தேடிக் கொடுக்கும் சுற்றுலாத்துறை பாதிக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் வேலையில் இருக்கும் தொழிலாளர்கள் தொற்று நோய் காரணமாக சொந்த நாட்டுக்குத் திரும்பி வந்து விட்டார்கள். இதனால் அவர்கள் மாதந்தோறும் அனுப்பும் அந்நிய செலாவணி வற்றி விட்டது.




எல்லாவற்றுக்கும் மேலாக சர்வதேசங்களிடம் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் இலங்கை வேந்தன் இராவணன் போல் கலங்குகிறது. கடனை அடைக்க மேலும் கடன் வாங்குகிறது. கடன் சுமையால் இலங்கைத் தீவு இந்து மகாபெருங்கடலில் மூழ்கிற ஆபத்து அதிகரித்து வருகிறது.

ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கு நான்கு அத்தியாவசிய கூறுகள் இருக்கின்றன. முதலீடு, உற்பத்தி, வாணிகம், மனிதவளம், பொருள் வளம் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாகும். பொருளாதார வளர்ச்சிக்கும் முதலீட்டுட்டுக்கும் நிறைய தொடர்புடையது. கருவிகள் மற்றும் இயந்திரங்கள் போன்ற உற்பத்தி சொத்துக்களில் முதலீடு செய்யும் போது உற்பத்தித் திறன் அதிகரிக்கிறது. வாணிகம் செல்வத்தை பெருக்குகிறது.

இலங்கை குறைந்த நடுத்தர வருமானம் கொண்ட நாடு. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தனிமனித வருமானம் அ.டொலர் 3,852 (2019) மட்டுமே. மொத்த மக்கள் தொகை 21.8 மில்லியன்.

இலங்கையுடனான ஆறு தசாப்தங்களுக்கும் மேலான தொடர்பை வைத்திருக்கும் உலக வங்கி குழுமம் இலங்கை வாணிகத்துறையில் இருக்கும் போட்டிக்கு ஈடுகொடுக்கவும், உள்ளடக்கம் மற்றும் நெகிழ்ச்சியான நாடாக மாறுவதற்கும் தொடர்ந்து ஆதரவளித்து வருகிறது.

இலங்கையின் தடையற்ற சந்தைப் பொருளாதாரம் 2019 ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 84 பில்லியன் டொலராகவும், வாங்கும் திறன் சமநிலை (பிபிபி) 296.959 பில்லியன் டொலராகவும் இருந்தது. 2003 முதல் 2012 வரை நாடு 6.4 விழுக்காடு ஆண்டு வளர்ச்சியை அடைந்திருந்தது, இது அதன் அண்டை நாடுகளை விடவும் அதிகமானது. ஆனால் அதன் பின்னர் மொத்த உள்நாட்டு உற்பத்தி குறைந்துள்ளது. 2020 ஆம் ஆண்டில் பொருளாதாரம் 3.6 விழுக்காடாகச் சுருங்கியது. சுருக்கத்துக்கான காரணம் கொரோனா தொற்று நோயின் பரவலாகும். இது மிக மோசமான வளர்ச்சி ஆகும்

கடந்த வாரம் நிதியமைச்சராக இருக்கும் பிரதமர் மகிந்த இராசபக்ச தொற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள பொருளாதாரம் இப்போது புத்துயிர் பெறுவதற்கான அறிகுறிகளைக் காட்டத் தொடங்கியுள்ளதாகவும், 2021 ஆம் ஆண்டில் மக்கள் முன்னேற்றத்தைப் பார்க்க முடியும் என நம்பிக்கை தெரிவித்தார். 2021 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரம் மீட்கப்படும் என்று உலக வங்கியும் கூறியுள்ளது. ஆனால் பொருளாதார சமிக்கைகள் வேறு விதமாக இருக்கின்றன.

முன்னதாக, இலங்கையின் பொருளாதாரம் ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதலின் விளைவாக நிலைகுலைந்து போயிருந்தது. இப்போது **COVID-**19 தொற்றுநோய் மக்களின் வழமையான வாழ்க்கையைப் புரட்டிப் போட்டுள்ளது. ஏப்ரில் 14 வரை 95,719 பேர் தொற்றுக்கு உள்ளாகினர். இதில் 92,151 பேர் குணமடைந்துவிட்டார்கள். மொத்தம் 602 பேர் இறந்து விட்டார்கள்.

இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 2021 ஆம் ஆண்டில் 3.4 விழுக்காடு உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, முக்கியமாக வெளிநாட்டு முதலீடுகள், சுற்றுலா மற்றும் பிற பொருளாதார நடவடிக்கைகளை இயல்பு நிலைக்குத் திரும்பும் என்கிறார்கள். எவ்வாறாயினும், மெதுவான உலகளாவிய மீட்சி, தொடர்ச்சியான வர்த்தகக் கட்டுப்பாடுகள், பொருளாதார வடுக்கள் மற்றும் அதிக கடன் சுமை ஆகியவை தொடர்ந்து வளர்ச்சியை பாதிக்கக்கூடும்" என்றும் உலக வங்கி தெரிவித்துள்ளது.

"தொற்றுநோயால் முன் எப்போதும் இல்லாத வகையில் பொருளாதார வீழ்ச்சியால் பாதிக்கப்பட்டுள்ள நாடு இப்போது மீட்புப் பாதையில் வந்துள்ளது" என்று இலங்கை மேம்பாட்டு மேம்படுத்தல் அறிக்கை குறிப்பிடுகிறது.

அதே நேரத்தில், தொற்றுநோய்க்கு மத்தியில் அதிகரித்த செலவுகள் மற்றும் குறைந்த வருவாய் ஆகியவை நிதி நிலைமையை மோசமடைய செய்துவிட்டன. பொது மற்றும் பொது உத்தரவாதக் கடன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 109.7 சதவீதமாக அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. பெப்ரவரி 2021 இல் வெளிநாட்டு நாணய இருப்புக்கள் கடந்த 11 ஆண்டுகளில் குறைந்த அளவிற்குக் குறைந்துவிட்டன, மேலும் நாணய மாற்று விழுக்காடு சனவரி முதல் 2021 மார்ச் 17 வரை 6.5 விழுக்காடு குறைந்துள்ளது. **COVID-**19 இல் இருந்து மீள்வதற்கும் பொருளாதாரத்தை ஆதரிப்பதற்கும் நிதி நிலைத்தன்மையை உறுதி செய்வதற்கும் இடையே சமநிலையை ஏற்படுத்துவது ஒரு முக்கிய சவாலாக உள்ளது.

இலங்கை வெளிநாட்டுக் கடன்களை அடைப்பதற்கு பாரிய சிக்கல்களை எதிர்கொள்கிறது. இலங்கை, ஆடம்பர பொருட்கள் மற்றும் வாகனங்கள் மற்றும் சில உணவுப் பொருட்களை இறக்குமதி செய்யத் தடை விதித்த போதிலும், வெளிநாட்டு இருப்பு பெப்ரவரி மாதத்தில் 4.5 பில்லியன் டொலராக இருந்தது.

முன்னாள் சனாதிபதி மகிந்த இராசபக்ச ஆட்சியின் கீழ் 2005 மற்றும் 2015 க்கு இடையில், இலங்கை சீனாவிலிருந்து பில்லியன்களை கடன் வாங்கியது, விலையுயர்ந்த உள்கட்டமைப்பு திட்டங்களுக்காக வாங்கிய கடன் மலையளவு குவிந்தது.

சீனாவிடம் இருந்து 1.4 பில்லியன் அ.டொலர் கடனைத் திருப்பிக் கொடுக்க முடியாது என்று கூறியதைத் தொடர்ந்து இலங்கை தனது மூலோபாய அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 ஆண்டு குத்தகைக்கு 2017 ஆம் ஆண்டில் ஒரு சீன நிறுவனத்திடம் ஒப்படைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது தெரிந்ததே.

கடந்த மார்ச் மாதம் இலங்கை சீனாவின் மக்கள் வங்கியிடம் இருந்து 1.5 பில்லியன் டொலர்களை (10 பில்லியன் யுவான்) நாணய இடமாற்று மூலம் பெற்றுள்ளது. இதனை இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. மேலும் அ.டொலர் 700 மில்லியனை கடனாகப் பெற சீனாவுடன் பேச்சு வார்த்தையில் இலங்கை ஈடுபட்டுள்ளது. அ.டொலரின் பெறுமதி **$ 1 = 6.5443** சீன யுவான் ஆகும்.

இலங்கை மத்திய வங்கி கடந்த ஆண்டு யூலை 31 இல் இந்திய இருப்பு வங்கியிடம் **(Indian Reserve Bank)** இருந்து அ.டொலர் 400 மில்லியனை நாணய இடமாற்று மூலம் பெற்றிருந்தது. அதனை திருப்பிக் கொடுக்கும் 6 மாதக் கெடுவை இலங்கை தள்ளிப்போட நினைத்தது. ஆனால் அப்படித் தள்ளிப் போடுவதாக இருந்தால் இலங்கை சர்வதேச நாணய நிதியத்தோடு (சர்வதேச நாணய நிதியம்) பேச்சு வார்த்தை நடத்தி அதன் ஒப்புதலைப் பெற வேண்டும் என இந்தியா சொல்லியது. இப்படிப் பேச்சுவார்த்தை நடத்தும் ஒழுங்கு தற்போது இலங்கைக்கு இல்லை. எனவே இலங்கை பெப்ரவரி 01 திகதி குறித்த இடமாற்று மூலம் பெற்ற தொகையை திருப்பிக் கொடுத்துவிட்டது.

இருந்தும் வெளிப்புறக் கடன்களைச் சந்திக்க நிதி வரத்து போதுமானதாக இருக்கவில்லை. பெப்ரவரியில் 2021 அந்நிய செலாவணி இருப்புக்கள் 11 ஆண்டுகளில் இல்லாத அளவிற்குக் குறைந்துவிட்டன, வெளிநாட்டு நாணய பற்றாக்குறை காரணமாக நாணய பரிமாற்ற விழுக்காடு சனவரி முதல் மார்ச் 17, 2021 வரை 6.5 விழுக்காடு குறைந்தது. இன்று ஒரு அமெரிக்க டொலரின் பெறுமதி இலங்கை நாணயத்தில் ரூபா 200.93 ஆகும். சென்ற ஆண்டு ஓகஸ்ட் மாதம் அ.டொலரின் பெறுமதி ரூபா 182.8 ஆக இருந்தது.

இலங்கை அரசு சீனா மேம்பாட்டு வங்கியுடன் **(China Development Bank.)** நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட 500 மில்லியன் டொலர் கடன் ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது. இந்தக் கடன் இலங்கையின் அந்நிய செலாவணி இருப்பை அதிகரிக்கச் செய்யும்.

2014 முதல், இலங்கையின் வெளிநாட்டுக் கடன் அளவுகள் அதிகரித்து வருகிறது, 2019 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 42.6 விழுக்காடு எட்டியுள்ளன. இலங்கையின் குறைந்தளவு பொருளாதார வளர்ச்சி விழுக்காடு மற்றும் 2007 முதல் 2014 வரை பெறப்பட்ட முந்தைய வெளிநாட்டுக் கடன்களைத் திருப்பிச் செலுத்த சர்வதேச இறையாண்மை முறிகள் வழங்கியதன் விளைவாகும். 2015 - 2020 காலப்பகுதியில் சர்வதேச இறையாண்மை முறிகளை திருப்பிச் செலுத்துதல் ஏறக்குறைய 76.7 பில்லியனாக இருந்தது, இது தற்போதைய வெளிநாட்டு கடன் தொகையோடு (தோராயமாக 33 பில்லியன் அ.டொலர்) ஒப்பிடும் போது 20 விழுக்காடுக்கும் குறைவாகவே உள்ளது. 2025 ஆம் ஆண்டில்

நுண வெளிநாட்டுக் கடன் 50 பில்லியனாக அதிகரிக்கும் என நம்பப்படுகிறது!

கடனை அடைப்பதற்கு மேலும் கடன் பெறுவதை நீண்ட காலத்துக்கு தொடர முடியாது. ஏற்கனவே இலங்கையின் நிதி நிலைமை சரிந்த காரணத்தால் சர்வதேச நிதி நிறுவனங்களால் அதன் கடன் மதிப்பீடு குறைக்கப்பட்டுள்ளது. இதனால் சிறிலங்கா சர்வதேச மட்டத்தில் கடன் வாங்க நினைத்தால் வட்டி விழுக்காடு அதிகமாக இருக்கும். கொடுப்பனவு சமநிலையை சரிக்கட்ட இலங்கை இறக்குமதித் தடைகளை விதித்துள்ளது. இதனால் உழுந்து, பயறு, மஞ்சள், மிளகாய் வெங்காயம், உருளைக்கிழுங்கு, கடலை, சோயா பாம் எண்ணெய், கருவாடு, சீனி போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலை உச்சத்தை எட்டியுள்ளது.

சந்தைக்கு தேவையான அளவு உற்பத்தி பொருட்கள் கிடைக்காமை, இந்த விலை அதிகரிப்பிற்கான காரணம் என அத்தியாவசிய உணவு பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. வறிய மக்கள் விலை அதிகரிப்பால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். விலைவாசி ஏற்றத்தைக் கண்டித்து ஆங்காங்கே மக்கள் ஆர்ப்பாட்டம் செய்து வருகிறார்கள். நுண்கடன் பெற்றவர்களில் சிலர் தற்கொலை செய்து கொள்கிறார்கள்.

சனாதிபதி கோட்டாபய ஆட்சிக்கு வந்தால் விலவாசி குறையும், வேலை வாய்ப்பு அதிகரிக்கும், ஊழல் ஒழிக்கப்படும் நாட்டில் தேனும் பாலும் ஓடும் என்ற மக்களின் எதிர்பார்ப்பு இன்று கனவாகி வருகிறது!

# ஒன்றாரியோ மாகாணத்தில் கோவிட்–10 தடுப்பூசிகளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடுகள் காரணமாக மாகாண அரசின் உறுப்பினர்கள் கனடியப் பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளனர்

Ontario Legislative Assembly

Ontario PC Caucus

Rt. Hon. Justin Trudeau
Prime Minister of Canada
Office of the Prime Minister
80 Wellington St.
Ottawa, ON
K1P 5K9

Dear Prime Minister Trudeau,

As Members of Provincial Parliament representing four ridings in Scarborough, we are deeply disappointed by the sudden cancellation of vaccinations at the Scarborough Health Network Centenary Site and Centennial College Progress Campus. All four of us have been working incredibly closely with the Scarborough Health Network since the first day of the pandemic.

We know the federal government is responsible for securing vaccine supplies for Canadians. However, ongoing delays in vaccine shipments have been extremely disruptive to Ontarians with booked appointments as well as to our local partners administering vaccines in our communities. That's why we continue to ask your government for a stable and reliable vaccine supply, which remains the greatest challenge facing Ontario's vaccine rollout.

We are dismayed that your Scarborough MPs are falsely suggesting the 10,000 cancelled appointments at Scarborough Health Network were a result of the provincial vaccine distribution process. We can also assure you the province does not have vaccines sitting in freezers.

As you are well aware, the federal government is responsible for securing vaccine supply for Canadians and that while we've seen steady shipments of Pfizer, shipments of Moderna and AstraZeneca have been inconsistent and plagued by delays. The most recent in a series of delays associated with Moderna was directly related to cancelled clinic appointments in Ontario. Here are the particulars:

- Ontario received a shipment of Moderna vaccines the week of March 22nd. It was less than a third of what was originally expected.
- The remaining 70% of that allocation was further delayed and wasn't delivered to Ontario until the Easter weekend.
- The next shipment we were set to receive on April 5th wasn't delivered until April 14th.
- The shipment following that, nearly 500,000 doses of Moderna, was due to be received on April 19th but has now been twice delayed with an expectation that it will arrive on May 3rd.

We have been seeing the ongoing impact of these delays on clinics across Ontario for several weeks. We know many of our partners, such as Scarborough Health Network, rely on Moderna doses to operate their clinics. Delays in deliveries from the federal government directly impact clinic appointments and the Scarborough Health Network is one of many centres that needed to pause bookings or reschedule appointments this week due to continued lack of supply.

Unfortunately, your MPs are publicly mischaracterizing the impact of those delays and erroneously claim in their April 14th letter to Premier Doug Ford that the province "denied the 10,000 vaccines" that Scarborough Health Network was promised - this is simply not true. The hospital's decision to pause vaccinations was the direct result of the ongoing supply shortage, not an "unjustified closure of these facilities" by the provincial government. False and inflammatory claims about vaccine distribution doesn't help your government or ours to build public confidence in our mutual effort to fight COVID-19 and get vaccines in arms. This is particularly concerning in racialized communities like Scarborough that have high rates of COVID-19 and vaccine hesitancy.

Similarly, the continued mischaracterization by your ministers and MPs that Ontario has vaccines sitting in freezers is factually incorrect, inflammatory and needlessly undermines public confidence in vaccine distribution. To be clear, there are not 1.2 million vaccine doses sitting in freezers as your ministers and MPs currently claim. Here's a breakdown of where they actually are:

- Roughly half (543k doses) are AstraZeneca and half of those are currently in the hands of pharmacies (1,400 pharmacies across Ontario will be distributing vaccines by this coming week).
- Another 117k doses are in the hands of family doctors.
- A small remainder of AstraZeneca doses are reserved to ensure continuity of distribution, which is standard practice for vaccine distribution across the country and necessary because of the ongoing shortages and delays in Moderna and AstraZeneca delivery.
- The remainder of the Pfizer vaccine in provincial hands has already been allocated to vaccination clinics and hospitals for Ontario residents who are booked to be vaccinated.
- Most future shipments of AstraZeneca and Moderna have not been confirmed which will present further cancelation challenges for clinics if expected vaccines don't arrive.

There are more than 2.5 million Ontarians who have made vaccine appointments through the provincial booking system alone. Additional appointments are booked through hospitals and pharmacies not on the provincial booking system.

The way out of this pandemic is vaccines. Like you, protecting the health and safety of the residents of Scarborough remains our top priority, which is why our government has designated 15 postal codes as part of our hotspot strategy in Scarborough. We have also ensured Scarborough residents have a number of locations available to them in order to receive the vaccine, this includes: 51 pharmacies, 6 mass immunization clinics and 4 primary care locations.

We know more vaccine is coming. We appeal to you to urge your public health officials to move more quickly to provide guidance on the use of AstraZeneca for younger age groups – which will have a material impact on vaccine rollout across the country. And that you do everything possible to secure other sources of vaccine. As we receive more vaccine supply from your government, we look forward to continuing to work with our vaccination partners including the federal government to ensure every resident of Scarborough, and every Ontarian, who wants a shot can receive one.

Sincerely,

Hon. Raymond Cho
Member of Provincial Parliament
Scarborough North

Christina Mitas
Member of Provincial Parliament
Scarborough Centre

Vijay Thanigasalam
Member of Provincial Parliament
Scarborough – Rouge Park

Aris Babikian
Member of Provincial Parliament
Scarborough – Agincourt

cc: Gary Anandasangaree, MP Scarborough – Rouge Park
Hon. Bill Blair, Minister of Public Safety and Emergency Preparedness
Shaun Chen, MP Scarborough North
Hon. John McKay, MP Scarborough - Guildwood
Jean Yip, MP Scarborough – Agincourt
Salma Zahid, MP Scarborough Centre



## தடுப்பூசி பற்றாக்குறை காரணமாக ஸ்காபாரோவில் இயங்கிவந்த இரண்டு தடுப்பூசி வழங்கும் சேவைகள் இன்று முதல் நிறுத்தப்பட்டுள்ளன மாகாண அரசின் உறுப்பினர் விஜேய் தணிகாசலம் அறிவிப்பு

தடுப்பூசி பற்றாக்குறை காரணமாக ஸ்காபாரோவில் இயங்கிவந்த இரண்டு தடுப்பூசி வழங்கும் சேவைகள் இன்று முதல் நிறுத்தப்பட்டுள்ளன மாகாண அரசின் உறுப்பினர் விஜேய் தணிகாசலம் அறிவிப்பு.

கோவிட்-19 தடுப்பூசி மருந்துகள் பற்றாக்குறை காரணமாக ஸ்காபாரோ சென்டனரி மருத்துவமனையிலும் சென்டனியல் கல்லூரியிலும் நடத்தப்பட்டு வந்த தடுப்பூசி வழங்கும் சேவை நேற்று 14ம் திகதி முதல் நிறுத்தப்படவுள்ளதானது மிகவும் வருத்தமளிக்கும் விடயமாகும். இவ்வாறு தெரிவித்துள்ளார் ஸ்காபுறோ ரூஜ் பார்க் மாகாண அரசின் தொகுதி உறுப்பினர் திரு விஜேய் தணிகாசலம். அவரது அலுவலகத்திலிருந்து எமக்குக் கிடைக்கபெற்ற செய்திக் குறிப்பில் பின்வருமாறு தெரிவிக்கப்பெற்றுள்ளது.

மேலும் விளக்கமாகக் கூறின், ஒன்றாறியோ மாநிலம் பெற்றுக்கொண்ட ஒவ்வொரு தடுப்பூசி சொட்டு மருந்தும் முன்பதிவு செய்து காத்திருக்கும் ஒன்றாறியோ மக்களுக்காக ஒதுக்கப்பட்டதாகும். ஒன்றாறியோ மாநில முன்பதிவுப் பொறிமுறை மூலம் மட்டுமே சுமார் 2.5 மில்லியன் முன்பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒன்றாறியோ மாநில முன்பதிவுப் பொறிமுறையைப் பயன்படுத்தாது, மருந்தகங்களிலும் மருத்துவமனை சிகிச்சை மையங்களிலும் பொது சுகாதார பிரிவுகள் மூலமும் செய்யப்பட்ட முன்பதிவுகள் இதில் உள்ளடக்கப்படவில்லை. 48 மணி நேரத்திற்கு முன்னர் சுமார் 400,000 ஃபைசர் சொட்டு மருந்துகளை பெற்றுள்ளோம் என்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

நாட்டின் தடுப்பூசி வழங்கல் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்ய மத்திய அரசு பாடுபட்டு வருவதை நாம் அறிவோம். அதேவேளையில் ஒன்றாறியோவின் தடுப்பூசி வழங்கலில் மிகப் பெரிய சவாலாக உள்ள விடயம் தடுப்பூசிகளின் சீரானதும் நம்பகமானதுமான விநியோக முறை ஆகும். எடுத்துக்காட்டாக, ஒன்றாறியோ மார்ச் 22ஆம் திகதியை ஒட்டிய வாரத்தில் மொடேர்னா தடுப்பூசி மருந்துகளைப் பெற்றுக்கொண்டபோது, அது முதலில் எதிர்பார்க்கப்பட்ட தொகையின் வெறும் 30 வீதம் மட்டுமே கிடைக்கப்பெற்றது. எமக்கான ஒதுக்கீட்டில் மீதமுள்ள 70 வீதம் - அதாவது 225,600 தடுப்பூசி சொட்டு மருந்துகள் - காலதாமதமாக உயிர்த்த ஞாயிறு வாரத்தையொட்டியே ஒன்றாறியோவுக்கு வந்தடைந்தன. இதுவரையும், அதாவது புதன்கிழமை அறிக்கையின்படி, ஏப்ரல் 5ஆம் திகதி எமக்குக் கிடைத்திருக்க வேண்டிய 303,000 மொடேர்னா தடுப்பூசி மருந்துகள் இன்னும் எங்களுக்கு வந்துதடையவில்லை. 19ஆம் திகதி எமக்கு வரவிருந்த ஏறத்தாழ 500,000 மொடேர்னா தடுப்பூசி சொட்டு மருந்துகளின் வருகை எதிர்வரும் 29ஆம் திகதிவரை தாமதமாகியுள்ளது.

ஸ்காபரோ வாழ் மக்கள் அனைவரினதும் கவனத்துக்கு: தடுப்பூசியை போட்டுக்கொள்வதற்கு உங்களால் முன்பதிவு செய்யப்பட்ட குறித்த நாள் பிற்போடப்பட்டுள்ளதானது உங்களை வெறுப்படைச் செய்திருக்கும் என்பதை நாம் அறிவோம். ஆகவே, மத்திய அரசிடமிருந்து மருந்துகளைப் பெற்றவுடன் கோவிட்-19 தடுப்பூசி வழங்கலை சரியாக நடைமுறைப்படுத்துவதற்கும், தடுப்பூசி போடும் மையங்களை விரிவுபடுத்தவும் நாம் தயாராக உள்ளோம் என்பதை உங்களுக்கு அறியத் தருகிறோம். இதேவேளையில், ஸ்காபாரோ வாழ் மக்களை, நகர சபையால் நடத்தப்படும் இரண்டு சிகிச்கை மையங்களுக்கும் ஒன்றாறியோ மாநில முன்பதிவுப் பொறிமுறையூடாக பதிவுகளை மேற்கொள்வதற்கு ஊக்குவிக்கிறோம்.

*மேலதிக விபரங்களுக்கு: தொலைபேசி எண்: 1-888-999-6488*

*விஜய் தணிகாசலம், மாநில சட்டமன்ற உறுப்பினர். ஸ்காபரோ - றூஜ் பார்க்.*


பவள விழா
2021
யாழ்/அனலைதீவு வடலூர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் 75வது ஆண்டு நிறைவு

அன்புடையீர்,

மேற்படி நமது பாடசாலையின் 75வது ஆண்டு நிறைவினையொட்டி பவள விழாவினை இவ்வாண்டு இறுதியில் கொண்டாடுவதுடன் மலர் ஒன்றை உருவாக்கி வரலாற்றுப் பதிவினை ஆவணமாக்கும் பெருமுயற்சியை மதிப்புக்குரிய திரு. கணேஷ்ஐயர் சௌந்தரராசன் ஐயா அவர்களின் அனுசரணையுடன் முன்னெடுத்துள்ளோம். இதற்கான ஒருங்கிணைப்புக் கூட்டம் COVID-19 காரணமாக ஓரிடத்தில் கூட முடியாததால் புலம்பெயர் பழைய மாணவர்களுடன் தொலைபேசி மூலமாக உரையாடி பவள விழா செயற்குழு ஒன்றை அமைத்துள்ளோம். அத்துடன் முக்கியமாக பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், சமூக ஆர்வலர்களிடம் இருந்து பவள விழா மலருக்கான ஆக்கங்களையும் மற்றும் இயன்றளவு நிதிப் பங்களிப்பையும் மிகத் தயவுடன் எதிர்பார்க்கிறோம். கீழ்க்காணும் கனடிய வங்கி இலக்கத்திற்கு உங்களால் இயன்ற நிதிப் பங்களிப்பினையும் அனுப்பி வைத்து விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

செயற்குழு விபரம்:

| | |
|---|---|
| திரு. ஆறுமுகம் இராசேந்திரம் | திரு. தம்பையா திருநீலகண்டன் |
| திரு. அருளானந்தம் தயாபரன் | திரு. கணேசு பழனி |
| திரு. ஏகாம்பரம் தேவராசா | திரு. கதிரன் கேதீஸ்வரன் |
| திரு. வரதன் குணா | திரு. சிவகுரு விநாயகமூர்த்தி |
| திரு. தம்பையா இராஜேஸ்வரன் | திரு. அம்பலவாணன் கைலாசபிள்ளை |
| திரு. சுப்பிரமணியம் சண்முகம் UK | திருமதி. அருளானந்தம் யாழினி UK |
| திரு. பேரம்பலம் கணபதிபிள்ளை | திரு. தனிநாயகம் அருட்பாலா |
| திரு. கந்தசாமி ஜெயசீலன் | திரு. பாலசிங்கம் பாலகுமார் UK |
| திருமதி. வித்தியாதரன் அருளினி | திருமதி. பூலோகஇந்திரன் யோகம் |
| திருமதி. இன்பநாதன் திருக்கலாதேவி | திரு. தில்லையம்பலம் தர்மகுலசிங்கம் SWISS |
| திரு. கணபதிப்பிள்ளை பேரின்பலிங்கம் | திரு. கந்தன் மகாலிங்கம் GERMANY |



தொடர்புகள்: Email - ANALAIVADALOORTMS@GMAIL.COM

தொலைபேசி: திரு. த. இராஜேஸ்வரன் 416 580 1982
திரு. சி. விநாயகமூர்த்தி 647 401 7164
திரு. அ. கைலாசபிள்ளை 647 296 3529



வங்கி/BANK : BANK OF MONTREAL, A/C No.- 3948496, Transit No.-24922, Institution No.- 001

'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு' என்பதை யாமறிவோம். எனவே அனைவரும் ஒன்றிணைந்து நம்மை வளர்த்து ஆளாக்கிய பாடசாலையின் வரலாற்றை நிறைவாக ஆவணமாக்குவோம்.

நன்றியுடன் பவள விழா செயற்குழு



# ஈழமே ஒரு இனவழிப்புச் சிறையில் இருக்கிறது?

**- கனடா உதயனுக்காக தீபச்செல்வன்**

ஈழ இறுதிப் போரில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக அவர்களின் உறவுகள் தெருத்தெருவாக போராடி வருகிறார்கள். போர் முடிந்து பன்னிரண்டு வருடங்கள் ஆகின்றன என்றால், அவர்கள் தெருக்களில் இருந்து போராடத் துவங்கி பன்னிரண்டு வருடங்கள் ஆகின்றன. போரில்காணாமல் ஆக்கப்பட்ட தம் உறவுகளை தேடிப் போராடியே இந்த உறவுகளும் காணாமல் போய்விடுகின்றகதைகளும் நடக்கின்றன. இன்றைக்கு ஊடக வெளிச்சத்தில் தெரியாமலே இவர்களின் கதைகள் தொடர்கின்றன. அண்மையில்கூட கிளிநொச்சியில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் நீதிக்கும் உண்மைக்குமானஒரு அடையாளப் போராட்டத்தை மேற்கொண்டார்கள்.

அப்போது அருகில் ஒரு புதிய கூடாரம் அமைக்கப்பட்டிருந்தது. தமிழ்க்குரல் ஊடகநிறுவனரும் முன்னாள் போராளியுமான தனபாலசிங்கம் சுதாகரன் அவர்கள் என்னை அந்த இடத்திற்கு அழைத்துச் சென்றிருந்தார். எனக்கு பெரிய அதிர்ச்சியாகவே இருந்தது. இன்றைய ஜனாதிபதிகோத்தபாய ராஜபக்ச பதவி ஏற்ற பின்னர், கிளிநொச்சியில் மாத்திரம் 18 இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். ஏற்கனவே தமிழ் இளைஞர்கள் ஆயிரக் கணக்கானோர் நிறைகளில் வாடுகின்ற நிலையில், இப்போது இருப்பவர்களையும் சிறையில் அடைகின்ற வேலைகளில் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச ஈடுபடுகின்றார்.

நாங்கள் ஏற்கனே சிறையில் வாடுகின்ற தமிழ் இளைஞர்களை விடுதலை செய்யுமாறு கேட்டுப்போராடிக் கொண்டிருக்கின்ற தருணங்களில், இன்னும் புதிய இளைஞர்களும் அரசியல் கைதிகளாகமாற்றப்படுகின்ற கொடுமையை என்னவென்பது? அங்கே சந்தித்த மனிதர்கள் மனதை அதிரச் செய்தார்கள். மிகுந்த உருக்கத்தை தருகின்ற கதைகள் அவர்களுடயவை. ஒரு பச்சைக் குழந்தை தன் தந்தையின்விடுதலைக்காக அந்த தகரக் கூடத்தில் இருந்து போராடுகிறது. கடந்த ஒன்றரை ஆண்டுகளின் முன்னர்அக் குழந்தை கருவில் இருந்த போது அதன் தந்தை கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

அந்தப் பச்சைக் குழந்தை என்ன பாவம் செய்தது என்று மனம் அந்தரித்தது. இப்படி18 கிளிநொச்சியை சேர்ந்த 18 இளைஞர்கள் காரணம் இன்றி கைது செய்யப்பட்டுள்ளார்கள். அவர்களில் பெரும்பாலானவர்கள் அண்மைய காலங்களில் திருமணமானவர்கள். தமது குடும்பம், குழந்தை என்றுதம் தனிப்பட்ட வாழ்க்கையை கவனித்து வருபவர்கள். அத்துடன் அவர்களுக்கும் விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. 2009இல் சிறுவர்களாக இருந்த அவர்கள் ஈழத் தமிழ்இனத்தில் பிறந்ததைத் தவிர எந்தப் பாவத்தையும் செய்துவிடவில்லை என்பது அவர்கள் குடும்பத்தைப்பார்க்கும் போது நன்றாகவே தெரிகிறது.

எங்கள் இனத்தின்மீதான பாரபட்சம் என்பது இப்போது இன்னுமின்னும் அதிகரித்துச்செல்லுகிறது. தற்போதைய ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச ஜனாதிபதியாக பதவி ஏற்ற பின்னர், முதலில்செய்த நற்காரியங்களில் ஒன்று மிருசுவில் படுகொலையாளி சுனில் ரத்நயாக்கா விடுதலை செய்யப்பட்டமை. யாழ்ப்பாணம் மிருசுவிலில் 2000ஆம் ஆண்டு எட்டுத் தமிழ் அப்பாவி மக்களை படுகொலை செய்தவர்என்ற குற்றச்சாட்டில் அது நிரூபிக்கப்பட்டு, மரணை தண்டனை பெற்ற ஆயுள் கைதியான சுனில்ரத்நாயக்கா விடுவிக்கப்பட்டமை, ஈழத் தமிழ் மக்களை இந்த தீவில் படுகொலை செய்வது என்பதுகுற்றமல்ல என்பதை அறிவிக்கும் ஒரு நிகழ்வே ஆகும்.

அதேவேளை தமிழ் மக்களை படுகொலை செய்த சுனில் ரத்நாயக்கா முன்னர் ஒருபோது பேசுகையில், தமிழ் மக்களை படுகொலை செய்வது குற்றமல்ல என்றும் அது வீரம் என்றும் கூறியிருந்தார். அதுவே ஸ்ரீலங்காவின் நீதியாகவும் இருக்கிறது என்பதையே நாம் புரிந்து கொள்ள வேண்டும். அதே சமயத்தில், ஆனந்த சுதாகரன் என்ற தமிழ் அரசியல் கைதியின் கதையையும் நாம் அவ்வளவுவேகமாக மறந்திருக்க மாட்டோம். அவர் மனைவி எட்டு ஆண்டுகளாக கணவனுக்காக போராடியே மாண்டுபோனார். இந்த நிலையில் உயிருடன் போராடிய தன் மனைவியின் இறுதிக் கிரிகைக்காக ஆனந்த சுதாகரன் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அவரின் ஒரு மகள் தஞ்சம் புக இடமின்றி, ஆதரவின்றி அந்த நிலையில் இருந்த காட்சியையும்பிஞ்சு மகன் கொள்ளிக் குடம் சுமந்து தாயிற்கு இறுதிக் கிரிகை செய்த நடந்த கோலத்தையும்நாம் மறந்துவிடவே முடியாது. அத்துடன் தந்தையுடன் சிறைச்சாலை வாகனத்தில் ஏறிய அந்தக் குழந்தைகளின் காட்சிகூட இந்த தீவில் ஈழத் தமிழர்களின் நிலையை ஈழக் குழந்தைகளின் நிலையை உலகிற்கு எடுத்துரைக்கும் காட்சிதான். ஆனாலும் என்ன நடந்தது. அப்போது, மண்டெலா என்றும்காந்தி என்றும் புழகப்பட்ட மைத்திரிபபால சிறிசேனவிடம் தம் தந்தையை விடுவிக்குமாறு அந்தக்குழந்தைகள் உருகி உருகிக் கோரிக்கை விடுத்திருந்தனர். விடுவிக்கிறேன் என்று சொல்லிஏமாற்றி இன்றுவரை அந்தக் குழந்தைகள் அநாதராகவே இருக்கின்றனர்.

தமிழ் அரசியல் கைதிகளின் விவகாரம் - சிங்கள இராணுவக் குற்றவாளிகளின் விவகாரம் இந்த தீவில் எப்படி அணுகப்படுகின்றது என்பதற்கு இந்த இரண்டு கதைகளுமே போதும். இந்த இரண்டு உண்மைகளுமே இந்த தீவில் உள்ள ஒடுக்குமுறையையும் பாரபட்சத்தையும் தெளிவாக எடுத்துரைக்கின்றது. அரசியல் கைதிகளின் விடுதலைக்காக போராடுகின்ற பல குடும்பங்களின் அகப் புற சிதைவுகள்நமக்கு அதிகம் தெரிவதில்லை. ஊடகங்களிலும் வருவதில்லை. அவர்களைத் தேடித் தேடியே உறவுகள்அழிக்கப்பட்டு வருகிறார்கள்.

இந்த தீவில் பாதிக்கப்பட்ட ஒரு இனத்தின் மீள் வாழ்வுக்கும் சிங்கள தேசத்தின்நல்லிணக்க எண்ணப்பாட்டுக்குமாக அவர்களை விடுதலை செய்ய சிங்கள ஆட்சியாளர்கள் யாரும்தயாரில்லை. அதேநேரம் சிங்கள மக்களுக்கும் அரசியல் கைதிகளை பற்றி பிழையான செய்திகளையும் தோற்றங்களையும் உருவாக்கி அவர்களை சிறையில் அடைத்து தமது அரசியலை செய்யவே மாறி மாறி ஆளுகின்ற சிங்கள தேசிய கட்சிகள் முனைகின்றன. இந்த அரசியல் ஆட்டத்தில் தமிழ் அரசியல்கைதிகளின் காலமும் வாழ்க்கையும் கழிகிறது. அத்துடன் இந்த துயரில் அவர்களின் குடும்பங்களும் கரைகின்றன.

இந்தப் பிரச்சினையை முடித்து வைக்க வேண்டிய நேரத்தில், இன்றைய ஜனாதிபதி கோத்தபாயராஜபக்ச தமிழ் இன இளைஞர்களை இன்னும் சிறையில் அடைக்கத் துடிக்கின்றார். வடக்கு கிழக்குதமிழர் தாயகத்தில் மொத்தமாக 29இற்கும் அதிகமான இளைஞர்கள் காரணமின்றி சிறையில் வைக்கப்பட்டுள்ளனர். ஐ.நாவின் மனித உரிமைப் பேரவை உள்ளக விசாரணைக்கு பரிந்துரை செய்கிறது. ஆனால் இங்கே இந்த இளைஞர்கள் நீதிமன்றங்களின் முன்னால் நிறுத்தப்படாமல் சிறையில் வைக்கப்பட்டுள்ளனர். புலிகளுக்கு உதவினார்கள் என்று பொய் காரணம்சொல்லி, இவர்கள் சிறையில் வைக்கப்பட்டுள்ளனர். இல்லாத புலிகளுக்கு எப்படி உதவ முடியும்?

கடந்த காலத்தில் சுமந்திரன் போன்றவர்கள், புலிகளால் தனக்கு அச்சுறுத்தல், தனக்குபுலிகள் குண்டு வைக்கப் போகிறார்கள் என்று சொல்லி அப்பாவிகளை சிறையில் தள்ளியமையின்தொடர் விளைவே இது. தமிழ் மக்களை காப்பாற்றுவார்கள், அல்லது அவர்களின் விடுதலைக்காககுரல் கொடுப்பார்கள் என்று நம்பி வாக்களித்த சுமந்திரன் இந்த இளைஞர்களை சிறையில் தள்ளுவதற்கு காரணமானவர் என்பதும் இங்கே கசப்பான உண்மைதான். மணிவண்ணனுக்காக திரள்கின்ற சுமந்திரன்கள், இப்படியான அப்பாவிகளையும் மீட்டெடுக்க ஏன் முயலவில்லை?

உண்மையில் இந்த இளைஞர்கள் மாத்திரமல்ல, இவர்களுக்காக போராடுகின்ற அன்னையர்கள் மாத்திரமல்ல, ஒட்டுமொத்த ஈழத் தமிழ் இனமும் சிறையில் தான் வாடுகின்றது. ஈழம் என்ற தேசமேசிறையில் தான் இருக்கிறது. இதிலிருந்து எப்படி மீள்வது என்பதை குறித்து செயலூக்கமாகவும் அறிவுபூர்வமாகவும் சிந்திக்க வேண்டிய கடமைதான் நம் முன்னால் உள்ளது.




# பள்ளிமுனை மீனவர்கள் 4 பேர் இரணைதீவு கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் தாக்குதல்

மன்னார் பள்ளிமுனையில் இருந்து செவ்வாய்க்கிழமை (13) இரவு மீன் பிடிக்க கடலுக்குச் சென்ற மீனவர்கள் மீது நேற்று நள்ளிரவு இரணை தீவு கடற்பரப்பில் வைத்து கடற்படையினர் கடுமையாக தாக்கியதாக தெரிய வருகின்றது.

மன்னார் பள்ளிமுனை கடற்கரையில் இருந்து படகு ஒன்றில் 4 மீனவர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை கடற்தொழிலுக்குச் சென்றுள்ளனர்.

கடற்தொழிலுக்கு சென்ற மீனவர்கள் பள்ளிமுனை கடற்கரையில் உள்ள கடற்படையினரின் சோதனை மற்றும் பதிவுகளை மேற்கொண்ட நிலையில் கடலில் மீன் பிடிக்கச் சென்றுள்ளனர்.

இதன் போது நேற்று நள்ளிரவு 12 மணியளவில் இரணை தீவு கடற்பரப்பில் வைத்து கடல் றோந்து பணியில் ஈடுபட்ட கடற்படையினர் குறித்த படகை நிறுத்தி சோதனையிட்டதோடு தேவையற்ற காரணத்தை கூறி குறித்த 4 மீனவர்களையும் கூமார் 3 மணி நேரம் கடலில் தடுத்து வைத்ததாகவும், பின்னர் கடற்படையினர் கொண்டு வந்த தடியினால் மீனவர்களை தாக்கியதோடு, மீனவர்களின் தொலைபேசி மற்றும் டோச் லைட் போன்றவற்றை பறித்துச் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.



குறித்த சம்பவம் தொடர்பாக மன்னார் பள்ளிமுனை கடற்படை அதிகாரியின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளதாகவும் தெரிய வருகின்றது.

**- மன்னார் நிருபர் (14-04-2021)**

# தமிழ்நாட்டு மக்கள் சந்தேகப்பட்டது போன்றே, தேர்தல் முடிவினை மாற்ற சதி நடப்பதாகக் கூறுகின்றார் வேல்முருகன்




அண்மையில் நடந்த முடிந்து எதிர்வரும் மே மாதம் 2ம் திகதி வாக்குகள் எண்ணும் பணிகள் ஆரம்பமாகும் என்ற அறிவிப்பைத் தொடர்ந்து மக்கள் ஆவலுடன் காத்திருக்கும் இந்த தருணத்தில் தமிழ் நாட்டு மக்கள் சந்தேகப்பட்டது போன்றே, தேர்தல் முடிவினை மாற்றியமைக்க சதி நடப்பதாக தமிழக வாழ்வுரிமை கட்சித் தலைவர் வேல்முருகன் தெரிவித்துள்ளார். இதேவேளை பண்ருட்டி சட்டமன்ற தொகுதி தேர்தல் முடிவை மாற்ற சதி நடக்கிறது என்றும் தமிழக வாழ்வுரிமை கட்சித் தலைவர் வேல்முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள வளாகத்துக்குள் கணினி நிபுணர்கள் வந்து செல்ல ஏன் திடீர் அனுமதி வழங்கப்பட்டது என கேள்வியெழுப்பியுள்ள அவர் தேர்தல் சட்ட விதிகளை மீறி ஏன் அதிகாரிகள் இந்த சட்ட விரோத நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக திரு வேல்முருகன் செய்தியாளர்களிடம் பேசியபோது, "அண்ணா பல்கலைக்கழக மாணவர்களுக்கு பாடம் நடத்த 3 கணினி நிபுணர்கள் அனுமதித்து உள்ளதாக கூறுவதை ஏற்க முடியாது. இதற்குப் பின்னாள் ஒரு சதி உள்ளது. கணினி நிபுணர்கள் அனுமதித்தது பற்றி மாவட்ட ஆட்சியருக்கும் தமிழக தலைமை தேர்தல் அதிகாரிக்கும் புகாரை அனுப்பியுள்ளேன்" இவ்வாறு அவர் தெரிவித்தார்.




## உங்களுடைய முறை விரைவில் வருகிறது.




ஒன்ராரியோவின் கோவிட்-19 தடுப்பூசி திட்டம் நோய் பரவலைத் தடுத்து உயிர்களைக் காக்க உதவுகிறது.

தினமும் ஆயிரக்கணக்கானோர் ஒன்ராரியோவில் தடுப்பூசி போட்டுக்கொள்கிறார்கள்.

தடுப்பூசி வேலை தொடரும்போது, நாமும் முகக் கவசம் அணிந்து, கைகளைக் கழுவி சமூக இடைவெளியைக் காக்கவேண்டும்.

300 மொழிகளில் உதவிபெற **ontario.ca/covidvaccineplan** க்கு செல்லுங்கள் அல்லது 1-888-999-6488 ஐ அழைத்து மேலும் தெரிந்துகொள்ளுங்கள்.

ஒன்ராறியோ அரசாங்கத்தால் கட்டணம் செலுத்தப்பட்டது

Ontario

30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்

ஸ்காபுறோ

# சங்கர் அன் கோ

## வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் இனிய தமிழ் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!

*SUMMER SPECIAL* கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள், மரக்கறி விதைகள் இன்னும் பல...

உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்

மண்சட்டிகள், மட்பானைகள், மண்அடுப்புக்கள், மண்கூசாக்கள், மின் தேங்காய் துருவி அனைத்தும் இங்கு கிடைக்கும்.



இல்லத்தரசிகளின் சமையலறைக்குத் தேவையான Rice Cookers, Grinding Machines, Rotty Makers, Sumeet, Preeti, Premier, Chef Mastrer Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம். மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.






காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்

## SHANKAR & CO

2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)


Open to the public, including:
Contractors, cleaners, building maintenance providers and more.
We stock a full line of COVID19 Protective Products
• Commercial Vacuum Cleaners
• Industrial Blowers
• Floor Machines & accessories
Cold Foggers & Sprayers for COVID
வியாபார நிலையங்கள், அலுவலகங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் சுத்திகரிப்பு வேலைகளைச் செய்யும் ஒப்பந்தக்காரர்களுக்கு எமது அழைப்பு
உங்கள் சுத்திகரிப்பு மற்றும் Building Maintenance வேலைகளுக்கு தேவையான அனைத்துப் பொருட்களும் போதிய கையிருப்பில் எம்மிடம் உள்ளதால் நீங்கள் குறைந்த விலைகளில் அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம்.
இந்த விளம்பரத்தைக் கொண்டு வருபவர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.
A&B Supplies
Serving York Region for over 30 years
500 Alden Road, Unit 12, Markham | Tel: (905) 513-6940 | www.anbsupplies.com


STEELES PODIATRY CLINIC
கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்
ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது
WE ACCEPT
• Extended Health Care
• Private - Work Insurance
• MVA - WSIB
• ODSP - Social Service
LIST OF SERVICES
• General & Diabetic Care
• Foot Pain Treatment
• Sports Medicine
• Surgical Procedures
• Custom-Made Orthotics
• Orthopaedic Shoes
• Compression Stockings
• Ankle - Knee - Back Braces
ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE
உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).
Compression Level
5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7
416.298.FOOT (3668)

# Carefirst Family Health Team

## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario


ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGRÉMENT CANADA

**Clinic Location:**


**Carefirst One-Stop Multi Services Centre**

300 Silver Star Blvd., 2/F, Scarborough, ON M1V 0G2

Tel: (416) 502-2029, www.carefirstfht.com




# PRECONSTRUCTION HOUSES & TOWNHOUSES!






**Bala Logendralingam**
REALTOR®

EXECUTIVE Award
100% Award

RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
Office: 416-287-2222

647-447-1562
info@balalogen.com
Suite 203 - 1265 Morningside Ave.
Toronto, ON M1B 3V9

# ஈழத்துத் திருக்கோவில்கள் 942



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## ரம்பொட ஆஞ்சநேயசுவாமிகள் ஆலயம்,
### ரம்பொட. மலையகம்

"சீருடைய வாயுமகன் சீர்த்த முகம் ஒன்றே
சிறுநரசிம்மமெனச் சேர்ந்த முகம் ஒன்றே
பேறுடைய வராகமெனப்பெற்ற முகமொன்றே
பெற்றியுடைய கயக்கிரீவான முகமொன்றே
சீருடைய ஓர் கருடரான முகமொன்றே
செஞ்சொலுடைப் பஞ்சமுகரான அனுமனொன்றே
பாருடையோர் போற்றுகின்ற மாருதியை இன்றே
பாடுமனமேஇனியும் பயமுமில்லை என்றே."

இராமபக்த அனுமானின் அவதாரங்களில் பஞ்சமுக ஆஞ்சநேயர் வடிவம், வேண்டுவதை அருளும் சிறப்புடையதாகக் கருதப்படுகின்றது. பஞ்சமுக ஆஞ்சநேயரை மனதிருத்தி வணங்கும்பொழுது, ஆஞ்சநேயரின் குணஇயல்புகள் வணங்குவோரின் உடலிலும் உள்ளத்திலும் பதியும் என ஆன்றோர் கூறியுள்ளனர். மேற்கூறிய பாடல்வரிகளில் ஆஞ்சநேயரின் பஞ்சமுகச் சிறப்புக்கள் அழகாகக் கூறப்பட்டுள்ளது. பஞ்சம்படை வந்தாலும், பாரெல்லாம் வெந்தாலும் அஞ்சவேண்டாம் என்று அபயகரத்தோடு காட்சியளிக்கும் ஸ்ரீ ஆஞ்சநேயர் எழுந்தருளியுள்ள ஆலயத்தின் வழிபாட்டு முறைகள், ஏனைய ஆலயங்களினின்றும் மாறுபட்டவையாகக் காணப்படுகின்றன. கோவிலுக்குச் செல்லும் பக்தர்கள் உடல், உள சுத்தியோடு செல்லவில்லையென்றால், அதனால் பல நேர்மாறான விளைவுகள் ஏற்படும்.

இராமதூதனாகச் சீதையைத்தேடிச் சென்ற அனுமான், அசோகவனத்திலே சிறைவைக்கப்பட்டிருந்த சீதையைக் கண்டுபிடிக்கு முன்னர், பல இடங்களிலே தங்கித் தேடிச் சென்று, இறுதியிலே அசோவனத்திலே சீதையிருப்பதைக் கண்டுபிடித்தார். இவ்வாறு அவர் தேடிய இடங்களுள் ஒன்றாக, அவரது பாதம்பட்ட புனிதபூமியாக ரம்பொட ஆஞ்சநேயர் ஆலயம் அமைந்துள்ள வேவன்டன் குன்று விளங்குகின்றது என்பது ஐதீகமாகக் காணப்படுகின்றது. இவ்விடத்திலே ஆஞ்சநேய சுவாமிகளுக்கு ஆலயமெழுப்ப எண்ணங்கொண்ட பக்தர்கள், வேவன்டன் மலை உச்சியில் பத்து ஏக்கர் நிலத்தை இலங்கை அரசிடமிருந்து வாங்கி, பெரியகோவிலொன்றையும் ஆஞ்சநேய சுவாமிகளுக்குக் கட்டினர். ரம்பொட வேவன்டன் ஆஞ்சநேய சுவாமிகளின் ஆலயத்தின் கருவறையிலே எழுந்தருளியுள்ள, ஆஞ்சநேயசுவாமிகளுடைய சிலை, பதினெட்டு அடி உயரங் கொண்டதாகக் காணப்படுகின்றது.

ஆஞ்சநேயசுவாமிகளின் சிறப்புக்கள் அளவிடற்கரியது. கடலினும் பெரிது கற்றவர். அன்பால் அனைவரையும் ஆட்கொள்பவர். தாயினும் சாலப் பரிந்து அணைப்பவர். பண்பு, அடக்கம் இவற்றின் தலைமகனாக விளங்குபவர். இவ்வாறான ஆஞ்சநேயப் பெருமானுக்குக் காரணப் பெயாகள் பலவாகக் காணப்படுகின்றது. அஞ்சனையின் மகனாதலால் ஆஞ்சநேயர் என்றும், மாருதத்தின் சேயாக விளங்குவதால் மாருதி எனவும், வாயுவின் புத்திரனாகத் திகழ்வதால் சமீரணன் மகன் என்றும் போற்றுவர். வாயுபுத்திரன், கேசரி, காலின் மதலை, இராமதூதன், சொல்லின் மைந்தன், அஞ்சனை சிங்கம், குரவரச்சீயம், இராகவன் தூதன், நம்பன் போன்ற பல்வேறு சிறப்புப் பெயர்களும் ஆஞ்சநேயருக்கு உண்டு. இவ்வாறான போற்றுதலுக்குரிய ஆஞ்சநேயசுவாமிகள் பதினெட்டடி உயரங் கொண்டவராக மலையகத்திலுள்ள ரம்பொடப் பிரதேசத்திலே எழுந்தருளியுள்ளார். ரம்பொட ஆஞ்சநேயசுவாமிகளின் திருவுருவச்சிலையைத் தமிழ் நாட்டிலுள்ள மாமல்லபுரத்தின் தலைசிறந்த ஸ்தபதிகளுள் ஒருவராகிய முத்தையா அவர்கள் உருவாக்கியுள்ளார்கள். ஈழத்தில் மட்டுமன்றி இந்தியாவிலுள்ள ஆஞ்சநேய சுவாமிகளின் திருவுருவச்சிலைகளும் இவ்வாறாகவே உயர்ந்து அமைந்திருக்கும்.

ரம்பொட ஆஞ்சநேயசுவாமிகளின் பக்தர்கள் பலஅடி நீளம்கொண்ட வெற்றிலைமாலைகளையும், மலர் மாலைகளையும், ஆஞ்சநேயசுவாமிகளுக்கு வேண்டுதல்செய்து சமர்ப்பிப்பது வழக்கம். குறிப்பாக நவக்கிரகங்களில் கொடிய கிரகங்களாகக் கருதப்படும் சனி, ராகு ஆகியவற்றைப் பிரீதி செய்ய, விசுவரூப ஆஞ்சநேயருக்கு வடைமாலைசாற்றியும், பலவகைத் திரவியங்களால் அபிடேகங்கள் செய்தும், மலர்களாலும் வாசனைமிகு சந்தனத்தினாலும் அலங்காரங்கள் செய்து பிரார்த்தனைகளைச் செலுத்துவது மரபு. இவ்வாறான பிரார்த்தனைகளைப் பதினெட்டடி உயர ஆஞ்சநேயருக்குச் செலுத்தவதற்கு வசதியாகச் சிலையின் இருபக்கமும் ஏணிப்படிகள் அமைக்கப்பட்டுள்ளன. இப்படிகளில் ஏறியே ஆஞ்சநேயசுவாமிகளுக்கு மாலைகளைப் பூசகர் அணிவிப்பார்.

அசோகவனத்திலே சீதாப்பிராட்டி,வெற்றிலையைக் கிள்ளி, ஸ்ரீ ஆஞ்சநேயரின் சிரசிலேபோட்டு "சோக நாசகனாகிய ஸ்ரீ அனுமா! நீ என்றும் சிரஞ்சிவியாக வாழ்வாயாக" என வாழ்த்தியதால், வெற்றிலைச் சுருள் மாலையும், துளசி மாலையும் ஆஞ்சநேயருக்குச் சாற்றி வழிபடும் வழக்கம் ஏற்பட்டது. இயற்கைச்சூழலில் அமைந்திருக்கும் ரம்பொட ஆஞ்சநேயர் சந்நிதியில் அமைதியாக வணங்கிய பின், தியானம் செய்வதற்கு வசதியாக, ஆலயத்தின் கீழ் தியான மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறான சிறப்பு ஏனைய ஆலயங்களில் காணப்படுவது அபூர்வம். தியானம் செய்வதற்குரிய மனஒருமைப்பாட்டைப் பெறும் ஒருவரால், வாழ்வில் பல நன்மைகளைப் பெற இயலும் என்பதற்கு முனிவர்களும், ஞானிகளும் சான்றாகி வழிகாட்டியுள்ளனர். ஒவ்வொரு மனிதனிடமும் குறைந்த அதிர்வு எண்களையுடைய அதிர்வுகள் காணப்படுகின்றன.

*வளரும்...*



கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE
FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தெலைமேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
ᵉroted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

crc
CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

- மொன்றியால் விணைமைந்தன் எழுதுகின்றார்



# சிவாஜி கணேசனும் தமிழ்ச் சினிமாவும் #41

சிவாஜி ஐயா அவர்களை உலகிற்கு அறிமுகம் செய்து வைத்த "பராசக்தி" படத்தைப் பற்றியும் - அந்தப் படத்தில் இடம்பெற்ற காட்சிகள் பற்றியும் கஞ்சிக்குள் பயறு போட்டது போல் அவ்வப்போது, ஆங்காங்கே எழுதி இருந்ந்தேன். கொஞ்சம் விரிவாகவும் - சிவாஜி ஐயா, கணேசன் என அழைக்கப்பட்ட காலத்தில் "பராசக்தி" அவருக்கு எப்படி அருள் புரிந்தாள் என்பது பற்றியும் திரும்பிப் பார்ப்போம். அவரே சொல்கிறார்...!



"எனக்கு புதிய வாய்ப்புக் கிடைத்தது. அது ஒரு சின்ன கதை. அதையும் சொல்லி விடுகிறேன். அப்போழுது "பராசக்தி" என்றொரு நாடகம் நடந்து கொண்டிருந்தது. அது "பாவலர்" பாலசுந்தரத்தினுடைய நாடகம். "தேவி நாடக சபா" அதை நடத்திக் கொண்டிருந்தார்கள். என்னுடைய முதலாளி பி.ஏ பெருமாள் அவர்கள் அப்போது ஏவிஎம் ஸ்டுடியோவின் பல படங்களுக்கெல்லாம், அவர்தான் விநியோகஸ்தராக இருந்தார். பிஏ பெருமாள் அவர்கள் "பராசக்தி" நாடகத்தை படமாக எடுத்தால் என்ன? என்று நினைத்தார். அதற்காக ஏவிஎம் நிறுவனத்துடன் கலந்து பேசி பார்ட்னர்ீப்பில் பராசக்தி படத்தை எடுக்க முடிவு செய்தார்கள். அதற்காக "பராசக்தி" கதையை பாவலரிடமிருந்து வாங்கினார்கள். இந்தப் படத்தில் முக்கிய வே'த்தில் நடிப்பதற்கு புதுமுக நடிகர்கள் இருந்தால் நன்றாக இருக்கும் என நம்பினார்கள்.

அப்பொழுது தான் பெருமாள் முதலியார் மனதில் நான் புகுந்தேன். ஏனென்றால் என்னுடைய நாடகத்தை வேலூரில் அடிக்கடி அவர் பார்த்திருக்கிறார். என்னுடைய வாழ்க்கையை பாருங்கள், ஒவ்வொருத்தரும் சினிமா கம்பெனி முன்நின்று சந்தர்ப்பம் கேட்பார்கள். இல்லையென்றால் சிபாரிசில் வருவார்கள். இதுபோல் எல்லாம் நான் வாய்ப்புத் தேடி போகவில்லை.

எனது முதல் சினிமா வாழ்க்கையே விமானத்தில் தான் ஆரம்பித்தது. டெஸ்ட் எடுப்பதற்காக பிளேனில் அழைத்துவரப்பட்ட முதல் இந்திய நடிகன் நானாகத்தான் இருப்பேனோ! திருச்சியிலிருந்து "டக்கோடா" என்ற விமானத்தில் சென்னை வந்து சேர்ந்தேன். எனக்கு ஏவிஎம் ஸ்டுடியோவில் மேக்கப் டெஸ்ட் எடுத்தார்கள். எனக்கு டெஸ்ட் எடுக்கும் பொழுது முதல் வார்த்தையே "சக்சஸ்" என்று சொல்லச் சொன்னார்கள். நானும் "சக்சஸ்" என்று சொன்னேன்.

முதன்முதலில் சிவாஜி ஐயாவுக்கு மேக்கப் டெஸ்ட் எடுத்த பழம்பெரும் ஒளிப்பதிவாளர் மாருதிராவ் சிவாஜி பற்றி என்ன சொன்னார் என்று பார்ப்போம்.

""நடிகர் திலகம்" சிவாஜி கணேசன் அவர்களை முதன் முதலாக "மேக்கப் டெஸ்ட்" எடுக்கும் பெரும் பாக்கியம் எனக்கு கிட்டியது. கலையுலகத் தந்தை செட்டியார் (ஏவிஎம்) அவர்கள் தான் என்னிடத்தில் அந்த பொறுப்பை ஒப்படைத்தார். "ஓர் இரவு" படத்தில் ஒளிப்பதிவு செய்து கொண்டிருந்த நான், மதிய இடைவேளையில் படப்பிடிப்பு அரங்கில் முதலில் சிவாஜிகணேசனைச் சந்தித்தேன். "நீங்களும் தஞ்சாவூர்காரர் தானே...", என்று வேடிக்கையாக பேசியபடி, சிவாஜி அவர்கள் என்னுடன் அன்பாகப் பழகினார்.



சாதாரணமாக "ஸ்டில்கள்" தான் மேக்கப் டெஸ்ட் டிற்காக எடுப்பது. ஆனால் கேமராவில் சுமார் 500 அடி வரை நான் அவரை நடிக்க வைத்து ஒளிப்பதிவு செய்தேன்.

நாடக வசனம் ஒன்றை மிக அழகாகப் பேசினார். நீண்ட வசனத்தை அப்போதே பிரமாதமாக உச்சரித்து நன்றாக நடித்தார். இரண்டு மணி நேரத்திற்கு மேல் "க்ளோஸ் அப்" "மிட் 'ாட்" "லாங் 'ாட்" என்று பல்வேறு கோணங்களில் (டீட்டையில் தெரியும்படி) அவர் நடிப்பைப் படமாக்கினேன். அன்று மாலையே செட்டியார் என்னை அழைத்து "எப்படி இருக்கிறார்" என்று என் கருத்தைக் கேட்டார். "ரொம்ப அருமையாக இருக்கிறார். மிக அழகாக - நன்றாக நடிக்கின்றார். முகபாவங்கள், வசன உச்சரிப்பு எல்லாம் சிறப்பாக இருக்கிறது என்றேன்.

அடுத்தநாள், நான் எடுத்த டெஸ்ட் படம் வந்து விட்டது. கிரு'ணன் - பஞ்சு, தயாரிப்பாளர் பெருமாள் - முதலியார், ஆகியோருடன் செட்டியாரும், நானும் படம் பார்த்தோம். எல்லோருக்கும் மனதிற்கு நிறைவாக இருந்தது.

முதன்முதலாக "பராசக்தி" படத்தில் சிவாஜி கணேசன் நடித்த காட்சி பைத்தியக்காரனை போல் சுமைதாங்கி அருகில் "சக்சஸ்" என்று சொல்வதுதான்! படம் சக்சஸ் தான்! கலையுலகில்... நடிப்புத்துறையில்... அவர் சொன்ன சொல் அவருக்கு என்றும் (சக்சஸ்) வெற்றியைத் தேடித்தந்தது!

"பராசக்தி" படத்தை முழுவதும் எடுத்து முடித்து விட்டோம். செட்டியார் படம் பார்த்துவிட்டு, காமெடி கலந்து பாட்டு ஒன்று இருந்தால் நன்றாக இருக்கும் என்று விரும்பினார். "ஆரியக் கூத்தாடினாலும் தாண்டவக்கோனே"... என்ற பாடலை 24 மணி நேரம் தொடர்ந்து படப்பிடிப்பு நடத்தி, ஒரே மூச்சில் பாடலை எடுத்து முடித்தோம். "தெய்வப்பிறவி" படத்தில் முக்கியமான காட்சியில் குடையால் எஸ் எஸ் ஆரை பத்மினி அடிப்பார். நடிகர் திலகம் சிவாஜி நடந்து சென்று, மாடிப் படியில் நின்றபடி திரும்பிப் பார்ப்பார். வசனமே கிடையாது! முகபாவத்தில் நடிப்பில் முத்திரை பதிப்பார். அருமையான "குளோசப்" காட்சி அது!

லைட்டிங் என்ன செய்திருக்கிறோம் என்பதை சொல்லி விட்டால் அருமையாக நடித்து, கேமராமேனுக்கு நல்ல பெயர் வாங்கிக் கொடுத்துவிடுவார். ஒரு தடவை ஒத்திகை, ஒரே டேக்கில் படமாக்கிவிடலாம். கேமராமேன் தான் கவனமாக இருக்க வேண்டும். இரண்டாவது டெஸ்ட் எடுக்க வேண்டும் என்று நான் கேட்டதேயில்லை. அதனால் என் மீது தனி மதிப்பு அவருக்கு!

நடிப்பு மட்டுமல்ல, கேமரா கோணத்திற்கு எப்படி இருந்தால் நன்றாக இருக்கும் என்பதையும் கவனித்துக் கொள்வார். கேமரா மேனுக்கு நடிப்பவர்கள் இப்படி செய்வது பெரிய உதவி. படம் அழகாக, காட்சி அருமையாக அமையும். நடிகர் திலகத்திற்கு நிகர் அவர்தான். நடிப்பில் முத்திரை பதித்த முத்திரை பதித்தவர் அவர்தான்!

இவ்விதம் புகழ்பெற்ற நட்சத்திரத்தை கேலி கிண்டல் செய்த சம்பவங்களும் ஏராளம் உண்டு. "கேமராவுக்கு முன் "சக்ஸஸ்" என்று நான் கூறியதை "சத்சக்" என்று சொல்கிறேன் என்றார்கள். என்று மனம் வெதும்பி தனது சுயசரிதையில் கூறியிருக்கிறார் சிவாஜி.

"நான் ராஜா மாதிரி நாடக கம்பெனியில் இருந்தவன். சாப்பாடு இருக்கோ இல்லையோ க்'டமோ ந்'டமோ "ராஜபாட்" போட்டவன். இங்கே வந்தவுடன் "நான் பேசும் வார்த்தையே தவறு", என்கிறார்களே என்று நினைத்து மிகவும் வருத்தப்பட்டேன். அதற்குப் பிறகு வசனம் பேச ஆரம்பித்தேன்.

மறுபடியும் ஒரு சவுண்ட் இன்ஜினியர், ஒருநாள் டைரக்டர் கிரு'ணனிடம் "என்னையா

(தொடர்ச்சி 19ம் பக்கம்)


MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CR PLAN

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

மலேசிய மடல்

# பிபிசி தமிழோசையில் ஆரிய ஆதிக்கமா? அல்லது ஆர்.எஸ்.எஸ். மேலாதிக்கமா??

கோலாலம்பூர், மார்ச் 14:

**இ**லண்டன் பிபிசி தமிழோசையின் போக்கு அண்மைக் காலமாக தமிழ் மொழிக்கும் தமிழ் இனத்திற்கும் எதிரான வகையில் மெல்ல மெல்ல உருவாகி வருகிறதோ என்ற ஐயம் எழுந்துள்ளது.

குறிப்பாக, தமிழினத்தின் தலைநிலமான தமிழகத்தின் அரசியல் குறித்தும் தமிழோசையின் போக்கு அப்படித்தான் இருக்கிறது. ஒரு காலத்தில் உண்மையில் உரைகல்லாக விளங்கிய தமிழோசை, அண்மைக் காலத்தில் *“சொல்லப்படுகிறது”, “நம்பப்படுகிறது”, “பெயர் குறிப்பிட விரும்பாத ஒருவர் தெரிவிக்கிறார்”* என்னும் சப்பைக்கட்டுகளுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டு ஏறக்குறைய தமிழகத்தின் தினமலர், தின மணி இதழ்களைப் போல உருமாறி வருகிறது.

பெயர் குறிப்பிட விரும்பாத ஒருவரின் கருத்தை தினமலரும் அதையொத்த ஏடுகளும் வெளியிடலாம். பிராமண முதலாளிகள் நடத்தும் ஏடுகள் அப்படித்தான் இருக்கும். பார்ப்பனர்களின் உள்ளம் எப்படிப்பட்டது என்பதை டாக்டர் டி.என். நாயர் நூறு ஆண்டுகளுக்கு முன்னமே இலண்டன் வட்டமேசை மாநாட்டில் அப்பட்டமாக படம் பிடித்துள்ளார்.

தமிழோசைக்கு அந்த இழிநிலை ஏன் ஏற்பட வேண்டும்?

விக்னேஷ். அ, ஆ. விஜயானந்த் போன்ற செய்தியாளர்களை இதற்காக தமிழோசை நியமித்துக் கொண்டுள்ளது. இவர்களைப் பார்த்தால் தமிழர்களாகத் தெரியவில்லை.

பிபிசி தமிழோசை செய்திகளில் வகை தொகையின்றி ஏற்படும் மொழிக் கொலைகளைப் பற்றியும் வாக்கிய சிதைவுகளைப் பற்றியும் கவலைப்படுவதாகவேத் தெரியவில்லை. போதாக்குறைக்கு ஏராளமான எழுத்துப் பிழை அனைத்தையும் சகித்துக் கொண்டு படித்துத் தொலைத்தால், தமிழர்களின் பெருமையை எடுத்துரைக்கும் குமரிக் கண்ட வரலாற்றையே பொய் என்றும் புனைசுருட்டு என்றும் 2021 பிப்ரவரி 11-ஆம் நாள் வெளியிட்ட செய்தி மூலம் தெரிவித்துள்ளது தமிழோசை. அதை எழுதியவர் விக்னேஷ்.அ.

தமிழகத்தின் அண்மைய பொதுத் தேர்தலுக்கு முன் வெளியிடப்பட்ட அரசியல் செய்திகளில் தி.மு.க. கூட்டணிக்கு எதிர்மறையான கருத்துகளையே ஆ. விஜயானந்த் எழுதியிருந்தார். ஒரு கருத்துகூட ஆணி அடித்தாற்போல உறுதியாக இல்லாமல் *“சொல்லப்படுகிறது”, “நம்பப்படுகிறது”, “பெயர் குறிப்பிட விரும்பாத ஒருவர் தெரிவிக்கிறார்”* என்ற பாணியிலேயே இருந்தது.

நேற்று, 2021 ஏப்ரல் 13-ஆம் நாள் அம்பேத்கரைப் பற்றி எழுதப்பட்ட ஒரு செய்தி, அவரை சிறுமை படுத்தும் விதமாக அமைந்துள்ளது.

இன்று ஏப்ரல் 14, அவரின் பிறந்த நாள். அண்ணல் அம்பேகரைப் பற்றி பெருமை கொள்ளும் செய்திகள் எத்தனையோ இருக்கும்போது, அவர் ஒரு பாலியல் வழக்கில் முன்னிலை ஆனதாகவும் அதிலும் அவர் தோற்றுப் போனதாகவும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுவாக, இந்தியாவில் ஆரியர் (பார்ப்பனர்) அல்லாத இனங்களையும் தலைவர்களையும் சிறுமைப்படுத்தும் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் ஆதிக்கத்திற்கு பிபிசி தமிழோசை ஆட்பட்டு விட்டதோ என்று ஐயுற வேண்டி இருக்கிறது.

இந்திய அரசியல் சாசன மறு வரையறைக் குழுவின் உறுப்பினர்களாக சாதுல்லா, கே.எம். முன்ஷி, அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர், என்.கோபால சாமி ஐயங்கார் உள்ளிட்ட ஐவரை ஜவஹர் லால் நேரு நியமித்தா. இந்த ஐவரும் உயர்சாதிக் காரர்கள் அல்லது பிராமணர்கள்.

இந்த ஐவருக்கும் தலைவராக சட்ட மேதை அண்ணல் அம்பேத்கரை நியமித்தார் நேரு. இதே அம்பேத்கர் தன்னுடைய பள்ளி நாட்களில் மற்ற மாணவர்களுடன் சேர்ந்து ஊர்ப் பொதுக் குளத்தில் இறங்கி குளித்துவிட்டார் என்பதற்காக, அந்த ஊரைச் சேர்ந்த பார்ப்பனர்கள் “ஐயோ, ஐயய்யோ, தீண்டத்தகாத குடும்பத்தைச் சேர்ந்த இந்த சண்டாள சிறுவன், ஊர்க் குளத்தை தீட்டாக்கி விட்டானே” என்று கதறிக் கொண்டு, அரை குறையாக எரிக்கப்பட்ட பிணங்கள் மிதக்கும் கங்கை நதியில் இருந்து 109 குடங்களில் புனித நீரைக் கொண்டு வந்து மந்திரங்கள் ஓதி குளத்தின் தீட்டைக் கழித்தனர். அப்படிப்பட்ட அம்பேத்கர்தான் அவமானங்களையும் சிறுமைகளையும் பொறுத்துக் கொண்டு தன் அறிவாலும் ஆற்றலாலும் இந்த அளவுக்கு உயர்ந்தார்.

அரசியல் களத்திலும் சமூக தளத்திலும் காந்தியுடன் சரி சமமாக மல்லுக்கு நின்றவர் அம்பேத்கார். இப்படி எத்தனையோ பெருமைக்குரிய கூறுகள் ஆயிரம் இருக்க, “அம்பேதகர் இரண்டு உரிமைகளைக் குறித்து மிகவும் உறுதியாக இருந்தார் அவற்றில் ஒன்று பாலியல் கல்விக்கான உரிமை” என்று சொல்லி அவரை தமிழிலக்கணத்தின் வஞ்சப்புகழ்ச்சி அணியைப் போல அவரின் பெருமையாக இதைக் குறிப்பிட்டு, மறைமுகமாக அம்பேத்கரை சிறுமைப்படுத்தி உள்ளது பிபிசியின் தமிழோசை.

இந்திய அரசியல் சாசனம் அனைத்திந்திய அரசியல் சட்டம் என்ற பெயரில் 1935-ஆம் ஆண்டு பிரிட்டிஷ் நாடாளுமன்றக் குழுவால் இயற்றப்பட்டு பின் இங்கிலாந்து ராணியால் அங்கீகரிக்கப்பட்டு, அதன்பின்னரே அனைத்து இந்தியாக்களிலும் நடைமுறைக்கு வந்தது. அந்தக் காலகக்கத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட இந்தியாக்கள் இருந்தன. அதனால்தான், “அனைத்து இந்தியா”, “அகில இந்தியா” என்ற வழக்கெல்லாம் அன்றைய நாட்களில் இயல்பாக இருந்தன.

1947-இல் இந்தியா விடுதலை பெற்று, ஒரே நாடாகிய பின், அதுவும் பாகிஸ்தான், வங்க தேசம் போன்ற நாடுகள் பிரிந்த பின், இன்னமும் “அனைத்து இந்தியா”, “அனைத்து இந்தியா” என்றும் “அகில இந்தியா” என்றும் பெருஞ்பாலோர் குறிப்பிடுவது வேடிக்கை. எம்ஜிஆர், சரத்குமார் ஆகியோர் தங்களின் கட்சிகளின் பெயரில் “அனைத்து இந்தியா” என்பதை இணைத்துக் கொண்டது இன்னும் விநோதம்.

கோலாலம்பூர் துன் சம்பந்தன் மாளிகையில் ஏதோ ஒரு படப் பிடிப்பிற்கான காட்சியில் சரத்குமாரும் கவுண்டமணியும் சேர்ந்து நடித்தனர். அந்தக் காட்சி, சம்பந்தப்பட்ட இயக்குநருக்கு மனநிறைவாக இல்லாததால் திரும்பத் திரும்ப எடுக்கப்பட்டது. இருந்தாலும், இயக்குநரின் எண்ணம் ஈடேறுவதாகத் தெரியவில்லை. சலித்துப் போன இயக்குநர் கொஞ்ச நேரம் இடைவெளி விட்டார். இதுதான் சமயம் என்று சரத்குமாரை சந்தித்து அவசர அவசரமாக அறிமுகப்படுத்திக் கொண்டு, அவசரம் அவசரமாக பேட்டி கண்டேன்.

இனிக்க இனிக்க பேசிய சரத்குமாரிடம், ஒரு கட்டத்தில் உங்கள் கட்சிக்கு “அனைத்து இந்திய மக்கள் சமத்துவ கட்சி” என்று பெயர் வைத்திருக்கிறீர்களே, தமிழ் நாட்டைத் தவிர வேறு எந்தெந்த மாநிலங்களில் உங்களின் கட்சிக்கு கிளைகள் இருக்கின்றன என்று கேட்டேன்.

உடனே, குரலை உயர்த்த ஆரம்பித்தார் சரத்குமார் காங்கிரஸ் கட்சிக்கும்தான் அனைத்திந்திய காங்கிரஸ் என்று பெயர் இருக்கிறது. சோனியா காந்தியிடம் இந்தக் கேள்வியைக் கேட்பீர்களா என்று கொக்கரித்த சரத்குமாரிடம்.

“சோனியா காந்தியை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தால், நிச்சயம் அவரிடமும் “இருப்பது ஓர் இந்தியாதானே, பின் எப்படி அனைத்து இந்தியா என்று சொல்லிக் கொள்கிறீர்கள்” என்று கேட்பேன். ஆனால், நீங்கள் குரலை உயர்த்தாமல் பதில் சொல்லுங்கள் என்றதும் உடனே ஆவேசமாக எழுந்த சரத்குமார் தன்னிச்சையாக பேட்டியை முடித்துக் கொண்டு கத்திக் கொண்டே சென்றார்.


நக்கீரன்

சளிப்படைந்த நான், உடன் இருந்த செய்தியாளரான முகமது அலியிடம், “என்னய்யா இவர் நாயக நடிகராகத் தெரியவில்லையே வில்லனைப் போல நடந்து கொள்கிறாரே” என்றேன். ஆமாம்ய்யா என்று முகமது அலி வழிமொழிந்த சம்பவமும் நடைபெற்றது.

பிபிசி தமிழோசையில் நேற்று ஏப்ரல் 13-ஆம் நாளில், அதே ஆ.விஜயானந்த் என்னும் செய்தியாளர், தமிழக அரசியல் குறித்து வெளியிட்டுள்ள செய்தியில், இந்திய உளவுத் துறை, தமிழக உளவுப் பிரிவினர், அதிமுக-வின் தேர்தல் வியூகர் சுனிலின் குழுவினர் ஆகிய முத்தரப்பினர் வழங்கிய அறிக்கைகளைக் கண்டு இடைப்பாடி பழனிச்சாமி மிகுந்த உற்சாகத்தில் இருக்கிறார் என்றும் அதிமுக கட்சி 80 இடங்களுக்கு மேல் வெல்லும் என்றும் அதற்கு மேலும் கிடைத்தால் அது “போனஸ்” என்றும் விஜயானந்த் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், பாஜக சார்பில் நயினார் நாகேந்திரன், வானதி சீனிவாசன், அரவக்குறிச்சி தொகுதியில் அண்ணாமலை ஆகியோர் வெல்வர் என்றெல்லாம் இந்தச் செய்தியாளர் குறிப்பிட்டுள்ளார்.

இவர் சொல்ல வேண்டியதை யெல்லாம் சொல்லிவிட்டு, கடைசியில் நம்பப்படுகிறது, கருத இடமிருக்கிறது என்று குறிப்பிட்டு நழுவிக் கொள்கிறார். இதுவெல்லாம், அறம் தவறிய ஊடகப்போக்கு.

ஒருவேளை, நடைபெற இருக்கின்ற அல்லது மெல்ல நடைபெற்றுக் கொண்டிடுக்கும் தேர்தல் தில்லுமுல்லு வேளைகளுக்கு ஆ.விஜயானந்த் மூலம் எந்தத் தரப்போ வேலி அமைத்துக் கொள்கிறதோ என்ற ஐயமும் ஏற்படுகிறது. இந்தச் செய்தி குறித்து, திமுக-காங்கிரஸ் - மதிமுக - விசிக உள்ளிட்ட கட்சியினர் கூடுதல் விழிப்பு நிலையில் இருக்க வேண்டும்.

ஒன்றுமட்டும் பளிச்சென தெரிகிறது. இலண்டன் பிபிசி தமிழோசையில் பார்ப்பன ஆதிக்கம் அல்லது ஆர்.எஸ்.எஸ். மேலாதிக்கம் ஏற்பட்டுள்ளதோ என்ற ஐயம்தான் அந்த “ஒன்று”.

**- நக்கீரன்** (Nakkeeran)

013-244 36 24

---

*(18ம் பக்கத் தொடர்ச்சி)*



இந்தப் பையன் மீன் மாதிரி வாயை திறக்கிறான் என்று கூறிக் கேலி செய்திருக்கிறார். திரைப்படத் துறையில் பெரிய மேதையான ஏவிஎம் செட்டியார் அவர்கள் என்னைப்போல் ஆயிரம் கலைஞர்களை உண்டாக்கியவர், அவரே, “ஏம்பா இந்தப் புது பையனை போட்டு வி'ப்பரிட்சை செய்கிறீர்கள். கே ஆர் ராமசாமி அல்லது டி ஆர் மகாலிங்கம் போன்றவர்களை நடிக்கச் சொல்லி படத்தை முடியுங்கள் என்று சொல்லியிருக்கிறார். அதே ஏவிஎம் செட்டியார் பிற்காலத்தில் “அந்த நாள்” படம் எடுக்கும் போது ”ஏன்பா” மற்றவர்களை போட்டு வி'ப்பரிட்சை செய்கிறீர்கள். சிவாஜியை வைத்து எடுங்கள் என்றார். ஏவிஎம் செட்டியார் அவர்கள் இந்த நிகழ்ச்சியை அவரது வாழ்க்கை புத்தகத்தில் எழுதியுள்ளார்.

“பராசக்தி“ படத்தின் போது சிவாஜியின் நடிப்பு திறமை தெரியாது. அதனால அப்படி கூறினேன். இப்பொழுது தெரிந்து கொண்டேன்” என்று பெருந்தன்மையுடன் குறிப்பிட்டுள்ளார்!. “தென்றலைத் தீண்டியதில்லை! தீயை தாண்டியவன்“ என்று கலைஞர் சிவாஜிக்கு எழுதியதைப் போன்று பல தடைகளை தாண்டி சிகரங்களைத் தொட்டவர் சிவாஜி அவர்கள்!

“பராசக்தி“ நாயகன் கணேசன் தான் என்று விடாப்பிடியாக வலியுறுத்தி வந்த தயாரிப்பாளர் பெருமாள் முதலியார் அறிஞர் அண்ணா, கலைஞர் மு கருணாநிதி, ஆகியோரின் நம்பிக்கையை காப்பாற்றியவர் நமது சிவாஜி ஐயா!

இதை மனதில் வைத்துக் கொண்டு பின்னாளில் அறிஞர் அண்ணா அவர்கள் சிவாஜி பற்றி கூறியதையும் பதிவு செய்கிறேன். ”சிவாஜி கணேசன் போன்ற அற்புதமான கலைஞர்கள் இருக்கிறார்கள் என்பதே நமக்குப் பெருமை அல்லவா? நம் நாட்டில் இப்படிப்பட்ட கலைஞர்கள் இருப்பது நமக்கு கிடைத்த புகழ் அல்லவா? அந்த வகையில் நாம் பெருமையும், பூரிப்பும் அடையவேண்டும். கலைஞர்கள் இன்று சமுதாயத்தில் புகழ் பெற்று இருக்கிறார்கள். நீண்ட நாட்களுக்கு பிறகு இன்று மதிப்பு உயர்ந்திருக்கிறது!

கலைஞர்களை ஒதுக்கப்பட்டவர்களாக கருதி இழிவு படுத்தப்பட்ட காலம் முதலே திரையுலகில் எனக்கு தொடர்பு உண்டு. சிவாஜி கணேசன் சாதாரண நடிகராக இருந்து இன்று தலை சிறந்த திரைப்பட நடிகரான காலம் வரை அவரை எனக்கு தெரியும் நடிகர்களுக்கு எதைக் கண்டாலும் அதை படம் எடுத்து மனதில் பதிய வைத்துக் கொள்ளும் ரசிப்புத்தன்மை வேண்டும்.

ஒரு சிலராலேயே தான் இப்படிக் கண்ணில் கண்டதை, சந்தர்ப்பம் வரும்போது நடித்துக் காட்ட முடியும். நாம் காண்கிறோம் பின்னர் மறந்துவிடுகிறோம். உண்மையான நடிகன் கண்ணால் கண்டதை நேரம் வரும்போது நடித்துக் காட்டி திறமையை வெளிப்படுத்த வேண்டும். அந்த வகையிலே தம்பி சிவாஜிகணேசன் சிறந்து விளங்குகிறார். நடிப்பவர்கள், பாத்திரங்களை ஏற்று நடிக்க வேண்டும். பாத்திரங்களாகிவிடக்கூடாது. இந்த சிவாஜிகணேசன் தன் வாழ்க்கையில் சந்தித்த பாத்திரங்களை தன் திறமையான நடிப்பால் திரையில் திருப்பித் தருகிறார். இதுதான் அவருடைய திறமை!

“பராசக்தி“ வந்தால் தான் சிவாஜி கணேசன் புகழ் அடைந்தார் என்று கூறினார்கள். அது சரியல்ல..!

“பராசக்தி“ வராமல் இருந்தாலும் சிறிது காலத்திற்குப் பின் கண்டிப்பாக அவர் புகழ் பெற்றிருப்பார்.

வைரம் கிடைப்பது கடினம் ஆனால் எவ்வளவு நாள் ஆனாலும் வைரம் மின்னாமல் போகாது.

அமெரிக்காவை கொலம்பஸ் கண்டுபிடித்திருக்காமல் இருந்தால் அமெரிக்கா கிடைத்திருக்காதா என அதுபோலத்தான் சிவாஜி கணேசன் சிவாஜி கணேசன் ஒரு படத்தில் “கர்ணன்“ வேடம் போட்டார். கர்ணன் பிறந்தது ஓரிடம். வளர்ந்தது ஓரிடம். கர்ணனை பெற்றெடுத்த “குந்தி“ தொலைவிலிருந்து வாழ்ந்ததை வாழ்க! வாழ்க!! என்று கூறி தூரத்தில் இருப்பவன் நானல்ல! அவர் என்றுமே என் உள்ளத்தில் உள்ளார். அவரை என்றும் வாழ்த்திக் கொண்டிருக்கிறேன். அவர் அரும்பாக இருக்கும் போதே, அது மலராகும் என அறிந்தவன் நான். ஆகவே, எல்லோரையும் விட நான் மகிழ்வடைகிறேன். தம்பி கணேசன்! எங்கிருந்தாலும் வாழ்க!

(பல வருடங்களுக்கு முன் அண்ணா முதலமைச்சரான பின்பு சிவாஜிக்கு நடந்த பாராட்டு விழாவில் பேசியது)

*நினைவுகள்... காட்சிகள் விரியும்...*

*வீணை மைந்தன்*

# முகக்கவசத்துக்கு ஒத்துழைப்பு தாருங்கள்

## சுகாதாரத் துறைச் செயலர் வேண்டுகோள்



''பொதுமக்கள் இந்த நேரத்தில் எண்ணிக்கையைப் பார்த்து பதற்றமடைந்து, அதே நேரத்தில் வெளியில் செல்லும்போது முகக்கவசம் அணியாமல் இருக்கக் கூடாது. ஒருவருக்கு வந்தால் 10 பேருக்கு வந்துவிடுகிறது. அந்தச் சங்கிலியை உடைக்க வேண்டும்'' என சுகாதாரத் துறைச் செயலர் ராதாகிருஷ்ணன் வேண்டுகோள் வைத்தார்.

சென்னை ஓமந்தூரார் மருத்துவமனையில் நடிகர் விவேக் தடுப்பூசி போட்டுக் கொண்டார். பின்னர் அவர் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்தார்.இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட சுகாதாரத் துறைச் செயலர் ராதாகிருஷ்ணன் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:''நோய்த்தொற்று அதிகமாகும் நிலையில், சமுதாயத்தில் ஆதிக்கம் செலுத்தக் கூடியவர் என்கிற முறையில் நடிகர் விவேக், அரசுக்கு உதவும் வகையில் பல பிரச்சாரங்களைச் செய்து கொடுத்துள்ளார். இம்முறையும் தடுப்பூசி போட்டுக் கொண்டு பொதுமக்களைத் தடுப்பூசி போட வலியுறுத்தியதற்காக அவருக்குத் தமிழக அரசு சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

கரோனா நோய் குறித்து நேற்றிலிருந்து தடுப்பூசி திருவிழா தொடங்கியது. நேற்றைய தொற்று இந்தியாவில் 2 லட்சத்தைக் கடந்துள்ளது. அதிகபட்சமாக மகாராஷ்டிராவில் 58,952 பேருக்கும், உ.பி.யில் 20,439 பேருக்கும், டெல்லியில் உள்ள ஒரு நகரத்தில் மட்டும் 17,882 பேருக்கும், சத்தீஸ்கரில் 14,850 பேருக்கும் தொற்று ஏற்பட்டுள்ளது. கேரளா போன்ற பல மாநிலங்களுக்குப் பின் தமிழ்நாட்டில் 7,919 என்கிற எண்ணிக்கையில் தொற்று உள்ளது. இந்த நேரத்தில் நாம் பதற்றப்படக் கூடாது. இந்த நேரத்திலும் குறிப்பிட வேண்டியது இறப்பு விகிதம் 1.35% என்று மிகவும் குறைந்துள்ளது. முதலில் நாம் இந்த நேரத்தில் செய்யவேண்டியது 45 வயதைக் கடந்த அனைவரும் தடுப்பூசி போட்டுக்கொள்ள வேண்டும்.

சாதாரணமாக ஒரு விஷயத்தை எடுத்துக்கொள்ள வேண்டாம். நமக்குத் தொற்று வராது, கூட்டத்தில் முகக்கவசம் இல்லாமல் சென்றாலும் எனக்கு கரோனா வராது என்கிற எண்ணத்தைக் கைவிட வேண்டும்.சங்கிலி என்பார்கள், நம் கண்ணுக்குத் தெரியாமல் பரவும் கிருமி அது. அதை உடைக்க வேண்டும் என்றால் கட்டாயம் முகக்கவசம் அணிய வேண்டும். முகக்கவசம் மூலமாகத்தான் உடைக்க முடியும். பதற்றப்பட வேண்டாம். நமக்கு அருமையான மருத்துவ முறை உள்ளது.

சென்னை, கோவை போன்ற இடங்களில் பொதுமக்கள் அவர்களாகத் தேர்வு செய்யும் மருத்துவமனைக்குச் செல்வதால் அதற்கு வழிகாட்ட டிஎம்எஸ், டிடிஎச்சில் கட்டுப்பாட்டறை அமைத்துள்ளோம்.பொதுமக்கள் இந்த நேரத்தில் எண்ணிக்கையைப் பார்த்துப் பதற்றமடைந்து அதே நேரத்தில் வெளியில் செல்லும்போது முகக்கவசம் அணியாமல் இருக்கக் கூடாது. ஒருவருக்கு வந்தால் 10 பேருக்கு வந்துவிடுகிறது. அந்தச் சங்கிலியை உடைக்க வேண்டும்.

75,000 பேர் தடுப்பூசி போட்டுக்கொண்டார்கள். இன்று 1 லட்சம் பேர் போடுவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். எங்களுடைய ரிப்போர்ட் 2 லட்சம் பேர் ஒரு நாளைக்குப் போடவேண்டும் என்பதே. மாற்றுத்திறனாளிகள், விளையாட்டு வீரர்கள் மட்டுமல்ல வயது வரம்பின்றி அனைவருக்கும் தடுப்பூசி போடத் தரவேண்டும் என்று மத்திய அரசிடம் கோரியுள்ளோம். அதற்கு என்று ஒரு கமிட்டி உள்ளது. அதிலும் கோரியுள்ளோம்.மழைக்காலம் காரணமாக சூடான உணவுகளை மட்டும் உண்ண வேண்டும். கரோனா மட்டுமல்ல 3 மாதத்திற்குரிய மருந்துகளைத் தயாராக வைத்துள்ளோம். மக்கள் மருந்தைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். ஆனால், ஒத்துழைப்பு தேவை. கூட்டமாக அனைவரும் ஒன்று சேரக் கூடாது. மார்க்கெட், கடைத்தெரு என கும்பலாக ஒன்றுகூடக் கூடாது''. இவ்வாறு சுகாதாரத் துறைச் செயலர் தெரிவித்தார்.

# கரோனா பாதிப்பு 8 ஆயிரத்தை நெருங்கியது; தமிழகத்தில் கட்டுப்பாடுகள் மேலும் தீவிரமாகுமா? தலைமைச் செயலர் ஆலோசனை



கரோனா தொற்று தொடர்ந்து அதி கரித்து வருவதால் தமிழகத்தில் கட்டுப் பாடுகளை கடுமையாக்குவது தொடர் பாக தலைமைச் செயலர் ராஜீவ் ரஞ்சன் இன்று ஆலோசனை நடத்து கிறார். தமிழகத்தில் கரோனா வைரஸ் பரவல் தொடர்ந்து அதிகரித்து வரு கிறது. தினசரி பாதிப்பு 8 ஆயிரத்தை நெருங்கியுள்ளது. நோயாளிகளால் மருத்துவமனைகளில் படுக்கைகள் நிரம்பியுள்ளன.

இதனிடையே, தமிழ கத்தில் கரோனா பாதிப்பு, தடுப்பு நட வடிக்கைகள் குறித்து உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி கேள்வி எழுப்பியிருந் தார். இதனால், சுகாதாரத் துறை செயலர் ஜெ.ராதாகிருஷ்ணன் நேரில் சென்று விளக்கம் அளித்ததுடன், உயர் நீதிமன்ற வளாகத்தில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித் தும் தெரிவித்தார்.

தமிழகத்திலும் தொற்று அதிகரித்து வருவதால் ஊரடங்கு கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்படும் என கூறப்படுகிறது. இது தொடர்பாக தலைமைச் செய லர் ராஜீவ் ரஞ்சன் தலைமையில் இன்று ஆலோசனை கூட்டம் நடக் கிறது. இதில், சுகாதாரத் துறை செய லர் மற்றும் இதர துறைகளின் செயலர்கள், மருத்துவ நிபுணர் குழுவினர் பங்கேற்கின்றனர். தமிழகத்தில் புதிய உச்சமாக கரோனா பாதிப்பு 8 ஆயிரத்தை நெருங்கியுள்ளது. இது தொடர்பாக தமிழக சுகாதாரத் துறை நேற்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:தமிழகத்தில் நேற்று புதியதாக 4,797 ஆண்கள், 3,190 பெண்கள் என மொத்தம் 7,987 பேர் கரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டனர்.

அதிக பட்சமாக சென்னையில் 2,558 பேருக்கு தொற்று ஏற்பட்டுள்ளது. இதன்மூலம் தமிழகத்தில் பாதிப்பு எண்ணிக்கை 9 லட்சத்து 62,935 ஆக அதிகரித்துள் ளது. தமிழகம் முழுவதும் இதுவரை மொத்தம் 8 லட்சத்து 91 ஆயிரத்து 839 பேர் குணமடைந்துள்ளனர். நேற்று மட்டும் 4,176 பேர் குணமடைந்து வீடுகளுக்கு சென்றனர். 58,097 பேர் சிகிச்சையில் உள்ளனர்.அரசு மற்றும் தனியார் மருத்துவ மனைகளில் நேற்று மட்டும் 29 பேர் உயிரிழந்தனர். இதையடுத்து, தமி ழகத்தில் கரோனாவால் உயிரிழந்த வர்களின் எண்ணிக்கை 12 ஆயிரத்து 999 ஆக உயர்ந்துள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

அமைச்சருக்கு கரோனாதமிழக சட்டத் துறை அமைச்சர் சி.வி.சண்முகத்துக்கு கரோனா அறிகுறிகள் இருந்ததால் திண்டிவனம் அரசு மருத்துவமனையில் நேற்று பரிசோதனை செய்துகொண்டார். இதில் அவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட்டுள்ளார். மீண்டும் ஊரடங்கு?தலைமைச் செயலர் தலைமையிலான ஆலோசனை கூட்டத்துக்கு பிறகு, புதிய அறிவிப்புகள் வெளியாகலாம் என கூறப்படுகிறது. குறிப்பாக, கடைகள் திறக்கப்படும் நேரம் குறைப்பு, சனி, ஞாயிறுகளில் ஊரடங்கு உள்ளிட்ட சில கூடுதல் கட்டுப்பாடுகள் அமல்படுத்தப்படலாம் என கூறப்படுகிறது.

கரோனா பாதிப்பு நிலை மேலும் மோசமானால், அடுத்த வாரத்தில் முழு ஊரடங்கை அமல்படுத்தவும் வாய்ப்புள்ளதாக தலைமைச் செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# கரோனா தொற்றால் பயணிகள் குறைவு: சென்னையில் 18 விமானங்கள் ரத்து



சென்னையில் போதிய பயணிகள் இல்லாததால் 18 விமானங்கள் ரத்து செய்யப்பட்டன. தமிழகத்தில் கரோனா தொற்று 2வது அலை தீவிரமாக பரவி வருகிறது. குறிப்பாக, சென்னையில் தினமும் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தொற்றால்பாதிக்கப்பட்டு வருகின்றனர். தொற்று பரவலைத் தடுக்ககட்டுப்பாடுகள் கடுமையாக்கப்பட்டுள்ளன. வெளிநாடுகள், வெளி மாநிலங்களில் இருந்து தமிழகம் வருபவர்களுக்கு இபாஸ் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

சென்னையில் போதிய பயணிகள் இல்லாததால் 18 விமானங்கள் ரத்து செய்யப்பட்டன. தமிழகத்தில் கரோனா தொற்று 2வது அலை தீவிரமாக பரவி வருகிறது. குறிப்பாக, சென்னையில் தினமும் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தொற்றால் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

தொற்று பரவலைத் தடுக்ககட்டுப்பாடுகள் கடுமையாக்கப்பட்டுள்ளன. வெளிநாடுகள், வெளி மாநிலங்களில் இருந்து தமிழகம் வருபவர்களுக்கு இபாஸ் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

நாளுக்கு நாள் தொற்று அதிகரித்து வருவதால் மீண்டும் ஊரடங்கு அமல்படுத்தப்படுமோ என்ற அச்சமும் பொதுமக்களிடம் நிலவி வருகிறது. இதனால், சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வசிக்கும் வெளிமாநிலத்தவர்கள் தங்களுடைய சொந்த ஊர்களுக்கு திரும்புகின்றனர்.

வெளிமாநிலங்களில் இருந்து சென்னைக்கு வருபவர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளது. இதனால், சென்னை விமான நிலையத்தில் உள்நாட்டு விமான சேவை பாதிக்கப்பட்டுள்ளது. போதிய பயணிகள் இல்லாததால் விமானங்கள் ரத்து செய்யப்பட்டு வருகின்றன.

சென்னையில் இருந்து நேற்று மும்பை செல்ல வேண்டிய 3 விமானங்கள், ஐதராபாத் செல்ல வேண்டிய 3 விமானங்கள், பெங்களூரு, மதுரை, பாட்னா செல்ல வேண்டிய தலா 1 விமானங்கள் என 9 விமானங்கள் மற்றும் சென்னைக்கு வரவேண்டிய 9 விமானங்கள் போதிய பயணிகள் இல்லாததால் ரத்து செய்யப்பட்டன.

# BEST INDIAN ASTROLOGER & PSYCHIC

## Pandit: VEERANANDA

காசியில் இருந்து வருகை தந்துள்ளார்

31 வருடங்கள் அனுபவமுள்ள மற்றும் 11 தலைமுறைகளாக ஜோதிடம் பார்பவர்




உலகத்தில் சூரிய சந்திர நவக்கிரக மகிமையினாலே

இன்ப துன்பங்கள், நன்மை தீமை பற்றி விபரம் குறுவார்



**MOST POWERFUL SPIRITUALIST**

Family, Money, Childless, Health, Depression, Negativity, Husband Wife, Relationship, Marriage, Enemy, Court, Jealousy, Business, Work,Curses

- கை பார்த்து, முகம் பார்த்து அருள்வாக்கு சொல்லப்படும். டிகைட்டம் பார்த்து
- ஜாதகம் பார்த்து, குறிப்புப் பார்த்து ஆரோக்கியம், மனநிம்மதி, லக்சுமி கடாட்சம் கிடைக்கவும்,
- இராசி, நட்சத்திரம் பார்த்து நடந்தது, நடப்பது, நடக்கப்போவது பற்றிச் சொல்லப்படும்.
- செய்வினை கோளாறு, பேய்பிசாசு தொந்தரவா, எதிரிகள் தொந்தரவா, கண் திருஸ்டி,
- நாகதோசம், காதல் விவகாரங்கள், தொழில், மனை அபிவிருத்தி, வாகனப் பொருத்தம்,
- காதலர் ஒற்றுமை போன்றவற்றிற்கும், வேறு பிரச்சனைகளுக்கும் உடனடியாக தீர்வு சொல்லப்படும்
- ஏந்தப் பிரச்னையாக இருந்தாலும் 5 நாட்களில் தீர்வு காண்பார

**Removes Black Magic, Jadoo, Vodoo, Obeya, Witchcft, Jinn Curses, & Gives 100% Protection**

- சர்க்கரை வியாதி
- ஆஸ்துமா
- தீராத கை-கால் வலி
- அல்சர்
- தோல் வியாதி
- அலர்ஜி
- மூட்டு வலி
- உடல் பருமான்
- அதிகரிக்க – குறைக்க
- காக்கா வலிப்பு
- ஆண்மை குறைவு
- ஞாபக சக்தி குறைவு
- மூலம்
- சிறுநீர்க் கோளாறு
- பெண்களுக்கான
- மாதவிடாய் பிரச்சனைகள்
- நரம்புத் தளர்ச்சி
- சரவாங்கி
- வாயுக்கோளாறு
- தலைவலி
- கழுத்து வலி
- முகப்பரு, தேமல்
- வெண்கு‘டம்
- வாதம்
- மஞ்சல் காமாலை
- முடி உதிர்வு, உ‘டணம்
- பக்கவாதம்
- நரம்பு வாதம்

எந்தவித பக்கவிளைவுகளும் கிடையாது நம்பி வாரீர் நலமுடன் வாழ்வீர

**ஆயுர்வேத சிகிச்சை**

**Call For Appoinment: 647-858-3355**

1101 Victoria Pank Ave, # 3 , Scarborough ON M4B 2K2

Opp. NO FRILLS, ( VICTORIA PARK & ST CLAIR AVE )


Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற
கனகாம்பிகை
தங்கநகை அடகுமாடம்
KANAGAAMBIKAI
PAWN BROKERS
25
வருடங்கள்
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
கனகாம்பிகை
பவுண் வங்கி
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...
2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2
416 269 7198

# இன்றைய இலங்கையில் உணவுப் பொருட்கள் பலவற்றில் மறைந்திருக்கின்ற ஆபத்து தொடர்பாக மக்கள் அறிந்து கொள்ள வேண்டும்

இலங்கையில் மத்திய தர வர்த்தகத்தினரே மிக அதிகம். ஏழை மக்கள் மற்றும் அடித்தளத்தில் நாளாந்தம் உணவிற்கே சிரமப்படுகின்றவர்கள் இலட்சக் கணக்கானவர்கள். அவர்கள் அனைவரும் அன்றாடம் பயன்படுத்துகின்ற உணவுப் பொருட்களின் தரம் தொடர்பாக இப்போதெல்லாம் கூடுதல் கவனமெடுக்க வேண்டியவர்களாக நாம் உள்ளோம். இன்றைய உணவுப் பொருட்கள் பலவற்றில் மறைந்திருக்கின்ற ஆபத்து தொடர்பாக மக்கள் தங்களது அவநம்பிக்கைகளை பொதுவெளியில் சமூக ஊடகங்கள் வாயிலாக பகிர்ந்து கொள்வதைக் காண்கின்றோம்.

வெகுஜன ஊடகங்கள் அடிக்கடி இது பற்றிய செய்திகளை வெளியிடுகின்றன. தரமற்றதும், ஆபத்தானதுமான உணவுப் பொருட்கள் அதி-காரிகளின் சோதனையின் போது அகப்பட்டுக் கொள்கின்ற செய்திகளும் ஊடகங்களில் அடிக்கடி செய்திகளாக வருகின்றன. ஆனால் அந்தக் குற்றங்கள் தொடர்பாக ஆதி முதல் அந்தம் வரை விரிவான விசாரணைகள் நடத்தப்பட்டு, குற்றங்களில் சம்பந்தப்பட்டோருக்கு சட்டத்தின் மூலம் அதிகபட்ச தண்டனை வழங்கப்பட்டாலேயே மக்கள் நம்பிக்கையும் நிம்மதியும் கொள்ள முடியும்.

விசாரணைகள் தாமதம் அடைவதோ இல்லையேல் அவை அரைகு-றையில் கைவிடப்படுவதோ பயனைத் தந்துவிடப் போவதில்லை. தண்டனை மீ-தான அச்சம், அலட்சியம் குற்றவாளிகள் மத்தியில் இருக்குமானால் குற்றங்களும் தொடர்ந்து கொண்டேயிருக்குமென்பதுதான் உண்மை.

நாட்டை தற்போது பரபரப்பாக்கியுள்ள செய்தி தேங்காய் எண்ணெய் தொடர்பானதாகும். நாட்டுக்குள் இறக்குமதி செய்யப்பட்ட தேங்காய் எண்ணெயில் நச்சு இரசாயனப் பதார்த்தம் கலந்துள்ளதென்பது இரண்டாவது தடவை பகுப்பாய்வுப் பரிசோதனையின் போதும் உறுதி செய்யப்பட்டு விட்டது. அந்த நச்சுப் பொருளா-னது மனிதருக்கு புற்றுநோய் போன்ற பேரபாயத்தை ஏற்படுத்தக் கூடியதென்று எமது வைத்திய நிபுணர்கள் உறுதியாகச் சொல்கின்றார்கள்.

அதேசமயம் எமது நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்ட அந்த தேங்காய் எண்ணெய் இன்னுமே விநியோகத்துக்காக விடுவிக்கப்படவில்லையென்ற நிம்மதி தரும் செய்தியும் வந்துள்ளது. ஆனால் மறுபுறத்தில் அந்த தேங்காய் எண்ணெய் சந்தைக்குச் சென்று விட்டதாக உறுதிப்படுத்தப்படாத செய்திகள் கூறுகின்றன. ஊர்ஜிதப்படுத்தப்படாத அச்செய்தியை நம்பி விட முடியாது.

தேங்காய் எண்ணெய் விவகாரத்தை வைத்துக் கொண்டு அரசாங்கத்தின் எதிரணிகள் அரசியல் பிழைப்பு நடத்தத் தொடங்கியிருப்பதனால் வதந்திகளை நம்பலாகாது. ஆனாலும் இந்த விவகாரம் தொடர்பாக மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டிய பொறுப்பு சம்பந்தப்பட்ட அமைச்சுக்கு உண்டு. உறுதியான விளக்கம் இல்லாது போனால் மக்கள் வீணான அச்சத்துக்கு உள்ளாகக் கூடும்.

இவையெல்லாம் ஒருபுறமிருக்கையில், உணவுப் பொருட்களின் கட்டுப்பாடற்ற இறக்குமதியினால் எமது நாட்டுக்கும் மக்களுக்கும் ஏற்படுகின்ற பாதகமான விளைவுகள் தொடர்பாக சிந்திக்க வேண்டியவர்களாக நாம் இப்போது உள்ளோம். உணவுப் பொருட்களின் இறக்குமதி தொடர்பாக கண்டிப்பான கொள்கையை வகுக்க வேண்டிய அவசியம் தற்போது உருவாகியுள்ளது. இல்லாது போனால் இரசாயனம் கலந்த தேங்காய் எண்ணெயைப் போன்று வேறு பல ஆபத்தான உணவுப் பொருட்களும் எமது நாட்டுக்குள் வந்து சேர்ந்து விடக் கூடும்.



இலங்கையானது நிலவளம், நீர்வளம் கொண்ட அழகிய தேசம் ஆகும். விவசாயத்துக்கு ஏதுவான அத்தனை வளங்களையும் கொண்ட சிறப்பானதொரு தேசம் எமது நாடு. அதனால்தான் பண்டைக் காலத்தில் உணவு உற்பத்தியில் தன்னிறைவு மிக்க நாடாக இலங்கை விளங்கியது. சுதேச முறையிலான விவசாயச் செய்கை மற்றும் சுதேச உணவுப் பழக்கவழக்கங்கள் காரணமாக எமது முன்னோர் தேகாரோக்கியம் உள்ளவர்களாக திகழ்ந்தனர். இன்று மக்கள் மத்தியில் பரவியுள்ள தொற்றாநோய்களெல்லாம் அன்று இருந்ததில்லை.

உணவுப் பொருட்களில் நச்சு இரசாயனங்களும், உணவுப் பொருட்களின் அநாவசிய இறக்குமதியும் படிப்படியாக அதிகரித்ததும் மக்கள் மத்தியில் ஆபத்தான வியாதிகளும் உருவா-கத் தொடங்கின. புதிது புதிதான உணவுப் பழக்கங்களுக்கு மக்கள் அடிமை-யாகிப் போனார்கள். அந்த உணவுப் பழக்கங்களை மக்களுக்கு அடிமையாக்கும் கவர்ச்சியான விளம்பரங்கள் மறுபுறத்தில் பெருகி விட்டதனால் மக்கள் நச்சு இரசாயனங்களுக்கு ஆட்பட்டுப் போனார்கள்.

மக்கள் அவற்றிலிருந்து மீள்வதென்பது இலகுவான காரியமல்ல. எமது சிறுகுழந்தைகளும் கூட அவ்வாறான நவீன உணவுகளையே விரும்புகின்றன. பெற்றோரும் வாங்கிக் கொடுக்கின்றார்கள். உணவின் தரம் மற்றும் போசணை குறித்து கரிசனை கொள்ளாமல் சுவைக்காக மட்டுமே உணவுண்ணும் தவறான கலாசாரம் மோசமாகப் பெருகி விட்டது.

இதனால்தான் கட்டுப்பாடற்ற முறையில் பலவிதமான உணவுப் பொருட்களும் நாட்டுக்குள் இறக்குமதி செய்யப்படுகின்றன. மக்களும் அவற்றை உட்கொள்கின்றார்கள். புதிது புதிதாக கொடிய வியாதிகளும் பெருகிக் கொண்டிருக்கின்றன. வர்த்தக மாபியாக்கள் பெரும் செல்வந்தர்களாக வளர்ந்து கொண்டிருக்கின்றார்கள். எமது நாட்டுக்குள் விளைகின்ற சாதாரண உணவுப் பொருட்களையே இறக்குமதி செய்கின்ற அபத்தமாக காரியமும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. அவற்றின் சேர்மானங்கள் குறித்து மக்கள் சிந்திப்பதாக இல்லை.

இதற்கெல்லாம் ஒரேயொரு தீர்வுதான் உள்ளது. அநாவசிய இறக்குமதியானது நிறுத்தப்பட வேண்டும். அதேசமயம் அவசியமான உணவுகளின் உள்நாட்டு உற்பத்தி ஊக்குவிக்கப்பட வேண்டும். மக்களின் ஆரோக்கியத்துக்கு தீங்கான எந்தவொரு உணவும் நாட்டுக்குள் வந்து விடாதபடி கண்காணிப்பு செலுத்த வேண்டியதும் அவசியமாகின்றது.


**- கொழும்பிலிருந்து ராஜபுத்ரன்**



# கல்கியின் பொன்னியின் செல்வன்

## வந்தியத்தேவனின் குடந்தைப் பயணம்... *(அத்தியாயம் #7)*

கந்தமாறனிடம் விடை பெற்று வந்த வந்தியத்தேவன் படகு கரையை அடைந்தது எப்படி, அவன் குடந்தை சோதிடர் வீட்டு வாசல் படி கடந்து சோதிடரையும், குந்தவையையும் பார்த்தது எப்படி என்று கேட்கிறீர்களா? 'எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது. எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது. எது நடக்க இருக்கிறதோ அது நன்றாகவே நடக்கும்' என்னும் கீதா உபதேசம் போல யாவும் நடந்தது. படகில் இருந்து இறங்கிய சைவர் 'நாசாமாய்ப் போ' என்று ஆழ்வார்க்கடியாரைப் பார்த்து சொன்னபடியே இறங்கிச் சென்றார். கந்தமாறனின் ஆள் வந்தியத்தேவனுக்கு குதிரை பெற்று கொடுப்பதற்காக இறங்கிச் சென்றான். வந்தியத்தேவனும் ஆழ்வாரக்கடியானும் அரசமரத்தடியில் உட்கார்ந்தார்கள். இருவரும் பலதும் பத்தும் பேசிக்கொண்டிருந்தனர். அப்பொழுது ஆழ்வார்ககடியான், 'ஏன் தம்பி என்னை நீ கடம்பூர் மாளிகைக்கு அழைத்துச் செல்லாமல் நீ தனியாகச் சென்றாய்' என்றார். 'நான் போவதே பெரும்பாடாயிற்று இருந்தும் போனேன்.' என்று பதில் கொடுத்தான். 'என்னதான் நடந்தது என்று சொல் கேட்போம்' என்றான் ஆழ்வார்க்கடியான். அப்பொழுது கடம்பூர் மாளிகையின் மதில் மேல்
நின்ற மனிதன் இந்த ஆழ்வார்க்கடியான் தான் எனபது வந்தியத்தேவனின் நினைவிற்கு வந்தது. அதை நினைவுபடுத்திக் கொண்டு, 'அங்கு பல பிரமுகர்கள் வந்திருந்தார்கள் பழுவேட்டரையரும்அவர் மனைவியை அழைத்து வந்திருந்தார். அவள் மிகவும் அழகி அந்தப் புரத்தில் அவளைப் பார்த்தேன்' என்றான். அதற்கு ஆழ்வார்க்கடியான், 'பழுவேட்டரையரின் இளம் மனைவி அத்தனை பேரழகா? என்றபடி, அங்கு நடந்த குரவைக் கூத்தை நீ பார்த்தாயா?' என்றான். 'ஆம் கூத்தின் வகைகளில் குரவைக் கூத்தும் ஒன்றாகும் இது பழங்காலம் தொட்டு இன்று வரை வழக்கிலுள்ளது. போர் நிகழும் காலங்களில் ஏற்படும் தீங்கிலும், அலைக்கழிப்பிலும் விடுபடுவதற்காக குரவைக்கூத்து ஆடப்படும். போர்க்காலத்தில் ஆடப்படும் இக்கூத்தில் வீரமும், கோபமும் மிகுந்து தோன்றும். சந்தக்காரன் ஆவேசத்துடன் ஆடிக்கொண்டே அலறினான். என்ன பலி வேண்டும் என்று பூசாரி கேட்டான். மன்னர் குலத்து இரத்தம் கேட்கிறான். ஆயிரம் கால அரச குலத்தின் ரத்தம் கேட்கிறான். என்று வெறியாடியவன் கோர பயங்கரக் குரலில் கூறினான். இப்படி குரவைக்
கூத்தினூடாக தகவல்கள் கூறினார்கள் எனக்கு ஒன்றும் புரியவில்லை' என்றான் வந்தியத்தேவன்.




அதன் பின் அங்கு வந்த பிரமுகர்கள் ஏதோ கூட்டம் போட்டு விவாதித்தார்கள். ராஜாங்க விடயங்களைப் பேசிக்கொண்டார்கள். அடுத்து பட்டத்துக்கு வருவது யார் என்றும் வானத்தில் வால் நட்சத்திரம் காணப்படுகிறது, ராஜாங்கத்திற்கு ஏதோ ஆபத்து வரப் போகிறது என்றும் கதைத்தார்கள். 'என் நண்பன் கந்தமாறனும் ஏதோ பட்டும் படாமலும் சொன்னான். ஏதோ மர்மம் நடைபெறுகிறது' என்று கூறிய வந்தியத்தேவன் ஆழ்வார்க்கடியானை நோக்கி 'நீங்கள் சொல்லுங்கள் அடுத்து பட்டத்திற்கு வருபவர் யாரென்று.' அதற்கு ஆழவார்கடியான், 'தம்பி என்கென்ன தெரியும் நானொரு பக்திமான்' என்றான். 'இது ஒரு வேசம் பெண்ணாசையை மறைக்கும் ஒரு உத்தி அப்படி என்னதான் பெண்களிடம் உண்டு இன்னொருத்தர் மணந்த பெண்ணிடம் மனதைச் செலுத்தல் நியாயமாகுமா? ஏன் பழுவேட்டரையர் இளம் மனைவிக்கு ஓலை கொடுக்க என்னைக் கோரினீர்?' என்று கோபத்துடன் கேட்டான் வந்தியத்தேவன். ஆழ்வாரக்கடியானோ, 'அபசாரம், அபசாரம் நான்
பெண் பித்துப் பிடித்தவனல்ல. நீ என்னை சந்தேகிப்பது தவறு அதற்கு தகுந்த காரணம் உண்டு. அது ஒரு பெரிய கதை அதிசய வரலாறு உண்மைக் கதை நான் அவசரமாகப் போகவிருக்கிறது இருந்தும் உனக்கு சொல்லி விட்டுப் போகிறேன்.' வந்தியத்தேவனோ 'நல்லது நல்லது நானும் குதிரைக்காக காத்திருக்கிறேன் உன் கதையைக் கேட்கிறேன' என்றான். 'பாண்டிய நாட்டின் வைகை நதிக்கரையில் உள்ளது எனது கிராமம். எனது குடும்பத்தினர் வைஷ்ணவத்தை தழுவியவர். ஒரு நாள் நதிக்கரையிலுள்ள நந்தவனத்தில் ஒரு குழந்தையைக் கண்டெடுத்தார் என் தந்தை. அவளுக்கு நந்தினி என்று பெயர் சூட்டி வளர்த்து வந்தோம் என் தந்தைக்குப் பின் என் தங்கையென்று நான் வளர்த்தேன். அவளும் பெருமாளிடம் மிகுந்த பக்தி கொண்டாள். நாம் இருவரும் ஊர் ஊராகச் சென்று ஆழ்வார்க்கடியார் பாசுரத்தைப் பாடி வைஷ்ணவத்தைப் பரப்பி வந்தோம். ஒரு நாள் நான் மட்டும் திருவேங்கடத்திற்கு யாத்திரை செய்தேன்.

அப்பொழுது, நந்தினிக்கு ஒரு ஆபத்து வந்தது. மதுரைக்கருகில் பாண்டியர்களுக்கும், சோழர்களுக்கும் இறுதிப்போர் நடைபெற்றது. பாண்டியருடைய சேனை பெரும் நாசம் கொண்டு வீரபாண்டியன் காயங்களுடன் போர்க்களத்தில் வீழ, அவனுடைய அந்தரங்க ஊழியர்கள் வீர பாண்டியனை நந்தினி வீட்டிற்கு அழைத்து வந்தனர். நந்தினியும் அவன் நிலையைக் கண்டு
மனமிரங்கி பணிவிடை செய்தாள். போர் வெறி கொண்ட ஆதித்தகரிகாலன் வெறியுடன் வீரபாண்டியனைத் தேடிக் கண்டு அவன் தலையை வெட்டி பெரும் வெற்றி கொண்டதுடன், வீரபாண்டிய தலை கொண்ட கோப்பரகேசரி என்ற பெயரும் கொண்டான். அவ்வேளை அங்கு வந்த பெரியபழுவேட்டரையர் நந்தினியின் அழகில் மோகம் கொண்டு அவளை சிறைபிடித்துக் கொண்டார். இது நடைபெற்று மூன்று வருடங்கள் ஆகிவிட்டது இன்னும் அவளை சந்தித்துப் பேசவில்லை, விடுதலை செய்யவும் முடியவில்லை' என்றார் ஆழ்வார்க்கடியார். அப்பொழுது வந்தியத்தேவன் மிகவும் மனமிரங்கி மூடு பல்லக்கில் இருப்பது நந்தினியல்ல
என்பதை சொல்லிவிட எண்ணினான். ஆனாலும் (தொடர்ச்சி 25ம் பக்கம்)



# தடுப்பூசி எடுத்துக்கொண்டவர்களுக்கு கொரோனா வந்தாலும் உயிருக்கு ஆபத்து ஏற்படாது மருத்துவர் தரும் விளக்கம்

கொரோனா வைரஸ் பரவலின் இரண்டாம் அலை இந்தியாவை கடுமையாகத்தாக்கி வருகிறது. மராட்டியம், குஜராத், கேரளம், கர்நாடகம், தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் பெரும் பாதிப்பை சந்தித்து வருகின்றன. கொரோனாவில் இருந்து தப்பித்துக்கொள்ள, மக்களுக்கு இருக்கும் வாய்ப்புகள், கூட்டம் தவிர்த்தல், தனிநபர் இடைவெளி, முகக்கவசம் அணிதல், பிறருடன் கை குலுக்குவதைத் தவிர்த்தல், கைகளை அடிக்கடி கழுவுதல் போன்ற தற்காப்பு நடவடிக்கைகளுடன், தடுப்பூசி செலுத்திக்கொள்வதும் ஆகும். இதன் மீது நம்பிக்கை கொண்டு, தமிழக அளவில் இதுவரை 40 லட்சம் பேரும், இந்திய அளவில் 11 கோடி பேரும் தடுப்பூசி எடுத்துக்கொண்டுள்ளனர்.

தயக்கத்திற்கு விளக்கம்:

ஆனால் அறிவியல் உலகம் ஆராய்ந்து கண்டுபிடித்த தடுப்பூசியின் மீது நம்பிக்கையின்றி, வாட்ஸ்-அப்பிலும், செவிவழியாகவும் பரவும் வதந்திகளை நம்பி பலரும் தடுப்பூசி எடுத்துக்கொள்ளத் தயங்குகிறார்கள். அவர்கள் தயகத்திற்கு சாதகமாக, தடுப்பூசி எடுத்துக்கொண்ட பிறகும் சிலருக்கு கொரோனா பாதிப்பு கண்டறியப்பட்டுள்ள செய்திகளை சொல்கிறார்கள்.

இதுபோன்ற சந்தேகங்களை தீர்த்து வைக்கும் வகையிலும், கொரோனா இரண்டாவது அலையின் காரணங்கள் குறித்தும், கோவை சிங்காநல்லூர் இ.எஸ்.ஐ மருத்துவமனையின் மருத்துவக் கண்காணிப்பாளர் டாக்டர் டி.ரவிக்குமார் விளக்கம் அளித்துள்ளார். அதன் விவரம் வருமாறு.

பாதிப்புகள் கூடுதலாவது ஏன்?

கேள்வி: கடந்த ஆண்டு ஏற்பட்ட கொரோனா பாதிப்பை விட தற்போது கூடுதலாக பாதிப்பு இருப்பதற்கு என்ன காரணம்?

டாக்டர் பதில்: கடந்த ஆண்டு ஊரடங்கு கட்டுப்பாடுகள் இருந்தன. பின்னர் தளர்வுகள் அறிவிக்கப்பட்டன. அதன் பிறகு தொடர்ச்சியாக நடைபெற்ற பொதுக்கூட்டங்கள், திருவிழாக்கள், தேர்தல் பரப்புரை கூட்டங்களில் கலந்துகொண்ட மக்களிடம் தொற்று குறித்த பயம் இல்லை. ஒருசிலரே முகக்கவசம் அணிந்தனர். இதனால், நடப்பாண்டு கொரோனா பரவல் அதிகமாக உள்ளது.

கேள்வி: கொரோனா வைரசின் வீரியத்தில் ஏதேனும் மாற்றம் உள்ளதா?

பதில்: உருமாறிய கொரோனா வைரசால் இங்கு பாதிப்பில்லை. இங்கு ஏற்படும் கொரோனா வைரஸ் பாதிப்புகள் அனைத்தையும் ஆர்.டி.பி.சி.ஆர் பரிசோதனையில் கண்டறியலாம். ஆனால், இரண்டாம் அலையை மக்கள் கண்டுகொள்ளவில்லையெனில், தொற்றுப் பரவல் இன்னும் கடுமையாகும். கடந்த ஆண்டைவிட 4 மடங்கு பாதிப்பு அதிகமாகவும் வாய்ப்பு உள்ளது.

என்னென்ன அறிகுறிகள்?

கேள்வி: கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டிருப்பதை உணர்த்தும் அறிகுறிகள் என்ன?

பதில்: தாங்கமுடியாத உடல்வலி, சிலருக்கு வயிற்றுப்போக்கு, தலைவலி, சுவை, வாசனை தெரியாமல் இருப்பது, காய்ச்சல் ஆகியவை தொற்று ஏற்பட்டிருப்பதற்கான அறிகுறிகள். இவை இருந்தால் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். இருமல், சளி, தும்மல், உடல் வலிக்குப் பலர் மருந்துக் கடைகளில் சுயமாக மாத்திரைகளை வாங்கி உட்கொள்கின்றனர். அவ்வாறு செய்யக் கூடாது. அதேபோல, வைரஸ் காய்ச்சலுக்கு கண்டிப்பாக ஊசி போட்டுக்கொள்ளக்கூடாது.

தடுப்பூசி பாதுகாப்பானது:

கேள்வி: தடுப்பூசி போட்டுக் கொண்டவர்களுக்கு கொரோனா பாதிப்பு ஏற்பட வாய்ப்பில்லையா?

பதில்: முதல் தடுப்பூசி போட்டுக் கொண்டவுடன் 10 முதல் 40 சதவீதம் நோய் எதிர்ப்பு சக்தி வந்துவிடும். இரண்டாவது தடுப்பூசி போட்டுக்கொண்ட பிறகு 15 நாட்களில் முழுமையாக எதிர்ப்பு சக்தி உருவாகும். தடுப்பூசி போட்ட பிறகும் எதிர்ப்பு சக்தி குறைவாக இருப்பவர்களுக்குத் தொற்று வர வாய்ப்பு உள்ளது. ஆனால், உயிருக்கு ஆபத்தான வகையில் தீவிர பாதிப்பு ஏற்படாது. ஆகவே தடுப்பூசி எடுத்துக்கொள்வது மிகமிக பாதுகாப்பானது.

சிகிச்சை விவரம்:

கேள்வி: மருத்துவமனையில் நோயாளிகளுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் என்னென்ன?

பதில்: அனுமதிக்கப்படும் நோயாளிகளின் வகைக்கு ஏற்ப ஆன்டிவைரல், ஆன்டிபயாடிக் மருந்துகள், நோய் எதிர்ப்பு மருந்துகள், உடல் வலிக்கான மருந்துகள் அளிக்கப்படுகின்றன. சிலருக்கு ரத்தம் உறையாமல் தடுக்க மருந்துகள் அளிக்கப்படுகின்றன. விரும்புபவர்களுக்கு கபசுரக் குடிநீர் அளிக்கப்படுகிறது. நிறைய நீர் ஆகாரம், சூப், வைட்டமின்ரூசி அதிகம் உள்ள பானங்கள் அளிக்கப்படுகின்றன. மூச்சுத்திணறல் இருப்பவர்களுக்குத் தீவிர சிகிச்சைப் பிரிவில் போதிய ஆக்சிஜன் அளிக்கப்படுகிறது.

அனுமதிக்கப்பட்ட முதல் இரண்டு நாட்களில் உடல் வலி குறைந்துவிடும். மூன்று, நான்காம் நாட்களில் சுவை, வாசனை தெரிந்துவிடும். செயற்கை ஆக்சிஜன் இல்லாமல், உடலில் ஆக்சிஜன் அளவு சரியாக இருக்கும். அனுமதிக்கப்பட்ட 5-வது நாளில் மீண்டும் ஒருமுறை ஆர்.டி.பி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்படும். அதில், நெகட்டிவ் என்றால் மட்டும் நோயாளி வீட்டுக்கு அனுப்பி வைக்கப்படுவார்.

சிகிச்சைக்குப்பிறகும் தனிமை அவசியம்:

கேள்வி: சிகிச்சை முடிந்து வீடு திரும்புவோருக்கு என்னென்ன அறிவுரை வழங்குகிறீர்கள்?

பதில்: மருத்துவமனையிலிருந்து சென்ற பிறகு தங்களை 14 நாட்கள் தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும். வீட்டில் இருப்பவர்களோடு ஒன்றாக அமர்ந்து சாப்பிடக் கூடாது. வீட்டில் ஒரே ஒரு கழிப்பறை இருக்கிறது எனில், நோயாளி பயன்படுத்தும் கழிப்பறையை பிளீச்சிங் பவுடர் கொண்டு ஒவ்வொரு முறையும் சுத்தம் செய்ய வேண்டும். அதன் பிறகே மற்றவர்கள் பயன்படுத்த வேண்டும். ஏனெனில், சிறுநீர், மலத்தில் வைரஸ் வர வாய்ப்பு உள்ளது.

கேள்வி: இரண்டாம் அலையைத் தடுக்க மக்கள் அன்றாடம் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் என்ன?

பதில்: தொடர்ச்சியாக 15 நாட்கள் தமிழகத்தில் இருக்கும் அனைவரும் தனிநபர் இடைவெளியைப் பின்பற்றி, வாய், மூக்கை முகக் கவசத்தால் மூடி, கையை சோப்பு அல்லது சானிடைசர் கொண்டு சுத்தமாக வைத்திருந்தால் தற்போதைய எண்ணிக்கை கால் பங்காகக் குறைந்துவிடும்.

மருத்துவர்களின் சங்கடங்கள்:

கேள்வி: தொற்று அதிகரிப்பால் மருத்துவர்கள், செவிலியர்கள் சந்திக்கும் சிரமங்கள் என்னென்ன?

பதில்: பிபிஇ கிட் எனப்படும் முழுக் கவச உடையை அரை மணி நேரம்கூட தொடர்ந்து அணிந்திருப்பது சிரமம். ஆனால், மருத்துவர்கள், செவிலியர்கள் 6 மணி நேரம் முதல் 8 மணி நேரம் வரை அணிந்திருக்கின்றனர். ஒருமுறை அணிந்துவிட்டால், அதைக் கழற்றிவிட்டு மீண்டும் பயன்படுத்த முடியாது. சிறுநீர் கழிக்கக்கூடச் செல்ல முடியாது, உணவு, தண்ணீர் அருந்த முடியாது, வியர்வை கொட்டும், மூச்சுக்காற்று கண்ணில் படும். இந்த சிரமங்களையெல்லாம் மக்கள் உணர்ந்து, தங்களை தற்காத்துக்கொண்டு, தொற்றுப் பரவலைத் தடுக்க ஒத்துழைக்க வேண்டும்.

இவ்வாறு டாக்டர் தெரிவித்தார்.

**- மணிராஜ், திருநெல்வேலி.**

# இவ்வார ராசிபலன்

**16-04-2021 வெள்ளி தொடக்கம் 22-04-2021 வியாழன் வரையும்**




**மேஷம்:** பொல்லாத காலங்கள் சொல்லாமல் விலகக்கூடிய அற்புதமான வாரம். இனிப்பான செய்திகள் வரும். பழிச் சொல்லிலிருந்து விடுபடுவீர்கள். சொத்துப் பிரச்சனைகள் தீரும். பணியாட்களால் தொல்லை மாறும். கல்வியில் மந்த நிலை மாறும். ஜவுளித் தொழில் உயர்வு தரும். கலைத் தொழில் திருப்பம் வரும். அலுவலகங்களில் பாராட்டு குவியும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். மற்றவரின் தொல்லைக் குறையும். பிரித்து குடும்பம் ஒன்று சேரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: பிரளய தேவி, அதிர்ஷ்ட எண்: 1,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,U




**ரிஷபம்:** ஆதாயமும், ஆதாரமும், அதிகாரமும் சேரக்கூடிய அற்புதமான வாரம். சுய விடு வாங்க முயற்சி செய்யலாம். மங்களமான நாள். அரசு வாய்ப்பு தடைப்படும். கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். கலைத்துறையில் முன்னேற்றம் கொடுக்கும். பயணம் அனுகூலம் தரும். திருமண முயற்சி வெற்றி தரும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். தோற்றப் பொலிவு கூடும். நல்லவர் நட்பு கிட்டும். எதிரிகள் பலம் குறையும்.
வழிபடவேண்டிய தெய்வம்: வேலவப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 9,4,3,1
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,Z




**மிதுனம்:** ஆலய தரிசனத்தால் ஆத்மபலம் பெறக்கூடிய அற்புதமான வாரம். காரியத்தடை ஏற்படும். உறவினர்களால் நன்மை உண்டு. எதிரிகளால் தொல்லை உண்டாகும். பழைய கடன் வசூலாகும். வாகனச் செலவு ஏற்படும். வெளிநாட்டு தொடர்பு ஏற்படும். திறமையில் பெருமை சேரும். பேச்சில் இனிமை கூடும். கலைத் தொழிலில் நிலை உயரும். சான்றோர்களின் சந்திப்பு கிட்டும். உதவிகள் கிடைக்கும் நாள். மனைவியின் பிரார்த்தனை மாற்றம் தரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: நவ தேவதை, அதிர்ஷ்ட எண்: 6,9,2,3
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,U




**கடகம்:** மேலான ஆசியும், மேதைகளின் நட்பும் கிடைக்கக்கூடிய வாரம். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. பயணம் வெற்றி தரும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். பதவி உயர்வு கிட்டும். மனக்கசப்பு நீங்கும். அரசு வழியில் ஆதாயம் கிடைக்கும். கணினி துறையில் ஊதிய உயர்வு கிட்டும். திறமைகள் வெளிப்படும் நாள். ஆரோக்கியம் சீராகும். சூழ்ச்சிகள் இருந்து விடுபடுவீர்கள். மங்கள நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவீர்கள்.
வழிபடவேண்டிய தெய்வம்: பஞ்சபூதக் கடவுள், அதிர்ஷ்ட எண்: 6,0,2,3
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,N




**சிம்மம்:** இனிய கனாக்காணவும், இன்ப உலா செல்லவும் இனிமையான வாரம். காரியம் கைகூடும். கலைத்துறையில் ஆர்வம் ஏற்படும். வில்லங்கம் விலகும். போட்டிகள் உருவாகி மறையும். வியாபாரத்தில் கவனம் தேவை. வீடு வாங்கும் யோகம் உண்டு. வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வழக்குகள் சாதகமாகும். வரவு திருப்தி தரும். குடும்ப கௌரவம் உயரும். குதூகலமான எண்ணம் உருவாகும். மின்சாரத்தில் கவனம் தேவை.
வழிபடவேண்டிய தெய்வம்: சுக்கிர பகவான், அதிர்ஷ்ட எண்: 4,6,1,5
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,P




**கன்னி:** வீணான அலைச்சலும், வேதனைக் காலங்களும் விலகக்கூடிய அற்புதமான வாரம். ஆடம்பர செலவு அதிகரிக்கும். மாற்று இன நட்பு பெருகும். வயிற்று உபாதை வந்து சேரும். வங்கி சேமிப்பு உயரும். தொல்லை தந்தவர் விலகிவிடுவர். தொழில் வளர்ச்சி மேன்மை தரும். ஆனந்தம் குடிக்கொள்ளும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். பேச்சில் கணிவு தேவை. களவுப் போன பொருள்திரும்ப கிடைக்கும்.
வழிபடவேண்டிய தெய்வம்: தேவி காளிகாம்பாள், அதிர்ஷ்ட எண்: 3,2,7,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,V




**துலாம்:** வாடும் நிலை விலகி வீடு, நிலமும் வாங்கக் கூடிய நல்ல வாரம். சிக்கனத்தை கையாள வேண்டும். ஞாபகத் திறன் அதிகரிக்கும். சுபகாரியம் கைகூடும். உடல் நலனில் அக்கறை தேவை. குடும்பத்தில் அமைதி நிலவும். நண்பர்கள் உதவி கிட்டும். புதிய முயற்சி கைகூடும். நீண்ட நாளைய நோய் விலகும். பணவரவு திருப்தி தரும். மன மகிழ்ச்சி அதிகர. இல்லத்தில் அமைதி கூடும். சுமூகமான சூழ்நிலை பெருகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: ஏழுமலை ஆண்டவர், அதிர்ஷ்ட எண்: 3,4,6,8
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள். அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,P




**விருச்சிகம்:** அனைத்து விதத்திலும் ஆதாயம் கிடைக்கக்கூடிய அற்புதமான வாரம். விரக்திகள் மறையும். வாகனத்தில் செலவு ஏற்படும். கலைத்துறையில் கௌரவம் கூடும். நீண்ட நாள் முயற்சி நிறைவேறும். முன்னோர்கள் ஆசிர்வாதம் கிடைக்கும். உடல்நலம் சீராகும். உற்சாகம் மேலோங்கும். உறவுகளால் நன்மை ஏற்படும். பயணம் வெற்றிதரும். நீண்டநாள் கனவு நிறைவேறும். பிள்ளைகள் வழியில் கவனம் தேவை. திண்டாட்டங்கள் மறையும். வேதனைகள் சாதனையாகும். சொந்த முயற்சிகள் பலன் கொடுக்கும். உத்தியோக உயர்வு கிட்டும்.
வழிபடவேண்டிய தெய்வம்: திருமுருகக் கடவுள், அதிர்ஷ்ட எண்: 3,8,4,9
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,H




**தனுசு:** மனைவி மக்களால் மகிழ்ச்சி ததும்பக்கூடிய மகத்தான வாரம். இல்லம் தேடி வாய்ப்பு வரும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். நம்பிக்கை துளிர்விடும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். உறவுகளால் செலவு அதிகரிக்கும். நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. அயல்நாட்டுப் பயணம் உண்டு. பொருளாதாரம் மேம்படும். துணிவோடு செயல்படுவீர்கள்.
வழிபடவேண்டிய தெய்வம்: சயன கணபதி, அதிர்ஷ்ட எண்: 5,9,8,2
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,K





ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
‘ராஜயோகம்’
**Dr. K. RAM.Ph.D (USA)**
தொடர்புக்கு: **0091-9840160068 9940431377**





**மகரம்:** தொழில் வகையில் மேன்மையும் தொகை தொகையாய் லாபமும் சேரக்கூடிய வாரம். வீடு, மனை யோகம் உண்டு. விவசாயம் லாபம் தரும். வியாபாரம் மந்தமாக இருக்கும். எதிர்ப்புகள் அதிகமாகும். சச்சரவுகள் சமாதானத்தில் முடியும். சேமிப்பு அதிகரிக்கும். ஆடம்பர பொருள் சேரும். பண வரவு மேலோங்கும். பாக்கிகள்வ சூலாகும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. உழைப்பு கடுமையாக இருக்கும். மனித நேயம் மிகுதியாகும். நீண்ட தூரப் பயணம் லாபம் தரும். பிள்ளைகள் வழியில் சந்தோ'ம் கூடும். குடும்பத்தில் குழப்பம் தீரும். சுபச் செய்தி தேடி வரும். ஆபரணப் பொருள் களவு போகும்.
வழிபடவேண்டிய தெய்வம்: மங்கள மாரியம்மன், அதிர்ஷ்ட எண்: 7,6,4,0
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,N




**கும்பம்:** வீரியமான செயல்பாடுகளால் விசேஷமான பலன்கள் கிடைக்கக்கூடிய வாரம். கன்னிப் பெண்களின் உற்சாகம் அதிகரிக்கும். உங்களால் மற்றவர்களுக்கு அதிகம் நன்மைகள் கிடைக்கும். திடீர் செலவுகளால் கையிருப்பு குறையும். உறவினர் வருகை உண்டு. பெற்றோரின் ஆசி கிடைக்கும். கர்ம வினைகள் அகலும். பணம் புரளும். எதிலும் வெற்றி கிட்டும். விரக்திகள் மறையும். வீடு, மனை யோகம் உண்டு. நிதானத்தோடு செயல்பட வேண்டும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். உடல் பொலிவு கூடும்.
வழிபடவேண்டிய தெய்வம்: சுவாமி தர்மசாஸ்த்தா, அதிர்ஷ்ட எண்: 2,1,0,0
அதிர்ஷ்ட நிறம்: பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,R




**மீனம்:** நாடிய பொருளும், தேடி வாய்ப்பும் கிடைக்கக்கூடிய அற்புதமான வாரம். கடன் உபத்திரவம் குறையும். குடும்ப கௌரவம் ஓங்கும். மற்றவர் தொல்லை நீங்கும். வெற்றி நிலை தொடரும். நடவடிக்கையில் மாற்றம் வரும். எதிர்பாராத லாபம் சேரும். எண்ணிய காரியம் கூடும். இல்லத்தில் நல்லவை நடக்கும். தோற்றப் பொலிவு கூடும். வேற்று மதத்தினரால் உதவி சேரும். பழையக் கடன் தீரும். புதிய வாய்ப்பு கூடும். தெய்வப் பணியில் ஈடுபடுவீர்கள். மாற்று எண்ணம் உதயமாகும். பெண்களின் திறமை பெருமை தரும். கற்பனை ஆற்றல் பெருகும். வெளிநாட்டு வாய்ப்பு தேடி வரும்.
வழிபடவேண்டிய தெய்வம்: மீனாட்சிஅம்மன், அதிர்ஷ்ட எண். 5,3,0,1
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,W

---

*(24ம் பக்கத் தொடர்ச்சி)*

அவன் கடம்பூர் மாளிகையில் தான் அறிந்து கொண்ட ரகசியத்தை மறைத்துக் கொண்டான். அப்பொழுது அவன் கடம்பூர் வீரர் குதிரையுடன் வருவதைக் கண்டு ஆழ்வார்கடியானிடம் விடை பெற எண்ணினான். ஆழ்வார்க்கடியானோ ‘என் கதையை உனக்குச் சொல்லிவிட்டேன் இனியாவது எனக்கு உதவுவாயா?’ என்றான். வந்தியத்தேவனோ ‘நான் ஒரு செல்வாக்குமில்லாத தனி மனிதன் என்னால் முடியாது’ என்று மறுத்துவிட்டான். ‘சுந்தர சோழ மகாராஜாவிற்கு ஏதாவது நடந்தால் அடுத்து பட்டத்திற்கு வருவது யார் என்று நீங்கள் உத்தேசிக்கிறீர்கள்’ என்று ஆழ்வார்க்கடியாரிடம் கேள்வியை வைத்தான் வந்தியத்தேவன். ‘என்னைக் கேட்காதே தம்பி குடம்பைச் சோதிடரைக் கேட்டால் ஒரு வேளை சொல்லுவார்’ என்றார். ‘அவர் சோதிடமும் சொல்லுவார் மனதை அறிந்தும் சொல்லுவார்’ என்று கூறியதும், வந்தியத்தேவன் சோதிடர்
வீட்டிற்குப் புறப்பட்டான். குந்தவையைச் சந்தித்தான் இப்படித்தான் நடந்தவை நன்றாகவே நடந்தது. இப்பொழுது வந்தியத்தேவன் சோதிடர் வீட்டில் வெளியே காத்திருக்கிறான் அல்லவா? சோதிடர் வந்தியத்தேவனை அழைத்துச் சென்று தன்னுடைய ஆஸ்தான பீடத்தில் அமர்த்தினார். ‘தம்பி நீ யார் எதற்கு இங்கு வந்தாய்?’ என்று கேட்டார்.

அப்பொழது வந்தியத்தேவன் ‘நீங்கள் தானே அந்தப் பிரபல சோதிடர் இப்படிக் கேட்கிறீர்களே! ஆழ்வார்கடியான் சொன்னானே நீங்கள் மனதைப்பார்த்தும் சோதிடர் சொல்வீர்கள் என்று.’ ‘யார் அந்த மனிதன்? நான் உனக்கு சோதிடம் பார்த்தால் பணம் கொடுப்பது அவனா நீயா?’ என்று கேட்டார் சோதிடர். அதற்கு வந்தியத்தேவன், ‘அவர் கட்டையாயும், குட்டையாயும் உடல் முழுவதும் கீழிருந்து மேலாக சந்தனம் இட்டு முன் குடுமி வைத்திருப்பார்.’ என அவர் அங்க அடையாளங்களை விபரித்துவிட்டு, ‘சோதிடரே சற்று முன் இங்கு வந்து போனவர்கள் யார் என்றான்?’ அதற்கு சோதிடர், ‘அவர்கள் பெண்கள் தான் அப்பா நீ பார்க்கவில்லையா? பெண்களில் பத்தினி, சித்தினி, காந்தர்வி, வித்தியாதரி என்னும் நாலு யாதிகள் உண்டு இவர்கள் பத்தினி காந்தர்வி ஜாதியைச் சேர்ந்தவர்கள்’ என்றார். ‘சரிதான் ஆழ்வார்க்கடியார் சொன்னது சரிதான்’ என்றான் வந்தியத்தேவன். அதற்கு சோதிடர் ‘என்னப்பா அடையாளங்களைப் பொருத்திப் பார்த்தால் அவர் திருமலை அப்பன் போல் தெரிகிறது அவர் ஊருக்கு ஒரு பெயர் வைப்பார். ஆழுக்கொரு வேடம் போடுவார். அவர் கதையில் கற்பனையும் பொய்யும் கலந்திருக்கும். நல்லவருக்கு நல்லவர் பொல்லாதவருக்கு பொல்லாதவர். இவர் பேச்சை நம்பாததும் நம்புவதும் அந்தந்தப் பேச்சைப் பொறுத்திருக்கும்’. ‘சோதடரே நான் அவசரமாகப் போகவேண்டும் என் கேள்விக்குப் பதில் சொல்லுங்கள்’ என்றான். ‘கேளப்பா கேளு’ ‘இங்கிருந்து ரதத்தில் போன பெண்கள் யார் எந்த ஊர்? என்ன குலம் நான் போகும் காரியம் வெற்றி பெறுமா? சோழ ராட்சியத்திற்கு ஆபத்து உண்டா? என்பது பற்றிச் சொல்லுங்கள்’ என்றான். சோதிடரோ, ‘தம்பி இங்கு வரும் எவரைப் பற்றியும் நான் எவரிடமும் எதுவும் சொல்வதில்லை அது என் தொழிலும் அல்ல நீ பொன் தந்தால் கூட சொல்லக் கூடியதை மட்டும் தான் நான் சொல்வேன். சரி தம்பி சோதிட ஆருடம் சொல்வதற்கு ஆதாரம் வேண்டும் இல்லாவிட்டால் பிறந்தநாள் நட்சத்திரம் தெரியுமா? அல்லது ஊரும் பேருமாவது சொல்லு’ என்று வந்தியத்தேவனைப் பார்த்துக் கேட்டான். வந்தியத்தேவனோ ‘என் பெயர் வந்தியத்தேவன்’ என்று
சொல்லி முடிக்குமுன்பே சோதிடர் ‘வல்லவரையர் வந்தியத்தேவனா?’ ஆகா வர்ண குலத்தவனா? உன் குலம் எப்படிப்பட்ட குலம் உன் குலத்தைப் பற்றி கவி வாணர் எவ்வளவு கவி பாடியுள்ளார்.

*‘வானவன் புகழுரையா வாயுண்டோ மாகதர்கோன்*
*பெயரெழுதா மார்புண்டோ - வானவன்*
*கோடிதாங்கி நில்லாத கொம்புண்டோ - உண்டோ*
*அடிதாங்கி நில்லா அரசு’*

தொடரும்...

---

Jenita.Jaffna@gmail.com
**தொகுப்பு, எழுத்தாக்கம்: மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை**
**மாதினி நமலன்**

# அன்பின் தொனி - 607

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபம் - ஜெபத்தின் வல்லமை.**

**தேவன் தமது பரிசுத்தத்தைக்கொண்டு விளம்பினார்**

தேவனே, என் இருதயம் ஆயத்தமாயிருக்கிறதுளூ நான் பாடிக்கீர்த்தனம் பண்ணுவேன், என் மகிமையும் பாடும். வீணையே, சுரமண்டலமே, விழியுங்கள், நான் அதிகாலையில் விழிப்பேன். கர்த்தாவே, ஜனங்களுக்குள்ளே உம்மை த்துதிப்பேன், ஜாதிகளுக்குள்ளே உம்மைக் கீர்த்தனம்பண்ணுவேன். உமது கிருபை வானங்களுக்கு மேலாகவும், உமது சத்தியம் மேகமண்டலங்கள் பரியந்தமும் எட்டுகிறது. தேவனே, வானங்களுக்கு மேலாக உயர்ந்திரும், உமது மகிமை பூமியனைத்தின்மேலும் உயர்ந்திருப்பதாக. உமது பிரியர் விடுவிக்கப்படும் பொருட்டு, உமது வலதுகரத்தினால் இரட்சித்து, எங்கள் ஜெபத்தைக் கேட்டருளும். தேவன் தமது பரிசுத்தத்தைக்கொண்டு விளம்பினார், ஆகை யால் களிகூருவேன், சீகேமைப் பங்கிட்டு, சுக்கோத்தின் பள்ளத்தாக்கை அளந்து கொள்ளுவேன். கீலேயாத் என்னுடையது, மனாசேயும் என்னுடையது, எப்பிராயீம் என் தலையின் பெலன், யூதா என் நியாயப்பிரமாணிகன். மோவாப் என் பாதபாத்திரம், ஏதோமின்மேல் என் பாதரட்சையை எறிவேன், பெலிஸ்தியாவின்மேல் ஆர்ப்பரிப்பேன். ஆரணான பட்டணத்திற்குள் என்னை நடத்திக்கொண்டு போகிறவன் யார்? ஏதோம்மட்டும் எனக்கு வழிகாட்டுகிறவன் யார்? எங்கள் சேனைகளோடே புறப்படாமலிருந்த தேவரீரல்லவா? எங்களைத் தள்ளிவிட்டிருந்த தேவரீரல்லவா? இக்கட்டில் எங்களுக்கு உதவிசெய்யும், மனுஷனுடைய உதவி விருதா. தேவனாலே பராக்கிரமஞ்செய்வோம், அவரே எங்கள் சத்துருக்களை மிதித்துப்போடுவார். **- சங்கீதம் 108: 1-13**

**அவர் ஜாதிகளுக்குள் நியாயந்தீர்ப்பார்**

கர்த்தர் என் ஆண்டவரை நோக்கி: நான் உம்முடைய சத்துருக்களை உமக்குப் பாதபடியாக்கிப் போடும்வரைக்கும், நீர் என்னுடைய வலதுபாரிசத்தில் உட்காரும் என்றார். கர்த்தர் சீயோனிலிருந்து உமது வல்லமையின் செங்கோலை அனுப்புவார், நீர் உம்முடைய சத்துருக்களின் நடுவே ஆளுகைசெய்யும். உமது பராக்கிரமத்தின் நாளிலே உம்முடைய ஜனங்கள் மனப்பூர்வமும் பரிசுத்த அலங்காரமுமுள்ளவர்களாயிருப்பார்கள், விடியற்காலத்துக் கர்ப்பத்தில் பிறக்கும் பனிக்குச் சமானமாய் உம்முடைய யௌவன ஜனம் உமக்குப் பிறக்கும். நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றென்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று கர்த்தர் ஆணையிட்டார், மனம் மாறாமலுமிருப்பார். உம்முடைய வலது பாரிசத் திலிருக்கிற ஆண்டவர், தமது கோபத்தின் நாளிலே ராஜாக்களை வெட்டுவார். அவர் ஜாதிகளுக்குள் நியாயந்தீர்ப்பார், எல்லா இடங்களையும் பிரேதங்களால் நிரப்புவார், விஸ்தாரமான தேசங்களின்மேல் தலைவர்களாயிருக்கிறவர்களை நொறுக்கிப்போடுவார். வழியிலே அவர் நதியில்குடிப்பார், ஆகையால் அவர் தமது தலையை எடுப்பார்.
**- சங்கீதம் 110: 1-7**

**அவருடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும்.**

அல்லேலூயா, செம்மையானவர்களுடைய சங்கத்திலும் சபையிலும் கர்த்தரை முழு இருதயத்தோடும் துதிப்பேன். கர்த்தரின் செய்கைகள் பெரியவைகளும், அவைகளில் பிரியப்படுகிற எல்லாராலும் ஆராயப்படுகிறவைகளுமாயிருக்கிறது. அவருடைய செயல் மகிமையும் மகத்துவமுமுள்ளது, அவருடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும். அவர் தம்முடைய அதிசயமான செய்கைகளை நினைவுகூரும்படி செய்தார், கர்த்தர் இரக்கமும் மனஉருக்கமுமுள்ளவர். தமக்குப் பயந்தவர்களுக்கு ஆகாரம் கொடுத்தார், தமது உடன்படிக்கையை என்றென்றைக்கும் நினைப்பார். ஜாதிகளின் சுதந் தரத்தைத் தமது ஜனங்களுக்குக் கொடுத்ததினால், தமது கிரியைகளின் பெலத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்தினார். அவருடைய கரத்தின் கிரியைகள் சத்தியமும் நியாயமுமானவைகள், அவருடைய கட்டளைகளெல்லாம் உண்மை யானவைகள். அவைகள் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களுக்கும் உறுதியானவைகள், அவைகள் உண்மையும் செம்மையுமாய்ச் செய்யப்பட்டவைகள். அவர் தமது ஜனத்திற்கு மீட்பை அனுப்பி, தமது உடன்படிக்கையை நித்திய உடன்படிக்கையாகக் கட்டளையிட்டார், அவருடைய நாமம் பரிசுத்தமும் பயங்கரமுமானது. கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம், அவருடைய கற்பனைகளின்படி செய்கிற யாவருக்கும் நற்புத்தியுண்டு, அவர் புகழ்ச்சி என்றைக்கும் நிற்கும். **- சங்கீதம் 111: 1-10**

**செம்மையானவர்களுக்கு இருளிலே வெளிச்சம் உதிக்கும்**

அல்லேலூயா, கர்த்தருக்குப் பயந்து, அவருடைய கட்டளைகளில் மிகவும் பிரியமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் சந்ததிபூமியில் பலத்திருக்கும், செம்மையானவர்களின் வம்சம் ஆசீர்வதிக்கப்படும். ஆஸ்தியும் ஐசுவரியமும் அவன் வீட்டிலிருக்கும், அவனுடைய நீதி என்றைக்கும் நிற்கும். செம்மையானவர்களுக்கு இருளிலே வெளிச்சம் உதிக்கும், அவன் இரக்கமும் மனஉருக்கமும் நீதியுமுள்ளவன். இரங்கிக் கடன்கொடுத்து, தன் காரியங்களை நியாயமானபடி நடப்பிக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் என்றென்றைக்கும் அசைக்கப்படாதிருப்பான், நீதிமான் நித்திய கீர்த்தியுள்ளவன். துர்ச்செய்தியைக் கேட்கிறதினால் பயப்படான்ளூ அவன் இருதயம் கர்த்தரை நம்பித் திடனாயிருக்கும். அவன் இருதயம் உறுதியாயிருக்கும், அவன் தன் சத்துருக்களில் சரிக்கட்டுதலைக் காணுமட்டும் பயப்படாதிருப்பான். வாரியிறைத்தான், ஏழைகளுக்குக் கொடுத்தான், அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும், அவன்கொம்பு மகிமையாய் உயர்த்தப்படும். துன்மார்க்கன் அதைக்கண்டு மனமடிவாகி, தன் பற்களைக் கடித்துக்கரைந்து போவான், துன்மார்க்கருடைய ஆசை அழியும். **- சங்கீதம் 112: 1-10**


**அவர் சிறியவனைப் புழுதியிலிருந்து தூக்கிவிடுகிறாா**

அல்லேலூயா, கர்த்தருடைய ஊழியக்காரரே, துதியுங்கள், கர்த்தருடைய நாமத்தைத் துதியுங்கள். இதுமுதல் என்றென்றைக்கும் கர்த்தருடைய நாமம் ஸ்தோத்திரிக்கப்படக்கடவது. சூரியன் உதிக்கும் திசைதொடங்கி அது அஸ்தமிக்கும் திசைமட்டும் கர்த்தருடைய நாமம் துதிக்கப்படுவதாக. கர்த்தர் எல்லா ஜாதிகள்மேலும் உயர்ந்தவர், அவருடைய மகிமை வானங்களுக்கு மேலானது. உன்னதங்களில் வாசம்பண்ணுகிற நம்முடைய தேவனாகிய கர்த்தருக்குச் சமான மானவர் யார்? அவர் வானத்திலும் பூமியிலுமுள்ளவைகளைப் பார்க்கும்படி தம்மைத் தாழ்த்துகிறார். அவர் சிறியவ னைப் புழுதியிலிருந்து தூக்கிவிடுகிறார், எளியவனைக் குப்பையிலிருந்து உயர்த்துகிறார். அவனைப் பிரபுக்களோடும், தமது ஜனத்தின் அதிபதிகளோடும் உட்காரப்பண்ணுகிறார். மலடியைச் சந்தோஷமான பிள்ளைத்தாய்ச்சியாக்கி, வீட்டிலே குடியிருக்கப்பண்ணுகிறார். அல்லேலூயா. **- சங்கீதம் 113: 1-9**

*தொடரும்...*

SHIVA SAI DURGA ASTROLOGICAL CENTER

Pandit: Kumara swamy





Most Powerful Spiritual Healer

We can Handle any Problem

25 வருடங்கள் அனுபவமுள்ள மற்றும் 8 தலைமுறைகளாக ஜோதிடம் பார்பவர்

உலகத்தில் சூரிய சந்திர நவக்கிரக மகிமையினாலே

இன்ப துன்பங்கள், நன்மை தீமை பற்றி விபரம் குறுவார்

Remove Black Magic, Witchcraft, Obeya, Evil Spirits

Bad Luck & Jadoo & Give 100%, Life Long Protection

கை பார்த்து. முகம் பார்த்து அருள்வாக்கு சொல்லப்படும். Photo பார்த்து

ஜாதகம் பார்த்து, குறிப்புப் பார்த்து ஆரோக்கியம், மனநிம்மதி, லக்சுமி கடாட்சம் கிடைக்கவும்,

இராசி, நட்சத்திரம் பார்த்து நடந்தது, நடப்பது, நடக்கப்போவது பற்றிச் சொல்லப்படும்.

செய்வினை கோளாறு, பேய்பிசாசு தொந்தரவா, எதிரிகள் தொந்தரவா, கண் திருஸ்டி,

நாகதோசம், காதல் விவகாரங்கள், தொழில், மனை அபிவிருத்தி, வாகனப் பொருத்தம்,

காதலர் ஒற்றுமை போன்றவற்றிற்கும், வேறு பிரச்சனைகளுக்கும் உடனடியாக

தீர்வு சொல்லப்படும்

எந்தப் பிரச்னையாக இருந்தாலும் 9 நாட்களில் தீர்வு காண்பார்

Are you depressed & Lonely? All Religions welcome. 100% Guaranteed Result

Call for Appointments/Walk ins Welcomed 647-766-9775

2607 Eglinton Ave E Scarborough, M1K 2S2,

UPSTAIRS ERRA MARKET, EGLINTON & BRIMLEY

# 22ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
06-08-1942

மறைவு:
21-04-1999

## அமரர். சதாசிவம் சிவலிங்கம்

(வேலணை வடக்கு சோழாவத்தை)
திதி:19-04-2021

வானத்து எழில் கொழியும் மாதமிரு மழை பொழியா மனதொத்த மக்கள் வாழ்ந்த மகிழம்பூ வாசநிறை
கானத்து பறவையினம் படமெடுக்கும் பாம்பெலாம் பறந்தோடி பரந்தோடி வாழ்ந்திடு நல்ல நல்மருந்தாய் கற்றாளை மர வளம்
கண்ட கவிநங்கை(வளவளப்பான உடல்வாகு) மகவீர் கலகலத்த
வேலது மண்ணின் சோழர் கடந்து சென்ற சோழாவத்தை மண்ணது மைந்தன் சதாசிவம் மணம் கண்டு அம்மையாம் மாணிக்கம்
மகிழ்ந்தே சிவனவன் அருள் கண்டு உதித்தாரே சிவலிங்கம் தானே... கண்ணன் நிறத்தான் கருவிழி மயிலோன்... மற்றோர் மனம்
காக்கும் மானிடத்து மரகத மனத்தோன்....
மண்ணதின் மருக்கொழுந்து மகாலட்சுமியவள் ராசலட்சுமி யை பூர்வ புண்ணிய பலனாய் மணமது கண்டே.... கயிலையவன்
மைந்தன் கடம்பனருளால்.. ஆறுடன் மூன்றாக ஆணும் பெண்ணுமாய் மகவுகளாய் கண்ணின் மணிகளே கண்டு மகிழ்வுடன் கடல்
கடந்தே கனடா வந்தாரே வனப்புடனே.
வந்தவர் வாழ்வில் சிறக்கையிலே மனதும் மகிழா மாயமொன்று கடந்ததே.
மக்கள் மனமகிழ மாயனாய் உழைத்த எம் குடும்ப கோலமகனை எங்கள் குடும்ப தலைவனாம் சிவ பக்தன் சிவலிங்கம்
அவரை..
நாடு கடந்து நான்காண்டு முடியுமுன்னே அந்தகக் காலன் கவர்ந்தானே மாயமாய் மறைந்தாரே எமை பிரிந்தாரே.
தொண்ணூற்றி ஒன்பதிலே.. மறக்குமோ.... இந்த மாமனித நேய மனிதரை... ஆண்டவா எம்முறவு எமை பிரிந்தே வருடமாய்
இருபத்தி இரண்டாச்சே... இனி என் செய்கோம்...எமக்கும் இதுவழி என்றாலும் இழப்பு எமக்கல்லவா.. எம்செல்வர்
சிவலிங்கம் அவர்களின் இருபத்திரண்டாம் நினைவது காண்பது மாதமாய் சித்திரை இருபத்தி ஒன்றாயினும்... மன்னன்
மறைவுற்ற நட்சத்திர காலம் கூடிவரும் சித்திரை பத்தொன்பதில்.. நினைவது சடங்கே நிறைவுற செய்திடுவோம்.... மன நிம்மதி
பெறவே... மண்ணது மக்களும் அவரது நினைவுறவே..வேலணையில். நம்மது. ஊரது மண்ணில்.. சைவபிரகாச வித்தியாசாலை
தனிலே பலர் கூடி உண்டி விரும்பியே உணவது உண்டிட வழி செய்கின்றோமே... இந்த வழி அவரது நினைவு நினைத்திட...
செய்தி கேட்டோரும்.. இன்ப நண்பர்களும் உற்ற உறவுகளும்.. ஏற்பீர்களே எம் உறவே...

தகவல்
மனைவி– இராசலட்சுமி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மொன்றியல் நகரில்
UTHAYAN உதயன்
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள்,
பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும்
அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS!
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
Peter Joseph
Legal Representative / Paralegal
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca

25ஆவது வெள்ளி விழா
2021 UTHAYAN
உதயன்

NEW CLASS STARTING
புதிய வகுப்புகள் ஆரம்பம்
Income Tax
Bookkeeping
(QuickBooks)
Sree
416.438.3350
Seyon Financial Services

உதயம் 1306 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday April 16, 2021

# PERMANENT RESIDENCY WILL BE GRANTED TO OVER 90000 ESSENTIAL TEMPORARY WORKERS AND INTERNATIONAL GRADUATES IN CANADA

# கனடாவில் தங்கியுள்ள 90000 அத்தியாவசிய தொழிலாளர்கள் மற்றும் சர்வதேச பட்டதாரிகள் நிரந்ததிர வதிவிட உரிமை பெறவுள்ளார்கள்



கனடாவில் தற்போது தங்கியிருந்து சுகாதார சேவைகள், வைத்தியசாலைகள் போன்ற அத்தியாவசியமான துறைகளில் தற்காலிகமாகப் பணியாற்றும் வெளிநாட்டவர்கள் மற்றும் சர்வதேச பட்டதாரிகள் ஆகியோர் அடங்கிய 90000 க்கும் அதிகமானவர்கள் விரைவில் கனடிய நிரந்தர குடியுரிமை பெறும் வண்ணம் அவர்களது விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படவுள்ளன. இந்த நடை முறையின் மூலம் கனடாவில் வைத்தியர்கள், தாதிகள், மற்றும் சு-காதார சேவையாளர்கள் போன்ற அத்தியாவசிய சேவைகளில் உள்ள வெற்றிடங்கள் அனைத்தும் நிரப்பப் பெற்று தகுதியானவர்களுக்கு நிரந்தர குடியுரிமை வழங்கப்பட்டு அவர்கள் மேலும் சலுகைகளைப் பெறும் வண்ணம் நகர்த்தப்படுவார்கள்.

*(உள்ளே விபரமான செய்தி 5ம் பக்கத்தில்)*



# தடுப்பூசி பற்றாக்குறை காரணமாக ஸ்காபாரோவில் இயங்கிவந்த இரண்டு தடுப்பூசி வழங்கும் சேவைகள் இன்று முதல் நிறுத்தப்பட்டுள்ளன

## — மாகாண அரசின் உறுப்பினர் விஜேய் தணிகாசலம் அறிவிப்பு



கோவிட்-19 தடுப்பூசி மருந்துகள் பற்றாக்குறை காரணமாக ஸ்காபாரோ சென்டனரி மருத்துவமனையிலும் சென்டனியல் கல்லூரியிலும் நடத்தப்பட்டு வந்த தடுப்பூசி வழங்கும் சேவை நேற்று 14ம் திகதி முதல் நிறுத்தப்படவுள்ளதானது மி-கவும் வருத்தமளிக்கும் விடயமாகும்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஸ்காபுறோ ரூஜ் பார்க் மாகாண அரசின் தொகுதி உறுப்பினர் திரு விஜேய் தணிகாசலம். அவரது அலுவலகத்திலிருந்து எமக்குக் கிடைக்கபெற்ற செய்திக் குறிப்பில் பின்வருமாறு தெரிவிக்கப்பெற்றுள்ளது.

“மேலும் விளக்கமாகக் கூறின், ஒன்ராறியோ மாநிலம் பெற்றுக்கொண்ட ஒவ்வொரு தடுப்பூசி சொட்டு மருந்தும் முன்பதிவு செய்து காத்திருக்கும் ஒன்ராறியோ மக்களுக்காக ஒதுக்கப்பட்டதாகும். ஒன்ராறியோ மாநில முன்பதிவுப் பொறிமுறை மூலம் மட்டுமே சுமார் 2.5 மில்லியன் முன்பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஒன்ராறியோ மாநில முன்பதிவுப் பொறிமுறையைப் பயன்படுத்தாது, மருந்தகங்களிலும் மருத்துவமனை சிகிச்சை மையங்களிலும் பொது சுகாதார பிரிவுகள் மூலமும் செய்யப்பட்ட முன்பதிவுகள் இதில் உள்ளடக்கப்படவில்லை. 48 மணி நேரத்திற்கு முன்னர் சுமார் 400,000 ஃபைசர் சொட்டு மருந்துகளை பெற்றுள்ளோம் என்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். நாட்டின் தடுப்பூசி வழங்கல் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதி செய்ய மத்திய அரசு பாடுபட்டு வருவதை நாம் அறிவோம். அதே-வேளையில் ஒன்ராறியோவின் தடுப்பூசி வழங்கலில் மிகப் பெரிய சவாலாக உள்ள விடயம் தடுப்பூசிகளின் சீரானதும் நம்பகமானதுமான விநியோக முறை ஆகும். எடுத்துக்காட்டாக, ஒன்ராறியோ மார்ச் 22ஆம் திகதியை ஒட்டிய வாரத்தில் மொடேர்னா தடுப்பூசி மருந்துகளைப் பெற்றுக்கொண்டபோது, அது முதலில் எதிர்பார்க்கப்பட்ட தொகையின் வெறும் 30 வீதம் மட்டுமே கிடைக்கப்பெற்றது. எமக்கான ஒதுக்கீட்டில் மீதமுள்ள 70 வீதம் - அதாவது 225,600 தடுப்பூசி சொட்டு மருந்துகள் - காலதாமதமாக உயிர்த்த ஞாயிறு வாரத்தையொட்டியே ஒன்ராறியோவுக்கு வந்தடைந்தன. இதுவரையும், அதாவது புதன்கிழமை அறிக்கையின்படி, ஏப்ரல் 5ஆம் திகதி எமக்குக் கிடைத்திருக்க வேண்டிய 303,000 மொடேர்னா தடுப்பூசி மருந்துகள் இன்னும் எங்களுக்கு வந்துதடையவில்லை. 19ஆம் திகதி எமக்கு வரவிருந்த ஏறத்தாழ 500,000 மொடேர்னா தடுப்பூசி சொட்டு மருந்துகளின் வருகை எதிர்வரும் 29ஆம் திகதிவரை தாமதமாகியுள்ளது.


ஸ்காபரோ வாழ் மக்கள் அனைவரினதும் கவனத்துக்கு: தடுப்பூசியை போட்டுக்கொள்வதற்கு உங்களால் முன்பதிவு செய்யப்பட்ட குறித்த நாள் பிற்போடப்பட்டுள்ளதானது உங்களை வெறுப்படைச் செய்திருக்கும் என்பதை நாம் அறிவோம். ஆகவே, மத்திய அரசிடமிருந்து மருந்துகளைப் பெற்றவுடன் கோவி-ட்-19 தடுப்பூசி வழங்கலை சரியாக நடைமுறைப்படுத்துவதற்கும், தடுப்பூசி போடும் மையங்களை விரிவுபடுத்தவும் நாம் தயாராக உள்ளோம் என்பதை உங்களுக்கு அறியத் தருகிறோம்.

இதேவேளையில், ஸ்காபாரோ வாழ் மக்களை, நகர சபையால் நடத்தப்படும் இரண்டு சிகிச்கை மையங்களுக்கும் ஒன்ராறியோ மாநில முன்பதிவுப் பொறிமுறையூடாக பதிவுகளை மேற்கொள்வதற்கு ஊக்குவிக்கிறோம்.

*மேலதிக விபரங்களுக்கு: தொலைபேசி எண்: 1-888-999-6488*

*விஜய் தணிகாசலம், மாநில சட்டமன்ற உறுப்பினர்.- ஸ்காபரோ - றூஜ் பார்க்.*

# கனடாவில் கியுபெக்கில் இரத்தம் உறைதலுக்கு ஒரு நோயாளி உள்ளாகியுள்ளார் என்கிறது மாகாண சுகாதாரத் துறை



கனடாவில் கியுபெக் மாகாணத்தில் முதல் முறையாக பெண் ஒருவருக்கு இரத்தம் உறைதல் பிரச்சனை பதிவாகியுள்ளதாக மாகாண சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தற்போது மக்களுக்கு செலுத்தப்பட்டு வரும் நான்கு வகையான தடுப்பூசி வகைகளில் , அஸ்ட்ராஜெனெகா தடுப்பூசி வகை செலுத்தப்பட்ட ஒருவருக்கே இந்த கனடாவில் அரிதான ஆனால் ஆபத்து நிறைந்த இரத்த உறைதல் பிரச்கனை முதல் முறையாக காணப்படுவதாகக் கூறப்படுகின்றது.

*(உள்ளே விபரமான செய்தி 7ம் பக்கத்தில்)*



# உலகில் வாழ்க்கைத்தரம், சமூக நீதி, விடயங்களில் சிறந்து விளங்கும் நாடுகளில் கனடா முதலிடம்

உலகில் வாழ்க்கைத்தரம், சமூக நீதி, பெண்கள் உரிமை என பல்வேறு விடயங்களில் சிறந்து விளங்கும் நாடுகளில் கனடா முதலிடத்தைப் பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எமது கனடா முதலிடத்தை அடைவதற்கு காரணங்கள் பல உள்ளன என்று சொல்லப்படுகின்ற இந்த நேரத்தில், சிறந்த நாடுகள் பட்டியலில் சுவிட்சர்லாந்தையே பின்னுக்குத் தள்ளி கனடா முதலிடத்தைப் பிடித்துள்ளது என்ற செய்தி கனடியர்களை மகிழ்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

(உள்ளே விபரமான செய்தி 7ம் பக்கத்தில்)

RE/MAX ACE REALTY INC. BROKERAGE
PUNCH
SOCKALINGAM
www.mlslistingtoday.com
Punch
Dir: 416.786.2463
BUY...SELL...LEASE...INVEST...

# ஈழமே ஒரு இனவழிப்புச் சிறையில் இருக்கிறது?

**கனடா உதயனுக்காக தீபச்செல்வன்**



ஈழ இறுதிப் போரில் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக அவர்களின் உறவுகள் தெருத்தெருவாக போராடி வருகிறார்கள். போர் முடிந்து பன்னிரண்டு வருடங்கள் ஆகின்றன என்றால், அவர்கள் தெருக்களில் இருந்து போராடத் துவங்கி பன்னிரண்டு வருடங்கள் ஆகின்றன. போரில்காணாமல் ஆக்கப்பட்ட தம் உறவுகளை தேடிப் போராடியே இந்த உறவுகளும் காணாமல் போய்விடுகின்ற கதைகளும் நடக்கின்றன. இன்றைக்கு ஊடக வெளிச்சத்தில் தெரியாமலே இவர்களின் கதைகள் தொடர்கின்றன.அண்மையில்கூட கிளிநொச்சியில் காணா-மல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் நீதிக்கும் உண்மைக்குமானஒரு அடையாளப் போராட்டத்தை மேற்கொண்டார்கள். *(உள்ளே விபரமான கட்டுரை 12ம் பக்கத்தில்)*